ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" — "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" — "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—௬. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ மாசி௴ ௧௮௳ (1-3-36) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—௫௫.

## தோத்திரம்

ஆதிக்க நல்கினவ ராரிந்த மாயைக்கென் அறிவன்றி யிடமில் லையோ
அந்தரப் புஷ்பமுங் கானலின் நீருமோர் அவசரத் துபயோ கமோ
போதித்த நிலையையும் மயக்குதே அபயம்நான் புக்கஅருள் தோற்றி டாமல்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென் புந்திக்குள் இந்த்ர சாலஞ்
சாதிக்கு மேயிதனை வெல்லவும் உபாயநீ தந்தருள்வ தென்று புகல்வாய்
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த சமரசநிர் வாக நிலையும்
மாதிக்கொ டண்டப் பரப்பெலாம் அறியவே வந்தருளு ஞான குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே.

—தாயுமான சுவாமிகள்.

# எனது மனப்போக்கு.

[சாமி சிதம்பரனார்]

1. மனம்போன போக்கெல்லாம் போயுண்மை காண்போம்!
தினமும்வளர் சுகநதியில் திளைத்து மகிழ் பெறுவோம்!

2. வானகத்தே பறந்துமகிழ் பறவையினம் போலே
ஞானம்வரும் இடமெல்லாம் மனக்குருவி விடுப்போம்

3. கட்டிவைத்த நீர்தனிலே காணும்பல பூச்சி
எட்டியடி வைப்பவரை இம்சை செயும் அவையே.

4. இட்டமுறும் படியெல்லாம் ஏகவிடா அறிவே
சட்டாயம் நாசமுறும் காண்பதையும் கெடுக்கும்!

5. நதிவழியே விரைந்தோடும் நன்னீரால் யார்க்கும்
மதிமகிழும் படிநன்மை கிடைக்குமென அறிவீர்!

6. புதியபல செயல்களிலும் புகுந்துழைக்கும் அறிவே
அதிகநலம் புரிந்திங்கே ஆதவன்போல் விளங்கும்.

7. செழித்துவளர் முளைமீதே நிழல்மூடி வளர்ச்சி
அழித்துவிடும் செயல்அறிவீர் அறிவையடக் காதீர்!

8. காவியத்தில் மனஞ்சென்றால் கட்டிவிட வேண்டாம்
ஓவியத்தில் போம்மனதை ஒடுக்கிவிட வேண்டாம்;

9, அழகென்னும் கடல்தனிலே மனமூழ்க விடுவீர்
பழகுசுவைக் கவிதைவனம் மனந்திரியச் செய்வீர்.

10. காதலிலே புகும்அறிவைக் கடிதல்அறம் அன்றே
மாதர்தமை இழிவுசெய்யும் மனதை அழித்திடுவீர்!

11. உலகின்பம் தீதெனவே உரைக்கும் "பெரியோர்கள்"
நலமறியார், பேதையர்கள் என்றுணர்வீர் அறிவால்.

12. "மனவடக்கம்" மடவளர்ச்சி இதையறியாப் "பெரியோர்"
கனவுகண்டே மனமுடைந்து மாந்தார்என் றறிவீர்!

13. ஒருவழியில் அறிவுசெலல் வேண்டுமென்றே சொல்வோர்
அரியகலை பலகாணும் அறிஞர்அலர் காணீர்!

14. பலர்பழகும் படித்துறையில் பாசிபிடி யாதே
உலவிவரும் மனமிங்கே உயர்நிலையில் உறையும்.

15. அடங்காத மனச்சிங்கந் தனையடக்கி வீணே
கிடந்தழிதல் வேண்டுமெனும் கிழவர்மொழி தகர்ப்போம்

16. அஞ்சாத மனமுடனே அறிவுபலங் கொள்வோம்!
நெஞ்செங்கும்செலச்செய்வோம்நேர்பொருள்கள்கொள்வோம்

17. சிறந்துயரும் இயற்கைதனைச் சிதைத்தல்அழ கன்றே!
"குரங்குமனம்" எனக்கூறும் குறிப்பறிதல் நன்றே!

18. முன்னோர்கள் மொழிநம்பி நடத்தல்நலம் என்றே
பன்னுமொழி தனையறிவால் பகுத்தறிந்து வாழ்வோம்.

"கவிதாமண்டலம்."

முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே, சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே.

சுப்பிறீங்கோட்டு விசாரணை

## வரணி, வல்லி - கந்தன் கொலை வழக்கு.

### 1-ம் 2-ம் எதிரிகளுக்குத் தனித்தனி 10 வருடம்.

சென்றகிழமை யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் வரணியைச்சேர்ந்த கரம்பக்குறிச்சி என்னுமிடத்தில் (1) S. கந்தன், (2) V. கந்தன், (3) V. சின்னத்தம்பி, (4) N. வேலன், ஆகியவர்கள் V. வல்லி-கந்தனைக் கொலை செய்த வழக்கு விசாரிக்கப்பட்டு 1-ம் 2-ம் எதிரிகட்கு தனித்தனி 10 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

### வரணி அருணாசலத்தைத் தட்டிவீழ்த்திய மீன்கார்.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் சென்ற ஆவணிமாதம் 14-ந்திகதி வரணியைச்சேர்ந்த காம்பக்குறிச்சி என்னுமிடத்தில் முத்துவேலு அருணாசலம் என்பவர் ஓர் சயிக்கிளில் கொடிகாமமிருந்து பருத்தித்துறைக்குப் போகும் றோட்டில் யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்கு மீன் அனுப்பும் நிலவீரகிறிஸ்அப்பு என்னும் மோட்டார்ச்சாரதி அவரை (அருணாசலத்தை)த் தட்டிவீழ்த்திக் காயப்படுத்திக் கொன்றார் என்ற வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் சார்பாக முடிக்குரிய நியாயவாதி வீரசூரியாவும் எதிரி சார்பாக ஸ்ரீ S. D. தம்புவும் வாதித்தனர்.

வேலாயுதர் சிற்றம்பலம் கூறிய சாட்சியமாவது :— "சென்ற ஆவணி மாதம் 14-ந் திகதி நான் எனது வீட்டிலிருந்து இடைக்குறிச்சிக்கு எரு ஏற்றிச் சென்றேன். அன்று இரவு 7 மணியளவில் இறந்த அருணாசலம் ஓர் துவிச்சக்கரத்தில வந்தார். அவர் எதிர்ப்புறமாக வந்தவர். அவர் வந்து என்னை விலத்தினர், கொஞ்சநேரத்தின்பின் ஓர் சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது ஓர் காரின் வெளிச்சம் கண்டேன். கண்கள் கூசியதால் யாதும் பார்க்கமுடியாமலிருந்தது. கார் "கோன்" அடிக்காது எனது வண்டிலை வந்து விலத்திச் சென்றது. இந்தக் கார்க்குள்ளும் வெளியிலும மீன் பெட்டிகள் இருந்தன. எனக்கு ஒருமுறைதான் சத்தம் கேட்டது. நான் எனது மாடுகளை மறித்துவிட்டுப் பார்க்கவில்லை ஏன் என்றால் எனது மாடுகள் வீட்டைநோக்கிச் செல்லும்போது ஆளில்லாமல் சும்மா மறித்துவிட்டால் நிற்கமாட்டா என்பதினாலேயே. மறுநாள்காலைநான் அந்த வழியால் வண்டியுடன் போகும்போது சனங்கள் கூட்டமாய் நின்றார்கள். நான் அப்போது என்ன என்று கேட்டபோது அவர்கள் கார்தட்டி இவரை விழுத்திவிட்டது என்றார்கள். அது அந்த நடனமாதர்களை ஏற்றிய கார் என்றார்கள். நீதிபதி அது நடனமாதர்களை ஏற்றிய காரல்ல மீன் ஏற்றிய கார் என்றார்." வழக்கு விசாரணை நடக்கிறது.

### கவுன்சிலால் வேலையை இழந்தனர்

கொழும்பிலுள்ள ஒரு கம்பெனியில் வேலைபார்க்கும் இருவர், காரியாலயத்தில் வேலைசெய்துகொண்டிருக்கும்போது பொதுத்தேர்தல் முடிவைப்பற்றித் தர்க்கஞ் செய்தவிடத்துக் கைகலந்து சச்சரவிட்டனர். சச்சரவினால் இருவரின் சட்டைகளும் கிழிந்துவிட்டன. இதனால் அவர்கள் இருவரும் கம்பனி வேலையினின்றும் நீக்கப்பட்டனராம்.

### தாமதமாம்

ஹூஷேன் நகரில் பண்டிதர் ஜவஹாலால் நேரு அவர்கள் தமது பாரியாருடன் வசிக்கின்றனர். இந்தியாவுக்குச் சடுதியில் திரும்புவாரென முன்னர்ப்புதினங்கள் கூறின. இப்போது இவர் பாரியாரின் தேகாரோக்கியம் நல்லாயில்லாமையால் இன்னும் பத்து நாட்களின் பின்னரே இந்தியாவுக்குப் புறப்படுவாரெனச் சொல்லப்படுகிறது.

### சதுப்பு நிலங்கள்

கொழும்பிலுள்ள சதுப்பு நிலங்களை மண்போட்டு நிரப்பும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. முகத்துவாரத்திலுள்ள கப்பல் பழுதுபார்க்குமிடத்தில் கிடைக்கும் மண்ணைக்கொண்டு புளுமென்றால் சதுப்பு நிலத்தை நிரப்பும்வேலை முதன்முதலாகத் தொடங்கப்பட் டிருக்கிறது, இத்திட்டம் சம்பந்தமான வேலைகள் யாவும் முடிவடைய ஒருவருடமாகுமெனத் தெரிகிறது.

### பூட்டிய அறைக்குள் இரு பிரேதங்கள்.

திருச்செந்தூரைச்சேர்ந்த சேரிட்டைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பூட்டப்பட்டிருந்த ஓர் அறைக்குள் இரு பிரேதங்கள் காணப்பட்டன. இறந்தவர்கள் நாகர்கோயிலைச்சேர்ந்த 32 வயதுடைய கோபாலகிருஷ்ணபிள்ளையும், அவருடைய மனைவியாகிய 22 வயதுடைய பெண்ணும் எனத் தெரிகிறது. இவர்கள் சென்றகிழமை திருச்செந்தூருக்குச் சென்று ஒரு அறைக்குள் புகுந்து அறையைப் பூட்டிவிட்டு நஞ்சையுண்டு தற்கொலை செய்துகொண்டனரெனக் கூறப்படுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. T 8200

வண்ணார்பண்ணை கிழக்கு இராமலிங்கம் கைம்பெண் பொன்னம்மா.

தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் T 8200-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளில் 11-ம் காணி 1936-ம் ஆண்டு பங்குனிமீ 28-ம்வ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கமும் மிகுதிக்காணிகள் 1936-ம் ஆண்டு பங்குனிமீ 28-ம்வ சனிக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை இறை "பெரியபிள்ளை வெள்ளடையும் பெரிய பிள்ளையார் வெள்ளடையும்". நெற்பரப்பு $20\frac{1}{4}$ம் பனைகளும். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குடையவாதனம், வடக்கு பொன்னப்பா சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்குமுடையவாதனம், மேற்கு தம்பிஅப்பா கைம்பெண் செல்லாச்சிக்கும் பங்காளருக்குமுடையவாதனம், தெற்கு குளம். இதனடங்கலில் சொரியலாய் நெற்பரப்பு 10ம்.

(2) ஷ இறை "பெரியபிள்ளை வெள்ளடையும் பெரியபிள்ளையார் வெள்ளடையும்" நெற்பரப்பு $20\frac{1}{4}$ ஆட்சிப்படியும் படத்தின்படியும் நெற்பரப்பு 22ம் பனைகளும். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குடையவாதனம், வடக்கு பொன்னப்பா சோமசுந்தரத்துக்குடையவாதனம், மேற்கு விற்பனவுகாரிக்குடையவாதனம், தெற்கு குளம் இதனடங்கலில் சொரியலாய் அரைவாசியும்.

(3) ஷ இறை "கட்டுவன்காடு" நிலப்பரப்பு 45-ம் அதற்குட்பட்டவைகளும். றோட்டுக்கெடுபட்டநிலம் புறநீங்கலாக, எல்லை கிழக்கு சதாசிவம் சங்கரப்பிள்ளைக்குடையவாதனம், வடக்கு சுப்பிரமணியர் ஆறுமுகத்துக்கும்பங்காளருக்குமுடையவாதனம், மேற்கு சுப்பிரமணியர் சரவணமுத்துவுக்கும்பங்காளருக்குமுடையவாதனமும் பூதத்தம்பி நாகமுத்தருக்கு முடையவாதனமும், தெற்கு சுப்பிரமணியர் விசுவநாதர் இளையதம்பிக்கும சதாசிவம் சங்கரப்பிள்ளைக்குமுடையவாதனம். இதில் நிலப்பரப்பு 15ம்.

(4) ஷ இறை "கட்டுவன்காடு" நிலப்பரப்பு 30ம் அதற்குட்பட்டவைகளும் றோட்டுக்கெடுபட்ட நிலம் புறநீங்கலாக. எல்லை கிழக்கு சுப்பர் மகள் சிவகாமிக்குடையவாதனம், வடக்கு சுப்பிரமணியர் ஆறுமுகத்துக்கும் பங்காளருக்குமுடையவாதனம், மேற்கு சுப்பிரமணியர் ஆறுமுகத்துக்கும பங்காளருக்கும் சுப்பன் விசுவனுக்கும் பங்காளருக்குமுடையவாதனம், தெற்கு ஆறுமுகம் சுப்பிரமணியருக்கும், விசுவநாதர் இளையதம்பிக்கும், சதாசிவம் சங்கரப்பிள்ளைக்குமுடையவாதனம். இதில் நிலப்பரப்பு 15ம்.

(5) ஷ இறை "விளாப்புவயலும் பெரியபள்ளம்வயலும்" நெற்பரப்பு 6 குளி $8\frac{1}{8}$. எல்லை கிழக்கு முத்தன் மகள் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு கதிரேசு வேலுப்பிள்ளைக்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுடையவாதனம், மேற்கு நாகப்பர் துரையப்பாவுக்கும், விஞசித்தம்பி குழந்தைவேலுவுக்கும் மறுபேருக்கு முடைய வாதனம், தெற்கு முத்தன் மகள் செல்லாச்சிக்கும், சுப்பிரமணியர் கைம்பெண் பாறுபதிப்பிள்ளைக்குமுடையவாதனம். இதனடங்கலும்.

(6) ஷ இறை "பெரியபள்ளம்புலம்" நெற்பரப்பு $7\frac{3}{8}$. எல்லை கிழக்கு சுப்பிரமணியர் ஆறுமுகத்திற்குடையவாதனம், வடக்கும் மேற்கும் கந்தையாபெண் சிவக்கொழுந்துவுக்குடையவாதனம். தெற்கு கார்த்திகேசு பெண் சின்னப்பிள்ளைக்குடையவாதனம். இதனடங்கலும்.

(7) ஷயிறை "பன்றிக்குனின்றனும் மறு பிரிவுகளும், ஆத்தினின்ற மயிலாப்புலமும்" நிலப்பரப்பு 15. குளி $10\frac{1}{4}$ எல்லை கிழக்கு பொன்னப்பா சோமசுந்தரத்துக்கும், நல்லதம்பி முத்துக்குமாருவுக்குமுடையவாதனம். வடக்கு முத்தையா பெண் செல்லாச்சிக்கும், ஆறுமுகம பெண் நாகமுத்துவுக்குமுடைய வாதனம். மேற்கு பொன்னப்பா சோமசுந்தரத்துக்குரிய வாதனம். தெற்கு விற்பனவுகாரிக்குடையவாதனம். இதனடங்கலில் சொரியலாய் அரைவாசியும்.

8. ஷ யிறை "பெரியபிள்ளையார் வெள்ளடை" நெற்பரப்பு 14 குளி $1\frac{1}{2}$ யும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு விற்பனவுகாரிக்குடைய வாதனம். வடக்கு பொன்னப்பா சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்குமுடையவாதனம். மேற்கு சுப்பிரமணியம் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் தாமோதரம் கைம்பெண் சின்னத்தங்கத்துக்குமுடைய வாதனம். தெற்கு குளம் இதனடங்கலும்.

9. ஷ இறை "கல்லடைப்பன்" நிலப்பரப்பு 10-ம் அதைச்சேர்ந்தவைகளும்.

10. ஷ இறை "சபாபதிஅடைப்பு" நிலப்பரப்பு 10-ம் அதைச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு இளையவன் பெண் கதிராசிக்கும் பங்காளருக்குமுடையவாதனம், வடக்கு சதாசிவம் சங்கரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு வேலுப்பிள்ளை பெண் தெய்வானைப்பிள்ளைக்குடையவாதனம். தெற்கு மயில்வாகனம் பெண் கதிராசிப்பிள்ளைக்குடையவாதனம் இதனடங்கலும்.

(11) ஷயாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "பனிக்கன்வளவு" நிலப்பரப்பு $4\frac{1}{2}$யும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சண்முகம் இராசையாவின் உரிமைக்காரருக்குடையவாதனம், மேற்கு சங்காப்பிள்ளை சபாபதிக்குடையவாதனம், தெற்கு இராமலிங்கம் பெண் பொன்னம்மாவுக்குடையவாதனம். இதனடங்கலும்.

Jaffna, 28th Feb. 1936.

V. K. Chinnathamby
Commissioner & Auctioneer

(92) 1-2-36—1


## வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய
**புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி, வகுப்புகளுக்கும்
உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு !
கருத்தைக் கவரும் உயரிய விளக்கம் ! !

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில்
வெளிவந்ததேயில்லை.

**பிரதி விலை ரூபா ஒன்று.**

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :-
வட இலங்கா புத்தகசாலை,
பருத்தித்துறை. (Point Pedro)

(64) 5-1-36.



## மாடு சிறக்க நாடு சிறக்கும்

நாட்டு மாடுகளை நாம் விருத்திசெய்யவேண்டும்!
நாட்டுமக்கள் பாலை அதிகமாக அருந்தவேண்டும் !
உயிரும் எலும்பும் கூரிய குண்டியுமுள்ள ஊர் நாம்பன்களை
ஒருபோதும் உபயோகிக்கவேண்டாம் !
நல்ல இனமுள்ள காளைகளை (Stud Bulls) உபயோகியுங்கள் !!

இதற்காக, நீர்வேலிக் கிராமச்சங்கப் பொறுப்பில்
ஓர், சீர்மைக் காளைமாடு (Stud Bulls) நிற்கிறது.
கமக்காரருக்கு ஒரு நல்ல தருணம்!
நல்ல அழகான மிருகம் !! நல்ல தேகபுஷ்டியுள்ளது !!!

கன்று { நாம்பனானல் வடகரை மாடுபோல விலையுளதாகும்.
நாகானல் போதும்போதுமென்னப் பால்பொழியும்.

உபயோகக் கட்டணம் ரூபா ஒன்றேயாம்.

(84) 9-2-36-4.

**பத்திரக்கிரயம்**

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 7.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ காற்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—௯. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ மாசி௴ ௧௮௳ (1-3-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௩௩


## இராமலிங்கசுவாமிகள் நிலையும் வாழ்க்கை வரலாறும்

[16-2-36ல் ஆகாயவசனி நிலையத் தானத்(வெளிச்சொற்கருவி நிலைய)தில் தமிழ்ப்பண்டிதர் வண்ணை நே. வை. செல்லையா அவர்களால் பேசப் பட்டது.]

(முற்றொடர்.)

இதுகாறும் சிவநேசவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கிதமாலை முதலிய பிரபந்தங்கள் பாடினர். இக்காலத்தில் உற்றார் உறவினருடைய நெருக்கத்தால் அக்காட்டு வழக்கப்படி தமக்கை மகளாரைத் திருமணஞ்செய்து நிஷேதி முகூர்த்தஞ்செய்து கூட்டிவிட்ட நாள்முதல் சரீரசம்பந்தமின்றியும் உறக்கமின்றியும் திருவாசகத்துடன் இரவினைக்கழித்துச் சிவத்தியானத்தில் காலங்கழித்து வருதலைநோக்கி அவர்களும் அப்பற்றுநீக்கி ஒதுங்கினர். (இதன்முன் இவர்பால் பல அற்புதச்செயல்கள் நடந்தனவாகச் சரிதமூலம் தெரிகிறது. அந்நிலையில் மணஞ்செய்வித்தோர் அறியாது செய்ததும், இவர் சம்மதித்துச் செய்துகொண்டதும் காரணந்தெரிகில்) பின்னர் ஒருகாள் ஒற்றியூர்க்குப் பல அன்பர்களுடன் செல்லும்போது பெரு மழையால் வருந்தி ஒரு சத்திரத்தில் பசியால் வாடி அயர்ந்தபோது, அம்மன் அன்னம் கொண்டுவந்து கொடுத்துப் பசியாற்ற, அவரால் கூடவிருந்தவர்களும் பெற்றுப் பசிநீங்கி யின்புற்றனர் என்றும் அதனால் "வடிவுடை மாணிக்கமாலை" என்னும் நூல் பாடப்பட்டது என்றும் சரித்திரம் கூறுகின்றது. ஆனால் அம்மாலையில் அது குறிப்பிடவில்லை. பெரும்பாலும் பிள்ளைப்பெருமான் தம் சரித்திர நிகழ்ச்சிகளை நூலகத் தாங்காங்கு குறித்துப்பாடியிருக்கின்றார்.

நெஞ்சறிவுறுத்தலில் "அன்றொருநாள் நம்பசிகண் டந்தோதரியாது—நன்றிரவிற் சோறளித்த நற்றாய் காண்" என்று கூறியிருக்கின்றார். மாலைநூல் அதற்காகச் செய்யப்பட்டதாயின் இக்குறிப்பு அதனில் வந்திருக்கும். பின்னர் விபூதிகொடுத்துப் பலருக்குத் தீராத நோய்களைத் தீர்த்தனர். பாரிடம் பற்றிய பலர்க்குத் திருநீறு கொடுத்துப் பாரிடம்விட்டு நீங்குமாறு செய்தனர். இவ்வாறு பலவற்புதங்களைச் செய்துகொண்டிருக்கு நாளில் சிதம்பரம்போக ஆர்வமுற்று அங்குநின்று நீங்கிப் பலதலங்களைத் தரிசித்துக் கொண்டு மதுரையையடைந்தனர். அதன்பின் கருங்குழியென்னுங் கிராமத்தில் வந்துசேர்ந்து வெங்கட ரெட்டியாருடைய வேண்டுகோட்கு இசைந்து அங்குதானே அநேகநாட்கள் தங்கினர். (இதனால் கருங்குழி இராமலிங்கபிள்ளையென அழைக்கப்பட்டனர் போலும்.) இவ்வாறு அவரை உபாசனாமூர்த்தியாகக்கொண்ட காரணப்பட்டு ஸ்ரீமாந். கந்தசுவாமிப் பிள்ளையவர்கள் அவர் சரித்திரம் எழுதியிருக்கின்றார். 1910ல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று வெளிவந்திருக்கும் ஆ. சிங்காரவேலு முதலியார்செய்த "அபிதான சிந்தாமணி"யில் செங்கற்பட்டுஜில்லாவிலுள்ள கருங்குழியென்னுங் கிராமத்தில் இராமலிங்கபிள்ளை பிறந்தார். "திருவருட்பா" என்னும் தோத்திரப்பாமாலை செய்தார். துறவி, சாதியிற் கருணீகர் என்று கூறப்பட்டிருக்கிறது. வேறெவ்விதமான அவர் செயலொன்றும் கூறப்படவில்லை. செங்கற்பட்டுஜில்லா தொண்டைமண்டலத்திலுள்ளது. சென்னைக்குச் சமீபத்தில் இருக்கிறது. அதனால் கருங்குழியும் அங்கே ஏற்படுகிறது.

பிள்ளைப் பெருமான் சரித்திரங்களைப் பிழையறப்பரிசோதித்து அவர்கள் வாழ்க்கைவரலாற்றை அறிந்த ஒருவரால் அவரது சரிதம் எழுதப்பட்டு 1924ல் தி. நா. முத்தையாச்செட்டியார் அவர்களால் சிறந்தமுறையில் அச்சிட்டு வெளிவந்திருக்கும் "திருவருட்பா" நூன்முகத்தே சிதம்பரத்துக்குக் காததூரத்தே யுள்ள மருதூரென்னும் ஊரில் பிறந்தாரெனத் தெரிகிறது. அதில் தானே மதுரையை யடைந்தபின் கருங்குழியில் வந்து தங்கினர் என்றும் அப்போது வயது கசு-ன் மேலாகவும் தெரிகிறது. இவ்விருவகையில் எது சரியென்பது தெரிகில. மிகச்சமீபகாலத்தில் இருந்த சரித்திரத்திற்குள்பட்ட பெரியாரொருவருடைய பிறந்தவிடமே தடுமாறுமானால் அவர் சரித நிகழ்விற்சங்கைபுகுதல்சகஜமே. இவ்வாறிருக்கும்போது சேய்மைப்பட்ட பிறர் சரிதையைக்கேட்பானேன்.

நமது நாட்டில் கவிவாணர் சரிதம், ஞானிகள் சரிதம், கலைவாணர் சரிதம் முதலியன அவரவர் சீவியகாலத்திலேனும், அண்மையிலேனும், நாட்பட்டேனும் நடுநிலை திறம்பாது உள்ளதை யுள்ளபடி எடுத்துக் கூறித் தேசசரித்திரம் எழுதும் வித்தகர்கள் இல்லவே இல்லையென ஓர் ஏகாரங் கொடுத்துக் கூறினும் இழுக்கின்று. உதாரணமாக ஒன்றை எடுத்துக் காட்டுகின்றேன். பழமைகளை ஆராய்ந்து உண்மைச் சரித்திரத்தையும், காலத்தையும் வரையறுத்து ஆராய்ச்சி யுலகுக்கு அளித்துவரும் அறிஞர் மிகுந்த இக்காலத்தில் சேர். இராமநாதன் முதலிய பல கனவான்களுடைய அணிந்துரைகளைக் கொண்டு 1930-ல் வெளிவந்திருக்கும் "மேன்மக்கள் சரித்திரம்" என்னும் நூலில் பல சரித்திரங்களிலும், நூல்களிலும், சொற்பொழிவுகளிலும் பேசப்பட்டவரும், சீவந்தராய் இருப்பவரும், தமிழ்நாடு முழுமையும் தெரிந்தவருமாகிய ஆறுமுகநாவலர் அவர்களுடைய தமையனார் மகனாகிய த. கைலாயபிள்ளை அவர்களை நாவலர் அவர்களுக்கு மருகர் என எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு நூற்றாண்டு கழிந்தால் நாவலர் அவர்களிலும், கைலாயபிள்ளை அவர்களிலும், அவர்கள் செய்த தமிழ்த் தொண்டுகள் நூல்களிலும் பெரிய சொற்போர் நிகழாமல் விடமாட்டாது. பிரசித்திபெற்ற சின்னத்தம்பிப்புலவர் காலநிச்சயத்தைப் பற்றிய தலைவிடி அறிஞரிடையே இன்னும் மாறவில்லை. இன்னும் அநேகர் சரித்திரங்களிலும் இன்னூலில் பிறழ்வுளதை அறிந்தோர் காண்பர். நூல்களில் பிழை மலிவதற்கு முதற் குற்றவாளிகள் அணிந்துரை கொடுக்கும் வித்துவான்களே. இவர்களே சரித்திரவுலகைத் தடுமாறச் செய்கின்றார்கள். கைபிழைபாட்டுக் குற்றம் மக்கள்சரித்திரம், தேசசரித்திரம் முதலியவற்றிற்குக் கிடையாது. அத்தகையினர் அவற்றிற் கைபிடுதல் கூடாது. இதுநிற்க, எழுதப்பட்டிருக்கும் அநேகர் சரித்திரங்களிற் பெரும்பாலன பற்றாலும், உரிமையாலும், சிநேகத்தாலும், பொருளாலும், வேறு சில காரணங்களாலும் குன்றிமையை மேருவாக்கியும், குடிசையைக் கோபுரமாக்கியும் உயர்வு நவிற்சியணியாக்கி மெழுகிட்டுக் கூறியிருப்பதை ஆராய்ந்தறிவோர் காண்பர். எவ்வாறாயினும் ஒவ்வொன்றிலும் ஓரளவுக்கு உண்மையில்லாமலுமில்லை. சின்னாள் முன் ஓர் பெரியாரைப்பற்றி இந்நகரிற் சொற்பொழிவு நடந்தபோது "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேனெனப் புகன்று நண்ணரிய சிவாநந்தஞான வடிவேயாகி யண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர செய்தினார்" என்று கூறப்பட்ட பரமுத்தியடைந்த சீவன் முத்தராகிய திருநாவுக்கரையர் மீண்டும் வேளாண்குலத்தில் பரசமயங் கடியத் திருவவதாரஞ் செய்தார் என ஓர் வித்துவான் புகழ்ந்து கூறினார். கூறப்படுவோர் அறிவு செயல் பண்புகளில் மிக்கவராயின், காலஞ்செல்லச் செல்ல அவைகள் அற்புத தெய்வீக நிலைக்குச் சென்றுவிடுதல் இயல்பு. பிறர் நல்வழிப்பட்டுக் கடைத்தேறுதற்கு இவைகளும் சாதனமாய் நலம் பயக்குமெனக் கொண்டு பெரியோர் போற்றிக் கோடல் வழாநிலையாயிற்று. "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்" என்பது நீதிவாக்கியமன்றோ!

இனிப் பிள்ளைப்பெருமான் கருங்குழிக் கிராமத்தில் பதினறுஆண்டு வரையும் விளங்கியிருந்தார். பின்பு பல தலங்களைச் சென்று தரிசித்து வடலூர்ப் பெருவெளியில் தருமச்சாலை யமைத்து அன்னமளித்து வந்தார். இவ்வாறிருக்கும்போது இவராற் பாடப்பட்டவற்றைத் தொகுத்துப் புதுவை—வேலுமுதலியார் என்பாரும் பிறரும் திருவருட்பா எனப் பெயரிட்டு அக்ஷயவருடத்தில் அச்சிட்டனர். அதில் திருவருட்பிரகாசவள்ளலார் என ஆக்கியோன் பெயர் பொறித்துள்ளதைப் பிள்ளைப்பெருமான் கண்டு வெறுப்படைந்து அவ்வாறிட்டதற்குப் பொருள் "திருவருட்பிரகாச வள்ளலே ஆர் என்று தேடும் சிதம்பரம்—இராமலிங்கபிள்ளை" என்று பொருள் கூறினர் என்ப. திருத்தணிகைப்பதிகங்களை ஐந்தாந் திருமுறையாகப் பின்னர் அச்சிட்டனர். ஏனைய பாடல்களை ஆறாந்திருமுறையாக அமைக்கப்பட்டது. திருவருளை வேண்டிப் பாடப்பட்ட பாடல், திருவருளைக் கொடுக்கும் பாடல், திருவருளால் பாடப்பட்ட பாடல், திருவருளின் பெருமையை அறிவிக்கும் பாடல், திருவருளுக்கு உரிய பாடல் எனப் பல தொகையாற்றலால் அமைந்த பெயர்கொண்டு "திருவருட்பா" என இவர் பாடலுக்குப் பெயரிட்டு வழங்கிவருகிறது. இவராற் செய்யப்பட்டனவாகக் கூறும் அற்புதங்கள் பலவற்றை இவரது சரிதையிற் பரக்கக் காணலாம். இவரது பாடற்றொகையாகிய திருவருட்பாவில் எவ்விடத்தை நோக்கினும் அன்புமயமான நிலையினையே காணலாம். படிப்போரது கருவிகரணங்களை அசைவறச் செய்யும் ஆற்றல் மிகுதியுமுண்டு. இத்தன்மை வாய்ந்த செய்யுட்களையே அறிஞர் உயிர்ப்பாட்டென்று கூறுவர். "உலகெலாம்" என்னும் பெரியபுராண அருள்வாக்குக்கு 2,202 உலகங்களை எழுதி விரிக்கிற் பெருகும் என முடித்திருக்கின்றார். திருவருட்பாவில அருள் என்னும் மொழி ௩௱௩௮ முறை வந்திருக்கின்றன. தேவார திருவாசகத்திலும் நாயன்மாரிடத்தும் மிகுந்த பக்தியுடையவர்.

"சேல்வருங் கண்ணியிடத் தோய்நின் சீர்த்தியைச் சேர்த்துயர்ந்த, நால்வருஞ் செய்தமிழ் கேட்டுப் புறத்தினடைக் கசற்றேற, கால்வரு மாயினு மின்புருவாகிக் கனிமனமப், பால்வரு மோவதன் பாற்பெண்களை விட்டுப் பார்க்கினுமே."

எனத் தேவார திருவாசகங்களின் சிறப்பைக் கண்முன் காட்டுவதுபோல் விளக்கியிருக்கின்றார். இவ்வாறு எவரும் நயம்பட எடுத்துக் காட்டவில்லை. "அருட்பிரகாசமாலை"யில் இறைவன் ஒருநாள் இரவில் வந்து கதவு திறப்பித்துத் தனது கையிலே ஒரு பொருளைக் கொடுத்துக் கலங்காதே என அருளிச்செய்து மறைந்ததாக நூறு செய்யுளிலும் கூறுகின்றார். நால்வர் மீது செய்திருக்கும் "அருண்மாலை"ப் பாக்கள் இன்ன தன்மைத்தெனக் கூறுந் தரத்தனவன்று.

"தேன்படிக்கு மமுதாமுன் றிருப்பாட்டைத் தினந்தோறும், நான்படிக்கும் போதென்னை நானறியே னெவ்வானன்றே, ஊன்படிக்கு முளம்படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந், தான்படிக்கு மனுபவங் காண் தனிக்கருணைப் பெருந்தகையே."

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கினையும்,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை, நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென், ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே."

என மணிவாசகப் பெருந்தகையார் திருவாக்கினையும் கூறிப் பரவசப்படுகின்றார். மாதிரிக்காக இருவர் மாலைகளிலும் இரண்டு செய்யுட்கள் மாத்திரம் காட்டப்பட்டன. எல்லாம் ஒன்றுபோல் அருட்பாற்கடலைக் கடைந்தெடுத்த நவநீதம்போலிருக்கி-

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க)

**ஒருவன் உலகில் அழியாப் புகழைச் செய்வானாகில் அவனைத் தேவலோகத்திலும் துதிப்பர்.**

# இக்கால உயிரற்றகல்வி

தாகூர் நிகழ்த்திய சொற்பொழிவு

வங்காளக் கல்வி வார ஆதரவில் கூடப்பட்ட முதலாவது மகாநாட்டில் புதிய கல்வி சகோதர தத்துவ அமைப்பினர் முன்பு கவிரவீந்திரநாத் தாகூர் இந்தியக் கல்வி சம்பந்தமாகச் சர்க்கார் அனுஷ்டித்துவரும் முறையைப் பலமாகக் கண்டித்துப் பேசிய தன் சாராம்சம் வருமாறு:—

"வீடுகட்டத் தெரியாதவனொருவன் அதுபற்றி ஒன்றுமறியாதவனொருவனுக்கு வீடு கட்டித்தருவதாக முன்வந்தான். உயர்ந்த பலவித சாமான்களும், சிறந்த தொழிலாளர்களும், தருவிக்கப்பட்டனர். ஆனால் வீடுகட்டி முடிந்ததும், மாடிக்குச் செல்லப் படிக்கட்டுகளில்லையெனக் கண்டுபிடிக்கப்பட்டது. பிளானில் படிகட்டுவது குறிக்கப்படவில்லை. இதைப் போலவே நமது கல்வி அமைப்பிலும் கீழ்த் தளத்திற்கும், மேற்றளத்திற்குமிடையே படிகள் கட்டாமல் விட்டுவிடப்பட்டது. இதன்காரணமென்னவெனில், மிக உயரமாயிருக்கும் கல்விக் கட்டிடத்தின் உயரத்தைக்கண்டு பாராட்டுவதன்றி கீழ்த்தளத்திற்கும் மேற்றளத்திற்கும் இடையே உள்ள சம்பந்தத்தைக் கவனியாதிருப்பதேயாகும். எவ்விதம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதும், என்னென்ன சற்கவேண்டுமென்பதும் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி செய்யலாம். ஆனால் உயிரளிப்பது முதன் முதலாகவே செய்யப்படவேண்டும். அரைப் பட்டினியோ அல்லது முழுப் பட்டினியோ கிடந்து தவிக்கும் கீழ்தர வகுப்பு சம்பந்தமாகச் சமூகம், முழுதுமே அசிரத்தையாக விருக்கும் பொழுது, உயர்தர வகுப்பினரே நன்றாக உண்டு, கல்வி பயின்று, செழித்தோங்கி வளருவாராயின் அது அநாகரிகக் காட்டுமிராண்டித் தனத்திற்குரிய வியாதியாம் பக்ஷவாதத்தின் அறிகுறியேயாகும். நம் நாட்டு மக்களில் மிகச் சிலரே இருவேளை உணவு கொள்ளுகின்றனர். ஏனையோர் விதியின்மீது பாரத்தைப்போட்டு விரைவில் மரணத்தின்வாய்ப்படுவதைத் தடுக்காமல் காலந் தள்ளுகின்றனர். இவ்வுயிரற்ற தன்மை, இறப்பால்மட்டும் அளக்கப்படுவதொன்றன்று. இவ்விதநிலைமையில் சுயேச்சைபெற்று நாகரிமடைந்த எந்த நாடும்வாளாவிராது.

ஆசியாவிலுள்ள இதர நாடுகள் எவ்விதம் விழித்தெழுந்தன என்பதை நான் பார்த்துள்ளேன். பணமில்லையென்ற காரணத்தால் எந்த நாகரிகமுற்ற நாடும் அவ்வித கதிக்குட்படத் துணிந்ததில்லை, அரை நூற்றாண்டில் ஜப்பான் விசேஷ மாறுதலடைந்தது. அதுவே நவீன கல்வித் துறையில் ஜப்பான் தனது சொந்த ஆதிக்கம்பெறச் சக்தியுடையதானதன் காரணமாகும்.

பாமர மக்களையன்றிப் பட்டம் பெற்ற நமது நாட்டு மக்களில் பலரும் சாஸ்திர உண்மைகளுடன் சமமாக மூட நம்பிக்கைகளை மதிப்பவராக இருக்கின்றனர். தங்கள் நாட்டுப் படகிற்கு அவர்கள் நவீன துடுப்பையும், சுக்கானையுமே கொண்டிருப்பதல்லாது நீரோட்டம் அவர்களுக்கு எதிரானதாகவே இருக்கின்றது.

### சர்வ கலாசாலைகள்

காட்டுமிராண்டித் தனத்திற்குப் புறம்பான நாடுகளில், இந்தியாவொன்றே நூற்றுக்கு எட்டு அல்லது பத்துப் பேரைப் படித்தவர்களாகக் கொண்டது. அப்படிப்பட்ட நாட்டில் கல்வி மகாநாட்டை விசேஷ ஆரம்பத்துடன் கூட்ட ஒருவர், வெட்கமுறாதிருக்கமுடியாது. ஆக்ஸ்போர்டிலும், கேம்பிரிட்ஜிலும் சர்வகலாசாலைகளுள்ளன. அதைப்போல இந்தியாவிலும் சிலவிடங்களில் சர்வகலாசாலைகளுண்டு. இரண்டும் ஒரேமாதிரியென்பது வெறுந் தோற்றத்திலேயாம். ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் எனின் வெறும் கட்டிடங்களன்று, விருதுகளன்று. அவை இங்கிலாந்தெனவே பொருள்படும்.

நமது சர்வகலாசாலைகள் எல்லைச் சுவருடனேயே நின்றுவிட்டன. ஆனால் அவற்றின் காரணம் பக்குவமடையாததன்று. ஒரு குழந்தை குள்ளமாயிருப்பதை நாம் பொருட்படுத்துவதில்லை. ஆனால் பூரண வளர்ச்சி பெறும் சக்தியற்ற ஒனறை நாம் உயரமான படை வீரர்களுடன் உறவாகக்கொள்ள முடியாது. தங்கள் அரசாங்கத்துடன் தங்கள் கல்வி முறையையும் நமது நாட்டிற்குக் கொண்டுவந்தவர்களுங்கூட படாடோபமான சுண்ணாம்பும் செங்கற்களாலுமான கட்டிடங்களை நிர்மாணிப்பதின்மூலம் நம்மையும் தங்களையும் ஏமாற்றிக்கொள்ள முயற்சிப்பதை நாம் காண்கிறோம். உண்மையில் உயர்வானதாயிருப்பதற்கு வெளிவேஷம் வேண்டியதில்லை.

பொருளாதார நிலைமை மாறுமவிருக்கும்பொழுதோ அல்லது கேவலமாகிக் கொண்டு வரும்பொழுதோ நாம் வெளித்தோற்றமும், பொருளும், சம நிலையிலுள்ள நாடுகளிலிருந்து நாம பின்பற்றும் முறைகளை மேற்கொண்டோம். தடுக்கக்கூடிய வியாதிகள் நிறைந்த இந்நாட்டில் போதுமான பணமில்லையென்ற காரணத்தால் சுகாதாரத்திற்காகச் செலவிடப்படும் தொகை குறைக்கப்பட்டிருப்பதையும், எங்கும் பரவியுள்ள அறிவின்மையையொழிப்பதற்குப் போதுமான பணத்தைக் கொடுக்க முடியவில்லையென்பதையும் நினைத்துப் பாருங்கள்.

எனினும் நமது அரசாங்கச் செலவு நம்மிலும் செல்வமுள்ள நாடுகளிலும் உயர்ந்ததாயிருக்கிறது. கல்வியளிக்கப்படுவதற்குரிய வெளிப்படாடோபத தோற்றத்திற்குச் செலவிடப்படும் தொகை, கல்விக்குச் செலவிடப்படுவதிலும் மிகவும் அதிகமனதாயிருக்கிறது. இக்குறையே என் மனதிற்கு மிகவும் தொந்தரவளிப்பது. இதையே நான் உங்கள் முன்கூற விரும்பியது.

### தாய்மொழி

நமது நாட்டிற்கும், சுயேச்சையுள்ள நாட்டிற்கும் விசேஷ வேற்றுமையுண்டு. இந்திய நாட்டில், தங்கள் கல்வியை முடிப்பதற்கு அன்னிய மொழி அவசியமெனக் கருதுபவர்களே அதைக் கற்பவர். அவர்களது அன்றாட வாழ்க்கைக்கு அன்னிய மொழி அவசியமில்லை, ஏனெனில் நாட்டில் நடைபெறவேண்டிய சகல வேலைகளும் தாய் மொழியிலேயே நடத்தப்படுகின்றன. நமதுநாட்டிலோ யாவும் ஆங்கிலபாஷையில் நடைபெறுகிறது. ஆகவே நமக்கு அதைக் கற்பதுமட்டும் போதாது. நம்மை அரசாள்பவர் திருத்திபடையும் முறையில் அதை உபயோகிக்கவும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். தாய் மொழியில் கற்பதால் ஆங்கிலங் கற்க விசேஷ வசதியேற்படுமெனச் சொல்வதில் மட்டும் பயனில்லை. அதை அமுலுக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் அவசரமானது.

தன் சுயமொழியிலேயே தன் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிடப் பயிற்சிபெறுவது கல்வி கற்பதின் முக்கியமான பயனிலொன்று. ஆரோக்கிய மனோ வாழ்க்கை நடத்த இது அவசியமானது. இலக்கியம் அமைப்பது எளிதான காரியமன்று. மேலும் அதை அன்னிய மொழியில் அமைப்பது அதன் பலனை நிரந்தரமாக முடமாக்குவதாம்.

நவீன பகீரதர்கள் முன்வந்து தாய்மொழியாம் கால்வாய் வழியாக கல்வியாம் நீரோட்டத்தைத் திருப்ப முன்வருமாறு வேண்டுகிறேன். வெட்ககரமாகப் புறக்கணிக்கப்பட்ட நமது தாய்மொழி, உலகத்தின் முன்பு அதற்குரியவிடத்தை வகிக்குமாக!

(முன் பக்கத் தொடர்ச்சி)

றது. இவருடைய தோத்திரத்திரட்டில் "இங்கிதமாலை" என ஓர் பிரபந்தம் உளது. அது சிவப்பிரகாச சுவாமிகள் செய்த "பிக்ஷாடனர் நவமணிமாலை"ச் செய்யுள்போல் சிலேடை நயம் சிறந்து அருண்மயமாய்த் திகழுகின்றது. பாடாண்டிணை கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் வினாவுத்தரமாய் செய்யுளுளது. ஓர் அன்பர் இங்கிதமாலை யென்னும் தொடர் மொழிக்குப் பொருள் யாதெனப் பிள்ளைப்பெருமானைக் கேட்டபோது அவர்கள் கூறிய பொருளை இங்கு தருகின்றேன். (தொடரும்.)

# மாத்தளைத் தேர்தலில் துப்பாக்கிச் சூடு.

## ஆஸ்பத்திரியில் விசாரணை.

### திரு. அலுவிஹாரையின் சாட்சியம்.

## அறுவர் மரணம்; பலருக்குப் படுகாயம்.

### எதிரிகளின் வாக்குமூலங்கள்.

மாத்தளை தேர்தலில் வெற்றி பெற்ற திரு. அளுவிஹார சுடப்பட்டவுடன் மோட்டாரில் அப்படியே நண்பர்கள்மேல் சாய்ந்தார். மண்டையில் குண்டுக் காயங்கள் ஏற்பட்டன. ஊர்வலம் டவுன் ஹாலைவிட்டுப் புறப்பட்டு யுத்த ஞாபகச் சினத்திற்கருகில் இருக்கையில் குறித்த அட்டூழியம் நடந்தது.

மாத்தளை ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்ட விசாரணையில் தாம் எப்படிச் சுடப்பட்டார் என்பதை திரு. அலுவிஹாரை விபரமாகக் கூறினார்.

சுட்டவர் என்று கூறப்படும் பி.பி. கந்தகெதிரா குற்றவாளியல்லவென்று கூறி, தம்மைக் கூட்டத்தினர் அடித்ததாகவும் காலால் மிதித்ததாகவும் முறையிட்டுக் கொண்டார். 25 பேருக்குமேல் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

திரு. அளுவிஹாரா கீழே சாய்ந்ததைக் கண்டவுடன் ஜனங்கள் வெடிச் சப்தம் கேட்டதிசையில் நின்ற மோட்டாரை நோக்கி ஓடினர்.

அந்த மோட்டாரில் டிரைவர் உட்காருமிடத்தில் ஒருவன்நின்று கொண்டு துப்பாக்கியால்கூட்டத்தைநோக்கிக் குறி வைத்துக் கொண்டிருந்தான் இந்த மோட்டர் மற்றொரு பாதைவழியாக அந்தவிடத்திற்கு வந்ததாகத் தெரிகிறது. இது திரு. டபிள்யு டி பி கரலியத்தைக்குச் சொந்தமானது. ஜனங்கள் மோட்டாரிலிருந்தவர்களில் ஒருவனை வெளியே இழுத்துக்குத்த முயற்சித்தனர். ஆனால் போலீசார் அவனைக் காப்பாற்றினர். அவனுக்கு முகத்தில் அற்பகாயங்கள் ஏற்பட்டிருந்தன அவன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டான்.

சுட்டவன் என்று கூறப்படும் பி. பி. கந்தே கெதிரா என்பவன் பல ஆண்டுகளாக திரு. கரலியத்தையின் மோட்டார் டிரைவராக இருந்திருக்கிறான். திரு. கரலியத்தை வெற்றியடைவதற்காக அவன் தீவிரமாக உழைத்தான். தேர்தல் முடிவுகள் வெளியான பின் திரு. கரலியத்தையின் ஸலூன் காரை அவன் தனியாக ஓட்டிக்கொண்டு சென்றானும். அவன் உபயோகித்த துப்பாக்கி ஒரு குண்டைத்தான் கொள்ளக்கூடியது. காரில் உபயோகிக்கப்படாத குண்டுகள் மூன்று இருந்தன. எதிரிகள் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் பொலீஸ்காவலில் இருக்கின்றனர். சாரதி பொலீஸ்கான்ஸ்டபிள் வேலையிலிருந்துநீக்கப்பட்டவன். அவனுடைய மூத்ததமையன் மாத்தளையில் ஓவஸீயராகவிருக்கிறார்.

### விசாரணை

மாத்தளைத்தொகுதித்தேர்தலில் வெற்றியடைந்த திரு. பி. எச். அலுவிஹாரை சுடப்பட்டது சம்பந்தமாக திரு. ரோலண்ட் டி சொய்ஸா விசாரணை நடத்தினர்.

உடனே இறந்துபோன ஐவர் வருமாறு:— (1) கோயா முகமது மாத்தளையில் பிரபல வியாபாரி (2) ரிச்சர்ட் ஜெயதுங்கா (3) மகாவலி புஞ்சிபண்டா (10 வயதுள்ள சிறுவன் ஓர் ஜோஸ்யரால் இருக்க வைக்கப்பட்டவன்) மற்றும் இருவர் (அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை.)

பலத்த குண்டுக்காயமடைந்திருப்போர் வருமாறு:—

டேவிட் அப்புஹாமி (ரத்தோட்டை) ஷெரீப்டீன் (மாத்தளை) ஏ. அப்புஹாமி (உடுகாமம்) டேனிஸ்டர் எம் பெரேரா (ஓவில்வி ஜோஸ்யர்) உக்குபண்டா (உடுகாமம்) ஜிடிக்கிரி பண்டா (தொடங்தெனியா) வி. ஜீனதாஸா (மாத்தளை) ஸிரீதார (தல்கஹாகொடை) டபிள்யூ. ஏ. உடகாமதிஸ்ஸாவ (மாத்தளை) இப்ராஹீம் (நிக்ககொலை) டி. ஆர்.பி. எல்லபோலா (உடுகாமம் கிராமச்சங்கத் தலைவர்.)

### திரு. அலுவிஹாரையின் சாட்சியம்:-

தேர்தல் முடிவுகள் வெளியான பின் நான் பேசுவதற்காக மாடிக்குச் சென்றேன். திரு. கரலியத்தையும் என்னுடன் வந்தார். நான் பேசியபின் அவரும் பேசினார். திரு. கரலியத்தையின் மோட்டாரை முதல் எதிரி எங்களுக்கு முன்னிருந்த கிறிக்கற் மைதானத்தின் ஓரத்தில் ஓட்டிக்கொண்டு வருவதைக் கண்டேன். முதல் எதிரி கையைத் தூக்கி வேறொருவனைப் பார்த்துச் சைகைசெய்தான்.

பிரசங்கங்கள் முடிந்தபின் என்னுடன் வரும்படி நான் திரு. கரலியத்தையை அழைத்தேன். அப்புறம் என்னைப் பார்ப்பதாக அவர் கூறிவிட்டுப் போய்விட்டார். சிங்காரிக்கப்பட்டிருந்த மோட்டாருக்கு நான் சென்றேன். திரு. உடகாமதிஸ்ஸாவ, திரு. எல்லப்பொல ஆகியவர்களை அழைத்துவர ஆட்களை அனுப்பினேன்.

நாங்கள் மோட்டாரில் நகரை நோக்கிச் சென்றோம். சில யார்தூரம் சென்றவுடன் வெடிச்சப்தங் கேட்டது. எனக்கு மண்டையில் காயமேற்பட்டு இரத்தம் பெருகியது. மோட்டார்வண்டியில் உட்கார்ந்துகொண்டு தலையைக் குனிந்துகொள்வதே சிறந்ததென நான் நினைத்தேன். குண்டுகள் பறக்கும் சப்தம் பின்னுங் கேட்டது. ஆனால், யார் சுடப்பட்டாரென்று தெரியாது. நான் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டேன். எனக்கு யார் சுட்டாரோ தெரியாது. முதல் எதிரி அடிக்கப்படுவதையும் நான் காணவில்லை.

நத்தம்போற் கேடு முளதாகும் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது.

### ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

# நூற்றாண்டு நிறைவு

(ஆசிரியர்)

இப்புவியின்கண் ஸ்ரீ ராமகிருஷ்ணர் விஜயம் செய்து ஆண்டுகள் நூறு ஆய்விட்டன. அவர் 1835-ம் வருஷம் பெப்ருவரி மாதத்தில் பிறந்தார். புதுமை அனைத்துக்கும் இருப்பிடமாகிய கல்கத்தா நகருக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிறந்து அந்நகரின் எல்லைப்புறத்தில் அவர் அமரிக்கையாக வாழ்ந்த வாழ்வு நூறு வருஷங்களுக்குள் பெரியதோர் உலக இயக்கமாக மாறினது பேராச்சரியமாம். தொன்மைவாய்ந்த ஹிந்து சமுதாயத்தின் சரித்திரத்தில், நூறு வருஷங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தகுதியற்ற ஒரு நாள் அல்லது ஒரு மணிக்குச் சமனாகும். ஆயினும் இந்நூறு வருஷகாலம் இதுபோழ்து ஜீவித்துவரும் நம்மனோர்க்கு நிகழ்ச்சிகள் பல நிறைந்த முக்கியமான காலமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரிக்கும்போது நம் சமுதாயம் எய்தியிருந்த நிலைமை யாது என்பதையும் இப்போது அது அடைந்திருக்கும் முன்னேற்றம் எத்தகைத்து என்பதையும் அவருடைய ஜீவியத்தோடு ஒத்து ஆராய்வோம்.

இருள்சூழ்ந்த இடுக்கண்களிலும் மனக் குழப்பங்களிலும் இந்திய சமுதாயம் அகப்பட்டுக்கொண்டு தத்தளித்த காலங்கள் பல. அவை யாவற்றிலும் சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட தடுமாற்றம் மிக அபாயகரமானது என்று இயம்புவது மிகையாகாது. ஏனென்றால் வெளித்தோற்றத்துக்கு எல்லாம் ஆக்கமும் அமைதியும் பொலியப்பெற்றவைபோலக் காட்சிகொடுத்து வந்தனவெனினும், அந்தரங்கமாகப் பல இயக்கங்கள் வலுத்துத் தேசத்தின் லட்சியத்தையே அடியோடு மாற்றிவரலாயின. தொன்றுதொட்டுத் தேசம் கடைப்பிடித்து வந்ததும் அதன் ஜீவாம்சமாக இலங்கியதுமான பாரமார்த்திகத்திற்குப் பெருஞ்சோதனை ஏற்பட்டது. தன்னம்பிக்கையை இந்தியா அடியோடு இழந்துவரலாயிற்று. அது தன்னைத்தானே வெறுக்கவும் செய்தது. முனிபுங்கவர்கள் நிறுவிய தேசீய வாழ்வுமுறை வீணனதென்று கருதப்பட்டது. நாடு வழிமுறை வழிமுறையாகக் கொண்டிருந்த கொள்கைகளைப்பற்றி வெட்கப்படுவதும், பூண்டிருந்த ஒழுக்கங்களைப்பற்றி வருந்துவதும் நவீன அறிவுடையார் என்பாரது செயல்களாயின. பௌதிகப் பெருமையை நிரம்பப் பெற்றிருக்கும் மேல்நாட்டவரிடமிருந்து உயிர்ப்பிச்சையும் அறிவுப் பிச்சையும் நாகரிகப் பிச்சையும் பாரமார்த்திகப் பிச்சையும் பிற பிச்சைகளும் வாங்கும்படியான இழிநிலையில் இந்நாடு வீழ்ந்துகிடந்தது. இந்தியாவின் பழைய இயல்பைப் புறக்கணித்துவிட்டு மேல்நாட்டு நாகரிகத்தில் தஞ்சமடைந்தாலொழிய நமக்கு விமோசனமில்லை எனும் கொள்கை யாண்டும் வலுத்துவரலாயிற்று.

### மேன்மைக்கு உற்ற வழி

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அவதரித்தது இந்த நெருக்கடியில் தான். அழுகுவதுபோலத் தோன்றும் வித்தினின்று புதிய செடி முளைப்பதுபோன்று, குலைந்துகொண்டுவந்த சமுதாயத்தினின்று அவர் தோன்றுவாராயினர். பண்டைப்பெருமையும் பேரறிவும் அழிந்துபோய்விடவில்லை என்பதற்கு அவருடையவாழ்வே அத்தாட்சியாகும். சீர்கெட்டவை என்று கருதப்பட்ட, சமுதாய அமைப்புகளைச் சீர் ஆர்ந்தவைகளாக அவர் புதுப்பித்துக் காட்டியுள்ளார். இந்த யுகத்தில் நிகழ்ந்த அற்புதச் செய்கை இதுவேயாம்.

நம்பால் உள்ள குறைபாடுகள் அனைத்துக்கும் காரணம் மட்டுக்கு மிஞ்சிய மத உணர்ச்சியே என்று பலர் குறை கூறுவர். இத்தகைய எண்ணமுடையார் கூட்டம் இன்னும் குறைந்தபாடில்லை. அந்நாளில் ஸ்ரீராம கிருஷ்ணரிடத்திலேயே பலர் இதைப்பற்றிப் பகர்ந்தனர். ஆனால் அவர் இறுத்த விடை யாது? நல்வழியில் மட்டுக்கு மிஞ்சியது என்பதில்லை. நல்லொழுக்கத்தின் பலனாகக் கேடு வருவதும் கிடையாது. தூய வாழ்வினின்று தவறினவர்க்கே தீங்கு வருகிறது. யாண்டும் தர்மம் தலைகாக்கும். சத்தியத்தைச் சார்பவர் சதா வாழ்ந்திருப்பர்.

உலக உணர்ச்சிக்கு அவருடைய உள்ளம் சிறிதும் இடங்கொடுக்கவில்லை. ஈசுவர சிந்தனையிலேயே அவர் எப்போதும் திளைத்திருந்தார். கடவுளை அடையவேண்டுமென்று அவர் கசிந்துருகிக் கண்ணீர் கொட்டினார். இறைவனை மறப்பது மரண வேதனையாயிருந்தது. கணப்பொழுதையாவது அப்பெரியார் உலக விவகாரத்தில் கழித்தாரில்லை. அப்படியிருந்தும் அவருடைய வாழ்வு உலகுக்குப் பயன்பட்டவாறு வேறு யாருடைய வாழ்வு பயன்பட்டது? மலரை நாடி வண்டுகள் சூழ்வதுபோல் அருட்தாகமுடையோர், ஆனந்தம் வேண்டுவோர், அறிவை நாடுவோர், சாந்தி எய்துவோர் ஆகிய அனைவரும் அவரை அணுகினர். புசிப்பவர் பசி தீர்வதுபோன்று அவரை அடைந்தவர் அனைவரும் மேன்மையுற்றனர். பூதவுடல் அழிந்துபோயிற்று எனினும் இன்றைக்கும் அவரது அருளுடம்பு உலகெங்கும் பரவி மக்களை உய்வித்து வருகிறது.

மெய்யான மத அனுஷ்டானத்தை மேற்கொள்ளுமளவு மனிதன் நன்மையடைவான் என்று அவர் புகட்டியருளியது நாளேற ஏற நானாவிதங்களில் நிரூபிக்கப்பட்டு வருகிறது. தூய்மையும் அன்பும் தியாகமும் உடையோர் எத்துறையில் இறங்கி வேலைசெய்யினும் அத்துறையில் மக்களை முன்னேற்றுவிப்பது கண்கூடு. பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த அரசியல் துறையைக்கூடக் கடவுளிடத்தில் பக்தியுடையவர் புனிதமுடையதாக மாற்றவல்லவர் ஆவர். எனவே சமூக முன்னேற்றத்திற்குத் தெய்வ வழிபாடு இன்றியமையாததாகும் என்பதை அப்பெரியாரது வாழ்வு நன்கு விளக்குகிறது.

### ஜாதி ஒழுக்கத்தின் உட்கருத்து.

ஹிந்துக்களிடத்தில் ஜாதி வித்தியாசம் இருக்கும்பரியந்தம் அவர்களுக்கு விமோசனம் இல்லையென்ற வசைமொழி ஒருபக்கம் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கிறது. தெய்வீகம் வாய்ந்த வர்ணாச்சிரம தர்மத்தினுள் இப்போது நுழைந்திருக்கும் ஊழல்களை மதக்கோட்பாடுகளென்று கருதி அவைகளைக் கடைப்பிடிக்கும் கூட்டத்தார் மற்றொருபுறம் இருக்கின்றனர், இந்த இருகாரத்தாரும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் ஸ்ரீராமகிருஷ்ணரது வாழ்வில் உண்டு. பிறப்பில் அவர் பிராமணோத்தமர்; ஜாதி தர்மம், குலதர்மம் இவைகளினின்று அணுவளவும் பிசகாதவர். ஆனால் அந்தக்கட்டுப்பாடுகளின் அடிப்படையான நோக்கத்தைமட்டும் அவர் என்றும் மறக்கவில்லை. வளரும் செடியை வேலிகட்டிக் காப்பதுபோன்று ஆத்மீக வளர்ச்சியை அந்தணரது ஒழுக்கத்தால் ஆதரிக்கவேண்டும். சாதகனுக்கு நல்லாரது கூட்டுறவு இன்றியமையாதது ஆனால் நல்லொழுக்கம் வெறும் பிறப்பை யொட்டியதன்று. ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சின்னஞ் சிறுவயதில் பூணூற் சடங்கு நடைபெற்றபோது தாம் வாக்குக் கொடுத்திருந்தபடி முதன்முதல் ஒரு கொல்லத்தியிடம் பிக்ஷையேற்றார். அச்செய்கை வழக்கத்தில்உள்ள ஜாதி தர்மத்துக்குத் தகாது என்று தடையேற்பட்டது. ஆயினும் அவர் தாம்கொண்ட கருத்தினின்று பிறழவில்லை. ஏனென்றால் ஒழுக்கத்தில் அக்கொல்லத்தி உயர்ந்தவள் என்பது அவருடைய கருத்து. தமது ஆயுள் முழுதும் அவர் ஆகாரம் ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் நியமனம் மிகவுடையவராய் இருந்தார். எக்குடியிற் பிறந்தவராயினும் நல்லார் கைப்பட்ட உணவை அமிழ்து என அவர் ஏற்றுக்கொள்வார். உயர்குடியிற் பிறந்தவராயினும் ஒழுக்கமில்லாதவரது கைப்பட்ட உணவை அவர் ஒருபோதும் ஏலார். சமபோஜன விஷயத்தில் ஆடம்பரம் மிகப்பண்ணுபவர் இத்தத்துவத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது அவசியம். இது ஆத்மசாதனத்தில் பிரவேசிப்பவர்களுக்கு முக்கியமாக வேண்டற்பாலது.

### தாழ்த்தப்பட்டவரும் தெய்வத்தின் குழந்தைகள்

தீண்டாமை எனும் அனுஷ்டானம் எத்தகைய கருத்தைக்கொண்டு துவக்கப்பட்டதாயினும் அது காலக்கிரமத்தில் அர்த்தமற்றதாய்விட்டது என்பதை ஸ்ரீராம கிருஷ்ணருடைய வாழ்வு தெற்றென விளக்குகிறது. அவர் தபசு புரிந்துவந்த தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அருகில் ஒரு பறைச்சேரி இருந்தது. பலகாலம் அவர் அங்குச் சென்று குடிசைகளைச் சுற்றிலும் கிடந்த குப்பை கசுமலங்களைத் தமது தலைமுடியால் கூட்டிப்பெருக்குவார். தமது வழிபடுதெய்வமான ஜகன் மாதாவிடம் அவர் செய்த பிரார்த்தனையாவது:—அம்ம, ஜகதீசுவரி, இங்கு வசிக்கும் தீண்டத்தகாதவர்கள் என்பவர் உன் குழந்தைகள். உன் சிருஷ்டிக்கு அன்னியமாக யாரும் இவ்வுலகில் இல்லை, உன் பிள்ளைகளாகிய இவர்களை அலட்சியப்படுத்துவது உனக்கே அபராதம் செய்வதாகும். அது தகாது. இவர்களைவிட நான் உயர்ந்தவன் என்ற எண்ணத்தை, ஆணவத்தை என்னிடமிருந்து நீக்கிவிடு. என்னை எல்லார்க்கும் தொண்டனாக இருக்கும்படி செய்.

இந்த சாதனத்தின் பலனாகப் பிறப்பில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற வேற்றுமையுணர்ச்சியை அவர் அறவே இழந்துவிட்டார். அனைவரும் கடவுளின் புதல்வர்கள் என்ற அனுபவம் அவருக்கு உண்டாயிற்று. இப்போது தேசம் அனுஷ்டித்துவரும் தீண்டாமை எனும் பழக்கம் தர்மத்துக்கு உடன்பாடானது அன்று என்பதை இக்காலத்தவருக்கு முதன்முதல் விளக்கிக்காட்டியவர் ஸ்ரீராமகிருஷ்ணர். உண்மையான மத அனுஷ்டானம் மக்கள் எல்லோரையும் மேன்மைப்படுத்தும் என்பதே அவரது துணிவு.

### பெண்ணைத் தாய்போல் நினைத்துத் தவம் முடித்தார்

மாதரைப் பழிப்பதும் பெண்ணுலகுக்குப் பொல்லாங்கு விளைவிப்பதும் பலர்க்கிடையில் ஒரு மதக்கோட்பாடாயிருந்துவந்தது. பாபங்கள் அனைத்துக்கும் பிறப்பிடம் பெண்ணென்று கருதப்பட்டது. மேலான வாழ்க்கைக்கும் மாதர் உலகுக்கும் எவ்வித இணக்கமும் இல்லையென்ற எண்ணம் எங்கும் பரவுவதாயிற்று. விஷய சுகத்துக்குமேல் எதற்கும் உரியவளாக அவள் கருதப்பட்டாளில்லை. இக்கொள்கையாலும் அதற்கேற்ற வாழ்க்கையாலும் பெண்மக்கள் வீழலாயினர். சமூகத்தின் பேர்பாதியாகிய அவர்கள் அவமதிக்கப்படவே சமூகமும் க்ஷீணிக்கலாயிற்று.

இதற்கு விமோசனம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்வில் காண்கிறோம். அவர் கடவுளையே பெண்ணெனக் கருதினார்; மேலும் பெண்மகளையும் பராசக்தியின் வடிவென வணங்கினார். உலக இயல்பை ஒட்டித் தாமும் ஒரு மாதை மணந்துகொள்ளும்படி நேரிட்டது. ஆனால் அதன்நிமித்தம் அவளைச் சிற்றின்பத்துக்கு உரியவளென்று அவர் கனவிலும் கருதினாரில்லை. ஏற்றுக்கொண்ட இல்லாளை இறைவியென்றே அவர் வாழ்த்தி வணங்கினார். மனையாட்டியைச் சிறுமைப்படுத்துவதே முறையென்று எண்ணுதற்கும் அவர் கொண்ட கொள்கைக்கும் எவ்வளவு தூரம்! பெண் உலகுக்கே புதியதொரு புனிதம் பிறப்பித்தார் அவர். ஆடவர்க்கும் மகளிர்க்குமிடையே தெய்வத்தன்மை வாய்ந்த இணக்கம் இருத்தல்வேண்டும் என்பது அவர் காட்டிய வழி. அத்தகைய இணக்கம் ஆத்ம சமாதானத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் இன்றியமையாததாகும். அதன்மூலம் வாழ்வின் நோக்கம் தங்கு தடையின்றிப் பூர்த்தியடையும்.

### பணம் எவ்வளவுதூரம் பயன்படும்

இதுபோழ்து நாம் உலகிற்காணும் தீங்குகளிற் பல பணத்தாசையினின்று பிறக்கின்றன. சமர்த்தர்களாகிய சிலர் அபரிமிதமாய்த் தங்களுக்கென்று செல்வத்தைச் சேகரித்து வைத்துக்கொள்கின்றனர். பின்பு பிறருடைய தொழிலையும் பிழைப்பையும் வேண்டியவாறு சுவாதீனப்படுத்தும் வல்லமை அவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வாறு அரசியல்துறை, பொருளாதாரத்துறை, வியாபாரத்துறை முதலியவைகளில் ஜனங்களுக்குப் பெருங்கஷ்டம் உண்டாகிறது. பொருள் தேடுவதையே யாவற்றிலும் உயர்ந்த லட்சியமாகக் கொண்டுள்ளவர் இக்காலத்தவர்.

இது போற்றத்தக்க கொள்கையன்று என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்வு காட்டுகிறது. அவர் பணத்தைக் கையாள அறவே மறுத்துவிட்டார். பொன்னை மண்ணோடு ஒன்றாக அவர் மதித்தார். அது உடலைப் பேணுதற்குப் பயன்படுகிறது என்பது உண்மை. ஆனால மனிதனுடைய மாட்சி தேகத்தைத் திடமாக்குவதோடு நின்றுவிடுவதில்லை. உடலினும் உயர்ந்தது உள்ளம். அதன்கண் உள்ள அன்பும் அறிவும் ஓங்கவேணும். மனதைப் பண்படுத்துவது தான் உண்மையான நாகரீகம். சித்தமிசை குடிகொண்டுள்ள அறிவான தெய்வத்தை, அன்புமயமான தெய்வத்தை ஆராதிப்பதே அதற்கு உற்ற உபாயமாகும். ஆனால் அது செல்வப்பெருக்கால் ஒருகாலும் கைகூடாது என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் பன்முறை வற்புறுத்தியிருக்கிறார். பணத்தைத் தொடுவது அவருக்குத் தீயால் தகிக்கப்படுவதுபோன்றிருந்தது. இக்காலத்திய கல்விமுறை பணந்தேடுவதற்கும் பிழைப்புக்காகப் போட்டிபோடுவதற்கும மட்டும் ஏற்ற சாதனமாயிருப்பதால் அவர் அதை முற்றும் நிராகரித்தார். வையகம் விலங்குத்தன்மையினின்று மீண்டு தெய்வத்தன்மையைப்பெறவேண்டுமானால் அது இப்பெரியார் காட்டியருளிய எளிய வாழ்வையும் உயரிய நோக்கத்தையும் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். அதற்கு முன்பு உலகில் சாந்தியும் அன்பும் மேலிடுவது சாத்தியமன்று.

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க.)

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் நூற்றாண்டு நிறைவு

(முன்பக்கத் தொடர்ச்சி)

### சமரசம்

ஒற்றுமைக்குத் தடையாயிருப்பவைகளுள் மதவெறி முக்கியமானதொன்றாகும். ஒவ்வொருவனும் தன் தன் மதமே உண்மையென்று ஸ்தாபிக்கிறான். அத்துடன் நில்லாது புறமதங்களை நிந்திக்கிறான். இது வகுப்பு வேற்றுமைக்கும் சண்டை சச்சரவுக்கும் இடங்கொடுக்கிறது. முன்னுளிற்போன்று இந்நாளில் மதத்தின் பெயரால் யுத்தங்கள் ஏற்படாதிருப்பினும் ஒருவரை யொருவர் கடிந்து எழுதுவதும் பேசுவதும் ஒழிந்தபாடில்லை. வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் கோட்பாடு சமய அநுஷ்டானத்திலும் புகுவதாயிற்று. ஒவ்வொரு சமயத்துக்கும் தனித்தனி கடவுள் உண்டு என்று பலர் எண்ணுகின்றனர். பல தெய்வங்களுள் யாருடைய தெய்வம் சிரேஷ்டமானது என்பதைப்பற்றி மாந்தருள் சண்டை சச்சரவு ஏற்பட்டுவிடுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒவ்வொரு மதத்தையும் தனித்தனியே அநுஷ்டானத்தில் கொண்டுவந்தார். ஹிந்து மதத்தின் பல பிரிவுகளையும் கிறிஸ்து மதம் இஸ்லாமியமதம் ஆகிய இவை யாவையும் அதனதன் விதிப்படி அவர் பயின்றார். எதையும் அரைகுறையாகச் செய்வதென்பது அவரிடம் கிடையாது. கிறிஸ்துநாதர் புகட்டிய மார்க்கத்தைப் பின்பற்றியபோது தமமை ஒரு தீவிரமான கிறிஸ்துவராகவே அவர் பாவித்துக்கொண்டார். இஸ்லாமிய சாதனம் செய்தபோதும் அப்படியேதான் நடந்துகொண்டார். நடை யுடை பாவனை யனைத்திலும் அவர் அப்போது ஒரு முஸ்லீம்போன்று ஆய்விட்டார். இந்த மார்க்கங்கள் அனைத்தின் வாயிலாகவும் அவர் அடைந்த முடிவுதான் நமக்குப் பெருநன்மையும்ஆறுதலும் அளிப்பதாகும்.

மெய்ப்பொருள் ஒன்றே. நீரை ஜலமென்றும், வெள்ளமென்றும் பாணியென்றும், வாட்டர் (Water) என்றும் வெவ்வேறு பாஷைகளிற் கூறுவதுபோன்று, கடவுளைப் பிரம்மமென்றும், சிவனென்றும், விஷ்ணுவென்றும், அல்லா என்றும், பரலோகத்தில் இருக்கும் பிதா என்றும் சமயங்கள் சாற்றுகின்றன. எப்பெயரிட்டு அழைத்திடினும் பொருள் ஒன்றே. ஓர் ஊரை அடைய வழிகள் பல இருப்பதுபோன்று கடவுளை அடைதற்கும் மார்க்கங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொருவனும் தனக்கு உகந்த சமயத்தைச் சார்ந்திருக்கட்டும், உடலின் இயல்புகளுக்கு ஏற்பப் பலவிதமான உணவுப் பொருள்கள் இருப்பதுபோன்று சுபாவ வேற்றுமைக்குஏற்பச் சமயங்களும்பல இறைவனது அருளால்ஏற்பட்டிருக்கின்றன.

### யுக தர்மம்

அவ்வக்காலங்களில் தோன்றும் அவதார புருஷர்கள் ஆற்றும் அரும் பெரும் செயல்கள் மூன்றுவித மாண்புகளுடன் மிளிரும் என்பர்மேலோர். அவைகளுள் முதலாவது யுக தர்மம். காலவேறுபாட்டுக்கு ஏற்பத் தர்மத்தை எவ்வாறு புதுப்பித்து அநுஷ்டிக்கவேண்டுமென்பதைத் தம் வாழ்விலேயே அன்னவர் நடாத்திக்காட்டுவர். தர்மகாணயம் எக்காலத்திலும் விலைபெறும் எனினும் அதை அரசாங்கத்துக்கு ஏற்ற புதுநாணயமாக மாற்றி அமைத்தல் அவசியம். அதுபோன்று தர்மத்தையும் காலத்துக்கு ஏற்றமுறையில் கடைப்பிடித்தல் வேண்டும். அதைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் செய்துகாட்டினர். இதுபோழ்து நம்பால் உள்ள பிரச்னைகளைத் தீர்க்கும் வழிகளை அவர் தம் வாழ்வின்மூலம் விளக்கியருளியுள்ளார், அவைகளிற் சிலவற்றை நாம் சுருக்கமாக மேலே ஆராய்ந்துள்ளோம். இந்த அற்புதத்தை நம்மனோர் அனைவரும் உன்னியுணர்தல் அவசியம்.

### பேராற்றல்

இரண்டாவதாக அவதார புருஷர்கள் அபரிமிதமான தெய்விக சக்தியுடன் திகழ்வர். அவர்கள் ஞானமே வடிவெடுத்திருப்பர். அவர் செப்புவதெல்லாம் வாழ்வுக்குற்ற சித்தாந்தமாகும். அதைக் கேட்போரது ஐயம் ஒரு கணப்பொழுதில் அகலும். உலகப்பற்றை ஒழிப்பதும் தெய்வத்தன்மையை எய்துவதும் அவர்கள் முன்னிலையில் மிக மிக எளிதாம். ஏனென்றால் அவர்கள் வைராக்கியமே வடிவெடுத்தவர் ஆவர். தன் பெருமையைச் சூரியன் தானே விளக்குவது போன்று அவதார புருஷர்களுடைய கீர்த்தி சுலபமாக உலகெங்கும் வியாபிக்கும். பற்றற்றவர் எனினும் அப்பரமாசாரியர் ஐசுவரியம் அனைத்திற்கும் உறைவிடமாவர். மாயாசக்தி பிரம்மத்தைச் சார்ந்திருப்பதுபோன்று சம்பத்து அனைத்தையும் அன்னவர்மாட்டுக் காணலாம். வீரியம் அல்லது புருஷத்தன்மை அவர்களிடமிருந்து பிறக்கிறது. இந்த விபூதிகளையெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வேண்டியவாறு காணலாம். அவருடைய லீலைகளை அறிவது பகவத் சம்பத்தை அறிவதாகும். உலக ரக்ஷகாது இயல்புக்கு ஏற்பப் பலபேர்க்கு முக்தியளிக்கும் பேராற்றல் அப்பெரியார்கண் பொலிவதாயிற்று. சாமானிய ஜீவன்முக்தர்கள் சிறு படகு போன்றவர்கள் என்றும், அவதார புருஷர்கள் ஆயிரக்கணக்கானவர்களை சமசார சாகரத்தின் அக்கரை சேர்க்க வல்ல பிரமாண்டமான நீராவிக் கப்பல்போன்றவர்கள் என்றும் அவர் பகர்வதுண்டு. இந்த யுகத்தில் பிறவிப் பிணியினின்று உய்ய விரும்புபவர் தம்மை வந்தடைவார்கள் என்றும் இயம்பியுள்ளார். இக்கூற்றுக்கு ஏற்ப இப்பொழுது எத்தனையோ மானுடர் எங்கெங்கேயோ இருந்து அவரை வந்து சரணடைந்திருக்கின்றனர். இன்னும் எண்ணிறந்தவர் அவரால் உய்யப்பெறுவர்.

### அருள் வெள்ளம்

மூன்றுவதாகப் புத்துயிர் ஒன்றை அப் பரமாசாரியர்கள் உலகின்கண் துவக்கியருள்கின்றனர். நாள் ஏற ஏற அது வலுத்துக்கொண்டே போகிறது. அதன்பலனுக மக்களுக்குப் பழைய வாழ்வுமுறையில் அதிருப்தியும் புதிய வாழ்வுமுறையொன்றில் ஆர்வமும் ஏற்படுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்தது முதற்கொண்டு இத்தகைய இயக்கம் வலுத்துவருவது நம்மனோர்க்குக்கண்கூடு. இது சூக்ஷ்மமாக அவர் ஒருவரிடத்தில்மட்டும் அந்நாளில் உறைந்துவந்தது. ஆனால் நூறுவருஷங்களுக்குள்ளாக அது ஒரு பெரிய தேசிய இயக்கமாகத் திரண்டுவிட்டது. இன்னும் அது எவ்வளவுதூரம் பெருகி எத்தகைய நன்மையை விளைவிக்கும் என்பது காலம் எனும் திரையினுள் மறைந்துகிடக்கிறது. அதை முற்றிலும் ஊகிக்க நம்மால் இயலாது.

தாம் வழங்கிய அருட்செல்வம் விசேஷமாகத் தம்மையே சார்ந்த ஒரு சங்கத்தின் வாயிலாக உலகெங்கும் வியாபிக்கும் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளினார். அக்கூற்று எத்தகைய மகோன்னதமானது என்பதை அவருடைய சிஷ்யர்களிலேயே பலர் அந்நாளில் அறிந்துகொண்டாரில்லை. சுமார் பதினைந்து சிஷ்யர்களையும் அவர்களுக்குத் தலைவராக சுவாமி விவேகானந்தரையும் பக்குவப்படுத்திவிட்டு அவர் பூதவுடலை நீத்தார். சீடர்களும் பலவருஷ காலம் கடுந்தவம்புரிந்து பிறவிப் பெரும்பயன் எய்தினர். பின்பு சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சர்வ மத மகாசபையில் முதன்மை ஸ்தானம் வகித்தபோது அவர்மூலம் ஹிந்துமதத்தின் மாண்பும் மிளிர்வதாயிற்று. அவரைத்தொடர்ந்து அவருடைய குரு சகோதரர்களும் ஆங்காங்குச் சென்று தர்ம ஸ்தாபனத்தின்பொருட்டு அரும்பணி யாற்றுவாராயினர்.

உலக இச்சைகளைத் துச்சமென நீத்துவிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சரண்புகுபவர் கூட்டம் அந்நாள் முதற்கொண்டு இந்நாள் பரியந்தம் ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. கடவுளை அடைதலும், கடவுளுடைய குழந்தைகளாகிய மக்களுக்குச் சேவை செய்தலும் இவர்கள் கொண்டுள்ள நோக்கமாகும். இந்தியாவின் முக்கிய நகரங்களிலெங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய் மடங்களும், ஆச்சிரமங்களும், ஆஸ்பத்திகளும், பாடசாலைகளும், சங்கங்களும், பிறவும் இருக்கின்றன. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்த மடத்தின் கிளை ஸ்தாபனங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, யப்பான் முதலிய பிரதேசங்களிலும் இந்த ஸ்தாபனத்தின் தொடர்பு வேண்டுமென்று வேண்டுவார் பலர் இருக்கின்றனர். ஆத்மீகத் துறையில் தொண்டாற்ற வல்ல துறவியர் கூட்டம் இன்னும் பெருகவேண்டும். சாதனங்களெல்லாம் சித்தியடைந்தபிறகு தமது அருட்செல்வத்தை உலகெங்கும் எடுத்து வழங்க வல்ல உத்தமர் அநேகர் வரவேண்டுமென்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூவியழைத்தார். அவருடைய அழைப்பு இன்றைக்கும் அருள் உலகில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அவர் அருளால் அவருடைய திருக்கூட்டம் பெருகுவதாகுக. அத் திருக்கூட்டத்தின் வாயிலாகத் தாணியெங்கும் தர்மம் தழைத்தோங்குக.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய அருட்பிரவாகம் அவர்பெயரால் நிறுவப்பட்டிருக்கும் சங்கத்தில் மட்டும் அடங்கியுள்ளது என்று எண்ணுவது சரியன்று. அது நானுவிதமான முறைகளில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஆங்காங்கு மாந்தரது உள்ளங்களைக் கவர்ந்து வருகிறது. கடலில் ஓடும் கப்பல் தூரதிருஷ்டிக்கு அசைவற்றதுபோல் தென்படுகிறது. ஆயினும் அது ஓயாது ஓடிக்கொண்டிருப்பது உண்மை. ஸ்ரீராமகிருஷ்ணர் உலகுக்குக் காட்டியுள்ள லட்சியமும் அத்தகையது. பகட்டு மிக நிறைந்துள்ள புதியநாகரீகமும் செருக்குடைய ஏகாதிபத்தியங்களும் (Imperialism) செல்வ மிகுந்த தனியுடைமை ஸ்தானங்களும் (Capitalism) கவிழ்ந்து போகும் தறுவாயில் இருக்கினறன. இவைகளுக்கு அஸ்திவார பலம் போதாது என்பதும் பெருஞ் சோதனைகளை மீண்டு இவை நில்லா என்பதும் அறிஞருடைய துணிபு. தேசங்கள் ஒன்றையொன்று நம்பாதிருப்பதற்குக் காரணமும் இவைகளாலேயே ஏற்படுகிறது. பொதுவாக ஒரு மகாயுத்தத்தின் பிறகே தர்மம் தழைத்தோங்கும் என்பது விதி. இப்போது, உலகும் அப்போக்கிலேதான் போய்க்கொண்டிருக்கிறது. அது எங்ஙனம்ஆயினும்ஆகுக.

மனிதனை மனிதன் மதிக்கவேண்டும் என்றும், மானுடர் அனைவரும் சகோதரர் என்றும், பொருளை மிக விரும்பலாகாதென்றும், அடக்கமுடைய வாழ்வே அழியாத்தன்மைக்கு உற்ற உபாயம் என்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் காட்டியருளியதை இப்போது மேதாவிகள் பலர் அறிந்திருக்கின்றனர், இந்த உயர்ந்த கொள்கைகளை நாம் எவ்வளவுக் கெவ்வளவு கையாளுகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு நாம் மேன்மையுறுகின்றோம். நாம உய்தற்பொருட்டு நம்மீது கருணைகூர்ந்து நல்லவழி காட்டியருளிய அப்பெரியாரைப் போற்றி வணங்குவது நம் கடமையாகும். அவர் காட்டிய வழியைப் பின்பற்றுதலே அவருக்கு உற்ற ஆராதனையாகும். ஆதலால் நாமும் அவர் அருளால் தர்மத்தைக் கடைப்பிடித்து மேன்மையுற வேண்டுமென்று முழு மனதுடன் இந்த நூற்றுண்டு நிறைவு விழாவின்போது பிரதிக்ஞைசெய்து கொள்வோமாக.

"ஸ்ரீ ரா. கி. விஜயம்"


## ஓர் அரிய நற்செய்தி!

வூட்ஸ்ரொக் தமிழ்




அச்சுப் பொறிகள்

**தமிழ்த்தாயை வளர்ப்பதற்கு மேலும் ஒரு சிறந்த வசதி!**

தமிழிலுள்ள எழுத்துக்களையுமல்லாமல் 1234567890 / ? % – , . முதலிய இலக்கங்கள் குறிகளையும் ஸ்ரீ ஜ ஸ க்ஷ ஷ ஹ முதலிய சமஸ்கிருத எழுத்துக்களையும் இத் தமிழ் அச்சுப்பொறிகளினுல் பொறிக்கலாம்.

கையினுல் எழுதிப் படும் கஷ்டமும், கண்ணுடிகள் கொண்டு வாசிக்கும் சிரமமும் நீங்கின. கடிதங்கள், உறுதிகள் முதலியனவெல்லாம் திருத்தமாக 4 அல்லது 5 பிரதிகளுடன் பொறித்துப் பாவிக்கலாம். உங்களுடைய சிரமமான எழுத்து வேலைகளெல்லாம் சந்தோஷமாகச் செய்யலாம். ஆங்கில ரைப் ரைட்டரில் உள்ள சௌகரியங்களெல்லாம் இதில் தவருமல் உண்டு.

பரிசோதனை, பாவிக்கும் முறை, விலை விபரங்களுக்கு எழுதவும்.

தலைமைப் பிரதிநிதி :— **இ. கே. நாதன்,**
உவைமன்தெரு, யாழ்ப்பாணம்.

(77) 2-2-36—4

# இலங்கைப் பொதுத் தேர்தல் பெறுபேறு

| | | |
|---|---|---|
| நீர்கொழும்புப்பகுதி | வாக்காளர் தொகை | ...61,927 |
| இராசவாசல் முதலியார் A. E. ராஜபக்ஷா | .... | **22,359** |
| திரு. ரியூடர் றணசிங்கி | ... | 13,866 |
| | கூடியவாக்கு | 8,493 |
| பாணந்துறைப்பகுதி | வாக்காளர் தொகை | ....53,536 |
| திரு. டி. எஸ். de வொன்சக்கா | .... | **24,872** |
| ,, லெஸ்லி குணவர்த்தன | .... | 15,322 |
| | கூடியவாக்கு | 9,550 |
| கொழும்பு தெற்கு | வாக்காளர்தொகை | ....38,842 |
| Dr. A. P. de சொயிசா | .... | **12,551** |
| Dr. E. A. குறே | .... | 10,769 |
| | கூடியவாக்கு | 1,787 |
| பலப்பிட்டியா | வாக்காளர் தொகை | ....60,108 |
| திரு. பிரான்ஸிஸ் டி சொயிஸா | .... | **17,751** |
| ,, G. ஆர்தர் டி சொயிஸா | .... | 12,737 |
| உபயோகமற்றவை | .... | 25 |
| | கூடியவாக்கு | 5,017 |
| திருக்கோணமலை—மட்டக்களப்பு | வாக்காளர் தொகை | ....45,700 |
| திரு. E. R. தம்பிமுத்து | .... | **11,775** |
| ,, M. M. சுப்பிரமணியம் | .... | 4,348 |
| | கூடியவாக்கு | 7,429 |
| இரத்தினபுரி | வாக்காளர் தொகை | ....49,453 |
| திரு ஜயவீரகுறப்பு | .... | **16,884** |
| ,, டி. ஷே விமலசுரேந்திரா | .... | 8,865 |
| | கூடியவாக்கு | 7,999 |
| நாறம்மலை | வாக்காளர் தொகை | ....51,482 |
| திரு. சிறிபாலசமரக்கொடி | .... | **18,820** |
| ,, W. H. de S ஜயசுந்தரா | .... | 8,972 |
| உபயோகமற்றவை | .... | 50 |
| | கூடியவாக்கு | 10,048 |
| பண்டாரவளை | வாக்காளர் தொகை | ....44,959 |
| திரு D. D. குணசேகரா | .... | **15,155** |
| ,, A. விலோஸ்கூஷார்டின் | .... | 5,703 |
| ,, B. H. டேல் | .... | 567 |
| ,, P. B. M. பண்டாரநாளக்கா | .... | 520 |
| | கூடியவாக்கு | 9,372 |
| பருத்தித்துறை | வாக்காளர் தொகை | ....44,769 |
| திரு. G. G. பொன்னம்பலம் | .... | **14,029** |
| ,, K. பாலசிங்கம் | .... | 7,022 |
| | கூடியவாக்கு | 7,007 |
| கொழும்பு மத்தியபகுதி | வாக்காளர்தொகை | ....39,917 |
| திரு A. E. குணசிங்கா | .... | **16,011** |
| ஜனுப் டி. பி. ஜயா | .... | 13,077 |
| | கூடியவாக்கு | 2,934 |
| கொழும்பு வடபகுதி | வாக்காளர் தொகை | ....32,718 |
| ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து | .... | **9,752** |
| திரு. யோஜேப் டி சில்வா | .... | 4,809 |
| Dr. S. C. போல் | .... | 2,858 |
| திரு. S. F. R. ஜெட்ரிக்கோ | .... | 2,424 |
| | கூடியவாக்கு | **15,924** |
| கலகெதரா | வாக்காளர் தொகை | ...39,774 |
| திரு. E. A நுகவெலா | .... | **13,574** |
| ,, P. B. தணபாஜா | .... | 5,059 |
| ,, W. மடவெலா | .... | 4,224 |
| | கூடியவாக்கு | 8,515 |
| மாத்தளை | வாக்காளர் தொகை | ....42,680 |
| திரு. B. H. அலுவிகார | .... | **15,924** |
| ,, எட்வார்ட் டி சில்வா | .... | 5,924 |
| ,, W. T. B. கரலிஅத்தை | .... | 4,833 |
| ,, W. கோபல்லவா | | 1,668 |
| | கூடியவாக்கு | 10,000 |
| காலி | வாக்காளர் தொகை | ....76,330 |
| திரு. H. W. அமரசூரியா | .... | **33,529** |
| ,, C. H. விக்கிரமநாயக்க | .... | 9,677 |
| | கூடியவாக்கு | 23,852 |
| ஹொறணை | வாக்காளர் தொகை | ....53,464 |
| திரு. A. P. ஜயசூரியா | .... | **20,074** |
| ,, E. W. பெரேரா | .... | 12,905 |
| | கூடியவாக்கு | 7,169 |
| யாழ்ப்பாணம்—தென்மராட்சி | வாக்காளர் தொகை | ...59,915 |
| திரு. A. மகாதேவா | ... | **13,581** |
| ,, N. செல்வத்துரை | .... | 10,482 |
| | கூடிய வாக்கு | 3099 |

# அபிசீனியமகாயுத்தம்.

## சர்வதேச சங்க நடபடிக்கைகள்

## பெற்ரேல் ஏற்றுமதி தடைப்படல்

### பிரான்சியர் முயற்சியை எல்லாம் பொறுத்துள்ளன

### இத்தாலியர் புரியவிருக்கும் இரண்டாம் யுத்தம்

## இத்தாலிய விமானங்கள் போடும் நச்சுக் குண்டுகள்

### யுத்த தளபாடங்கள் அதிகமாக அபிசீனியாவில் இறக்கப்படுகின்றன

யுத்த தளபாடங்கள் அதிகமாக அபிசீனியாவில் இறக்கப்படுகின்றன. இத்தாலியர்க்கு இதுவரையில் பெற்ரேல் ரூமேனியாவிலிருந்தே அனுப்பப்பட்டுவந்தது. இப்போது அது தடைபடுகிறதாகப் புதினங்கள் எட்டுகின்றன. ஜனவரிமாதத்தில் ரூமேனியா அனுப்பிய பெற்ரேலிலும் பெப்ருவரிமாதத்தில் நூற்றுக்கு 80 விகிதம் குறைந்து விட்டதாம். இதற்குப் பிரதானமான காரணம் ரூமேனிய அரசினர் பெற்ரேலின் விலையைப் பொன்னுகத் தரும்படி கேட்டமையே. இத்தாலியர் அவ்வாறு கொடுக்கச் சம்மதியாது விட்டமையால் ஏற்றுமதி தடைப்படலாயிற்று இவ்வாறே மற்றைய பொருட்களும் இத்தாலிக்கு ஏற்றுமதி தடைப்படலாயிற்று

பிரான்சிய நாட்டு மந்திரிகளின் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது., சர்வதேசசங்கத்தினர் கையாளும் நடபடிக்கைகளைப் பிரான்ஸியரும் ஒருங்கு சேர்ந்து நின்று நிறைவேற்ற உடன்பட்டுள்ளார்கள். இவ்விஷயத்தில் தாம் ஒருபோதும் பிரான்ஸியர் பின்னிற்காரெனவும் கூறப்படுகிறது

இத்தாலியர்க்கும் அபிசீனியர்க்கு மிடையில் சமாதானத்தைக் கொண்டுவரும் நோக்கமாகச் சில முயற்சிகள் நடக்கின்றன. ஆனல் இத்தாலியர் இதை மறுக்கின்றனர். சமீபத்தில் பிரான்ஸிய தூதர் ரோம்நகரில் முசோலினியைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது. என்ன சம்பாஷித்தார்களென்பது இன்னும் வெளியாகவில்லை.

பின் வந்த புதினப்படி பிறிட்டிஷார் பெற்ரேல் விஷயமாக நடபடிக்கைகளை ஆரம்பிக்க முன்வாரெனச் சொல்லப்படுகிறது. ஏனெனில் பிறிட்டிஷார் ஆரம்பித்தால் நிச்சயமாகப் பிரான்ஸியர் எதிர்ப்பாராம். விஷயமிவ்வாருயின் எல்லாம் அநர்த்தமாகவே முடியும்.

இத்தாலிய விமானங்கள் சென்று குண்டு போட்டமையால் அபிசீனியாவில் பெருநட்டமேற்பட்டுளதாகக் கூறப்படுகிறது. நச்சுப்புகையை உண்டாக்கும் குண்டுகள் பெருங்கெடுதியை விளைத்தனவென்று கூறப்படுகிறது. ஓர் இடத்தில், முதனுள் இரவு ஒரு குழந்தையைப் பெற்ற ஓர் பெண், குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு ஓர் பற்றைக்குள் ஓடி மறையும் போது குண்டில் அகப்பட்டுக் குழந்தையுடன் இறந்தாளாம்.

இரண்டாம் முறையாக இத்தாலியர் ஒரு பெரிய யுத்தம் செய்து அபிசீனியரைத் தோற்கடிக்கப் போவதாக ஓர் செய்தி கூறுகின்றது. இதற்கு வேண்டிய ஆயத்தங்களை இத்தாலிய சேனுதிபதியாகும் பாடகிளியோ செய்கின்ருர். அடுத்தபடியாக அபிசீனியர்க்குச் சொந்தமான அம்பா அலாஜி என்ற நகரம் பிடிக்கப்படுமாம். இது அபிசீனியரால் நன்கு அரண் செய்யப்பட்ட நகரமாகும்.

வடக்குப் போர்முனையில் அபிஸீனியர், இத்தாலியரை மிக உக்கிரமாகத் தாக்கியுள்ளாரெனவும் அது காரணமாக 412 இத்தாலியர் கொல்லப்பட்டனரென்றும் சொல்லப்படுகின்றது.

அபிசீனியர்க்கு வேண்டிய யுத்த ஆயுதங்கள் மிக வதிகமாகப் புறநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. 500 டொன் நிறையுள்ள குண்டுகளும், 30 யந்திரப் பீரங்கிகளும் 10000 துப்பாக்கிகளும் ஒன்றரைக் கோடி காட்டிறிட்ஜ் குண்டுகளும் இறக்கப்பட்டனவாம். இவைகளில் பெரும்பாலாயின இங்கிலாந்திலிருந்தே அனுப்பப்பட்டனவாகும். புகையிரதப்பாதையை ஒருபோது இத்தாலியர் கைப்பற்றிப் போக்குவரத்தினைத் தடைப்பண்ண முன் இவைகளை அபிசீனியர் பெற்றது மிகவும் பிரதானமானதெனச் சொல்லப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தும்பறை | வாக்காளர் தொகை | ....45,936 |
| திரு. A. றத்நாயக்கா | .... | **13,282** |
| ,, S. P. சித்துநாயக | .... | 7,165 |
| ,, H. விஜயரத்ன | .... | 2,193 |
| உபயோகமற்றவை | .... | 37 |
| | கூடியவாக்கு | 6,117 |
| பலாங்கொடை | வாக்காளர்தொகை | ....32,872 |
| திரு. H. A. குணசேகரா | .... | **14,539** |
| கேணல் T. G. ஜெயவர்த்தன | .... | 10,360 |
| திரு. E. W. மத்தீவ் | .... | 7,973 |
| | கூடியவாக்கு | 4,179 |
| மத்துகம, | வாக்காளர்தொகை .... | ....46,225 |
| திரு. C. W. W. கன்னங்கரா | .... | **13,318** |
| திரு. S. சூரியகொடை | .... | 8,859 |
| ,, ஹின்ரேன் ஜெனிவிறத்ன | .... | 3,405 |
| ,, R. H. விஜயமன்ன | .... | 1,862 |
| ,, W. F. B. பெரேரா | .... | 1,051 |
| | கூடியவாக்கு | 4,459 |
| காங்கேசன்துறை | வாக்காளர் தொகை .... | ....47,961 |
| திரு. சு. நடேசன் | .... | **14,827** |
| ,, அ. பொன்னையா | .... | 6,391 |
| | கூடியவாக்கு | 8,436 |
| உகேம | வாக்காளர் தொகை .... | ....60,701 |
| திரு. N. ஹேவவித்தாரண | .... | **18,161** |
| ,, S. அபயவிக்கிரம | .... | 16,711 |
| | கூடியவாக்கு. | 1,449 |

**பிறந்தால் புகழோடு பிறக்க, இல்லையேல் பிறவாமையே நல்லது.**




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ ஹு மாசி மீ கஅஉ

## சர்வஜன வாக்குரிமை

டொனமூர் அரசியற் றிட்டம் அனுட்டானத்துக்கு வந்ததின்பயனாக, அரசியல்வாழ்விலும்—போக்கிலும் எவ்வளவோ மாற்றம் ஏற்பட்டுள்ளதென்பதை இப்போது யாவரும் பிரத்தியட்சத்தில் காண்கின்றனர். ஒரு சிலர்தவிரத் தேசத்தின் முன்னேற்றத்தை நாடித் தொண்டு செய்யும் ஆற்றலும், பெருந்தகுதியும்வாய்ந்த எத்தனையோ பெருமக்கள் அரசாங்கசபைத்தெரிவில்சித்தியடையாது ஒதுக்கப்பட்டனர். இதற்குக்காரணம் நவமாக இலங்கையில் அனுசரணைக்குக் கொண்டுவரப்பட்ட சர்வஜன வாக்குரிமையே என்பது வெளிப்படை. சர்வ ஜனங்களும் அரசியலில் பங்கு பற்ற வேண்டுமென்பது உண்மையேயாயினும் அது, எப்போது ஏற்படவேண்டுமென்பதை நாம் நன்கு அறியவேண்டும். கல்விகற்று அரசியல் விஷயங்களிலும் ஓரளவுக்கு ஞானத்தைச் சனங்கள் பெறுதிருக்கும் வரையும் அவர்கட்கு அரியவாக்குரிமையை அளிப்பதென்பது பெருங்கெடுதியையே கொண்டுவரும்.

இவ்விஷயங்கள் யாவற்றையும் நன்கறிந்தே சேர். பொன். இராமநாதன் சேர். ஜேம்ஸ் பீரிஸ் முதலிய தக்கஅரசியல் ஞானிகள் அக்காலத்திலேயே, அதாவது டொனமூர்த்திட்டம்வகுக்கப்படுங்காலததில சர்வசனவாக்குரிமையை மிகத்திடமாக எதிர்த்தனர். தேசநன்மைக்கு உறுதுணையாக நிற்கக்கூடியவர் யாவரென்பதை ஆராய்ந்தறியும் ஆற்றலைப் பெறாத ஏழைமக்களை, உபாயத்தில் சிறந்த சுயநலப் புலிகள் தம்பக்கத்திற் கிழுத்து தாம் விரும்பியதைப் பெறுவதற்கு உறுதுணையாகக் கொள்கின்றனர். டொனமூர்த்திட்டத்தை மிக ஆதரவோடும், ஆசீர்வாதத்தோடும் அப்போது ஏற்றதலைவர்கள், தங்கள்கடமையைச் சீரிதாக உஞற்றினரோ வெனின், இல்லையென்றே கூறவேண்டும். சர்வசனவாக்குரிமையைக் கட்டித்தழுவி ஏற்றோர் அதைப்பெற்றவுடன் அதற்காகவேண்டியதைச்செய்தாரா? சனங்கட்கு அரசியல்விஷயங்களில் நல்லறிவுச்சுடர் கொழுத்தினரா? இலங்கை வாசிகளின் முன்னேற்றத்திற்குத் தடைகள் யாவை? அவைகளை நீக்குதற்கு வழிகள் யாவை என்பதை எடுத்துக் காட்டினரா? அரசியற்குறைகளை எடுத்துக்காட்டும் ஆற்றல் வரப்பெற்றோரையே அரசாங்க சபையின் அங்கத்துவராய் அனுப்பவேண்டுமென எடுத்தக்காட்டினரா? அன்று! அன்று!! டொனமூர்த்திட்டத்தை அனுசரித்தோர் யாவரும் அதைச் சனங்கட்கு நன்குவிளங்க வைத்தாரில்லை.

சனங்களின் அறியாமையைத் துணைக்கொண்டு, அவர்கள் வாக்குரிமையைப்பெற்று, அரசாங்கசபைஏறலாமென எண்ணியதாலேயே இவ்வளவு கெடுதிகளெல்லாம் வந்தெய்தின. இப்போது அரசியல் விஷயங்களில் தினைத் துணையேனும் அறிவில்லாதவர்களே நாடுகளில் தலைவர்களாக நின்று அரசாங்கசபைத் தேர்தலை நடத்திவைக்கின்றனர்.

ஓர் ஊரவரின் அற்பநயங்களைக் கருதுவதா? தேசத்தின் உயரிய முன்னேற்றத்தை நாடுவதா? என்பது இன்னோர்கேள்வி. அடுத்துவரும் தெரிவு காலங்களில் சனங்களின் உதவியைப் பெறுவதற்காக ஒரு சிறிதும் தேசநலத்திற்குத்துணைபுரியாத—நகைப்புக்கிடமாகும் விஷயங்களில் ஈடுபட்டாற் போதுமெனச் சிலர் எண்ணுகின்றார்கள். விஷயம் இவ்வாறாக, உண்மையான தேசத் தொண்டில் ஈடுபட்டுப் பெருநன்மையைச் செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தோருக்கு அரசாங்க சபையில் இனி இடமில்லையென்றே கூறவேண்டும். இப்போது எங்குந்தலைகாட்டிச் சன்னதமாடுவன யாவை? வகுப்புத் துவேஷம், சாதிவேற்றுமை, குரோதங்கள், பொறாமைகள், சண்டித்தனம், சுயநலவாதம், என்பவைகளே. இவைகட்கெல்லாம் காரணம் அரசியல் ஞானம் கைவரப்பெறாத பாமரர்கட்கு வாக்குரிமையளித்தமையேயாகும்.

கிராமச்சங்கங்கள், நகரசங்கங்கள், என்பனவற்றிற்குப் பிரதிநிதிகள் தெரியப்படுங்கால், ஏற்பட்டகுரோதங்களும் வகுப்புச் சண்டைகளுமே இப்போது அரசாங்கசபைக்கு அங்கத்தவர் தெரிவு செய்யப்படுங்காலும் தலைகாட்டி நின்று பெருங் கெடுதிகளை விளைக்கின்றன. இவை அந்தலையின்றித்தொடரின், இலங்கைக்கு கெடுகாலம் வந்ததென்றே சொல்லவேண்டும். சமீபத்தில் தெரிவில் சித்தியடையாத சிலரைப்பார்த்தால், தற்போதைய நிலை கவலைக்கிடமானதென்றே கூறவேண்டியதாகும். சென்ற 15 வருடகாலமாக தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி, சட்டசபையிலும் அரசாங்கசபையிலும் தொண்டாற்றி வந்த திரு. E. W. பெரேரா அவர்களை இன்னொருவர் பெருந்தொகையான இலக்கத்தால் தோல்வி யடையச் செய்தனர். இவரன்றி மிகஅனுபவமும்ஆற்றலும் வாய்ந்த ஸ்ரீமான் க. பாலசிங்கம்போன்ற அரசியல்வாதிகட்கும்இடமேற்படாதாயிற்று. நிலை இவ்வாறாகநாம்செய்யக்கூடியதுயாது?

அரசாங்கசபையை இலக்காகக் கொள்ளாத தலைவர்கள், முன்வந்து அரசியற் சங்கங்களைஸ்தாபித்துச் சனங்கட்குஅரசியல்விஷயமாகப் போதிய ஞானம் ஏற்படக்கூடியதாகத் தொண்டாற்றமுற்படவேண்டும். பல்வேறு அரசியல் முறைகளையும் விளக்கிக் கட்சிமுறை அரசியல் ஏற்படக்கூடியதாகச்செய்தல்வேண்டும். முகத்துக்கும், பணத்துக்கும், பரம்பரைக்கும், தொடர்புக்கும், உண்மையற்ற அற்ப சுகத்திற்கும் தாம் அரிதாகப்பெற்ற வாக்குரிமையை உபயோகிக்கின்றனர். இவ்வித அலங்கோலமான போக்கினைவிடுத்து ஒருவரின் அரசியற்கொள்கை தகுதி என்பனவற்றை நோக்கி, வாக்களிக்கும் காலத்தையே நாம் எதிர்பார்க்கின்றோம். அரசியல் விஷயங்களில் அதிகம் அனுபவமும் அறிவும் வாய்ந்த தேசாபிமானிகள் இத்தொண்டுகளை ஏற்று நடத்தினன்றி நம் நாட்டுக்கு ஒருபோதும் விமோசனம் கிடையாதென்றே கூறலாம். தெரிவு காலங்களில் பலவற்றையும் கூறி மனவருத்தமடைவதால் ஒரு பயனுமின்று.

## யாழ்ப்பாணப் பிரதிநிதிகள்

அரசாங்கசபைத் தெரிவும் யாழ்ப்பாணத்தில் ஒருபடி நடந்தேறியது. தேர்தல் நடந்த மூன்று பிரிவுகளிலும் சித்தியடைந்தவர்கள் பழைய பிரதிநிதிகளே. சென்றமுறை ஊர்காவற்றுறைப்பகுதியின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீமான் நெ. செல்வத்துரை யவர்கள் அபஜெயமடைந்ததற்குக் காரணம் ஒருபோது இடமாற்றமாகலாம். அவ்வாறே சில வகுப்பினர் கூறுகின்றனர். இப்போது அரசாங்கசபைக்குப் பிரதிநிதியாகத் தெரிந்தனுப்பும் தத்துவம் அவர்களிடமிருக்கும்வரையும் அவர்கள் சொல்வதும் உண்மையாகவேண்டும்.

வெற்றியடைந்த பிரதிநிதிகட்கு எமது வணக்கம் உரித்தாகுக. இவர்கள்மூலமாக யாழ்ப்பாணம் பலபேறுகளை அடையவிருக்கின்றது. அவை எவ்வாறுகுமென்பதை நாளடைவிலேயே நாம் அறியக்கூடும். அரசியற்றிருத்தங்களும் ஏற்படவிருக்கின்றன. பொருளாதாரநிலையிலும் எவ்வளவோ முன்னேற்றம் கைகூடவேண்டும். வியாபாரம் கைத்தொழில் என்பவை விருத்தியடையவேண்டியிருக்கின்றன. பொதுவாக இலங்கைக்கும் பிரதானமாக யாழ்ப்பாணத்துக்கும் நமது பிரதிநிதிகள் நன்மையை நாட்டுவதில் பின்னில்லாரென எண்ணுகிறோம். தெரிவில் சித்தியடைந்தோர் கொள்கைகளை நாம் அங்கீகரியாதிருப்பினும் அவர்கள் சனங்களின் பிரதிநிதிகளாயினமையால் நாமும் அவர்கள் தலைமையை ஏற்கவேண்டியதே. இவர்கள் பெருநன்மைகளைப்புரிந்து நம்நாட்டை முன்னணியில் வைப்பின் அதுவே போதுமானது.

## பெருந் தலைவியின் பிரிவு

பண்டிதர் ஜவஹர்லால்நேருவின் அருமைப் பத்தினியாரும், இந்திய மாதாவின் சுதந்திரப்போரில் ஈடுபட்டுப் பெருந் தியாகஞ் செய்தவரும், உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீமதி கமலாநேரு ஜெனீவா நகரில் சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலை இறந்துவிட்டனரெனக் கேட்டு அளவற்ற துயரில் அமிழ்ந்தலானோம். சென்ற இருவருடங்கட்கு மேலாக இவ்வம்மையார் இருதய நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டனர் என்பதை யாவரும் அறிவர். ஜெர்மனியில் பேர்லின் நகரில் சத்திரவைத்தியம் செய்வித்தாராயினும் இவரைப் பீடித்த நோய் விட்டு நீங்கிற்றிலது. சிறிது சாந்தியடைவதும் பின் பழையபடி கவலைக்கிடமான நிலையை யடைவதுமாக இம்மாதின் தேகநிலை நேரத்துக்குநேரம் மாற்றமடைவதாகவிருந்தது. இவர் சடுதியில் இறந்துவிடுவரென எவராவது எண்ணினது கிடையாது.

இந்தியாவிற்குப் புறப்பட ஆயத்தங்கள் செய்த பண்டிதர், மனைவியாரின் நோய் அதிகரித்தது காரணமாகவே பிரயாணத்தையும் பின்போட்டனர். இம்மாதின் தகனக்கிரியை ஜெனீவாவில் நடக்குமென்றும், பண்டிதர் அத்தியுடன் இந்தியா திரும்புவாரென்றும் புதினங்கள் கூறுகின்றன. அரிய மனைவியை இழந்து துயருறுங்கால், பண்டிதர் காங்கிரஸ் மகாசபையின் தலைமையையும் வகிக்க வேண்டியவராகின்றார். தேசிய நோக்குடன் காங்கிரஸ்சபையில் கலந்து மிக உற்சாகத்துடன் தொண்டாற்றிய இம்மாதின் வீரமே இவருக்கு உறுதுணையாக நின்று, தேசத் தொண்டினை இனிதாற்ற உதவி புரியுமென்பது எமது அபிப்பிராயம். ஸ்ரீமதி கமலாநேரு பன்முறை இந்தியமாதாவின் விடுதலையை நாடிச் சிறைத்தண்டனையும் பெற்றுள்ளார். இவர் பிரிவால் துயருறும் பண்டிதர்க்கும் அவர் ஏகபுத்திரிக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## யப்பானில் பெருங்கலகம்

யப்பானிய போர்வீரர்கள் இப்போது அங்கே நடைபெறும் அரசினர்க்கு மாறாக எழுந்து அநேக அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொலை செய்து விட்டனர். முதன் மந்திரி, பணவிஷய மந்திரி முதலிய 80 உத்தியோகத்தர்கொல்லப்பட்டனராம். நள்ளிரவில் நித்திரையாயிருக்கும்போது போர்வீரர் வீடுவீடாகப் புகுந்து அநேகரைக் கொன்றனர். சிலர் காயத்துடன் உயிர்தப்பினர். இப்போது டோக்கியோ நகரம் இராணுவச் சட்டத்துள் வைக்கப்பட்டிருக்கின்றது. போர்வீரர் சென்று பொலிஸ் ஸ்தானங்களையும் வேறிடங்களையும் கைப்பற்றிவிட்டனர். அநேக உத்தியோகத்தர் வீடுகள் தீக்கிரையாயின. யப்பான் தேச முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்தது வயதுசென்ற உத்தியோகத்தர்சிலரென்றும், அவர்களை அகற்றிவிட்டால் பெருநன்மை வருமென்றும் எண்ணியே இக்கலகம் ஆரம்பிக்கப்பட்டதாம். இப்போது அரசியலை நடத்தும் உத்தியோகத்தரை முற்றாக அழித்துவிடுவதே இக்கலகக்காரரின் பிரதான நோக்கமென்று கருதப்படுகிறது.

## மதிப்புரை

### ஸ்ரீஸ்வயம்ப்ரகாச விஜயம்

ஆசிரியர்: வரகவி—திரு. அ. சுப்பிரமணிய பாரதி. விலை ரூபா 2 அணு8 கிடைக்குமிடம்: விஜாக விஜயம், 26, சுபத்திராள் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இது, இந்துசமயத்தின் அந்தமாகிய சந்யாச ஆச்சிரமத்தை மேற்கொண்டு, சேந்தமங்கலம், ஸ்ரீதத்தகிரி குகாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் ஸ்வயம் ப்ரகாச ப்ரமேந்திர ஸரஸ்வதி அவதூத சுவாமிகள், பிரமச்சரிய நிலையிலிருந்து, துறவு பூண்டு குருதரிசனம் பெற்றதுமுதல், நிஷ்டானுபூதி அடைந்த வரலாறும் பிறவும் கூறப்பட்டுள்ள ஓர்சிறந்த அருள் நூலாகும்.

இதில், சுவாமிகள் செய்த 33 அரிய உபநியாசங்களும், பக்தி, யோகம், ஞானம் என்னும் இவற்றை அடைதற்குரிய சாதனை வகைகளும், சுவாமிகளுடைய திருவுருவப்படங்களும் சில தலங்களின் வரலாறு முதலியனவும் மிளிர்கின்றன. எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றேம்.

## 20 ஆயிரம் போத்தல் சாராயம்

யாழ்ப்பாணத்தில் மூன்று பகுதிகளிலும் நடைபெற்ற தேர்தலில் ஏறக்குறைய 20 ஆயிரம் போத்தல் சாராயம் உபயோகிக்கப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. அபேட்சகர் சார்பாகக் கொடுக்கப்பட்ட போத்தல்கள் பலவிடங்களில் வெளிவராது மறைவாக வைத்து இன்னும் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## இந்திய இராசப் பிரதிநிதி

இந்தியாவில் சென்ற ஐந்துவருடங்களாக இராசப்பிரதிநிதியாகவிருந்துவந்த விலிங்டன் பிரபு அடுத்த ஏப்பிரல் மாதம் 18-ந்திகதி பம்பாயிலிருந்து லண்டனுக்குப் பிரயாணமாவர்.

புதிய இராசப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் லின்லித்கௌ என்னும் பிரபு ஏப்பிரல் மாதம் 7-ந்திகதி பம்பாய் வந்து சேருவார். அவர் 17-ந்திகதி பம்பாயிலிருந்து புறப்பட்டு 18-ந்திகதி டெல்கிநகரையடைவாரென்றும் அன்றுதானே இராசப்பிரதிநிதியாக கடமையை ஏற்று நடத்த ஆரம்பிப்பாரென்றும் சொல்லப்படுகின்றது.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை, யிகழ்வாரை நோவ தெவன்.

## அரசாங்கசபைத் தேர்தல்.

### சுகாதார மந்திரியாரின்வீழ்ச்சி.

| | |
|---|---|
| கம்பளை வாக்காளர் தொகை | 39,863 |
| திரு. R. S. S. குணவர்த்தன | **12,562** |
| ,, D. P. பனபொக்க | 12,378 |
| கூடியவாக்கு | 184 |

முன் சுகாதார, வைத்தியப்பகுதி மந்திரியாராக விருந்த மெஸ். பனபொக்கேஎன்பவர் இம்முறை தேர்தலில் அபஜெயமடைந்தனர்.

பழய மந்திரிமார்கள் எழுவரில் மூவரே இதுவரையில் அரசாங்கசபை யங்கத்தவராகத் தெரியப்பெற்றுள்ளார். இருவர் அபேட்சகராகத்தானும் முன்வந்தாரில்லை. ஒருவர் தோல்வியடைந்துள்ளார். ஏழாவது மந்திரியாரின் நிலையும் ஐயத்துக்கிடமாகின்றது.

| | |
|---|---|
| பதுளை வாக்காளர் தொகை | 44,276 |
| முதலியார் D. H. கோத்தலாவல | **15,795** |
| திரு. வி. சோமசுந்தரம் | 7,299 |
| கூடியவாக்கு | 8,496 |

| | |
|---|---|
| நுவான்வலை வாக்காளர்தொகை | 44,253 |
| DR. N. M.பேரேரா | **15,275** |
| ஸ்ரீ மதி மொலமுரே | 12,300 |
| திரு. D. G. செனறற்ன. | 777 |
| கூடியவாக்கு | 2,975 |

### சனிக்கிழமை (29–2–36)

**களுத்துறை**

1. மெஸ் பத்துவந்துடாவா
2. ,, J. அலுசியஸ் பேர்நாந்தோ
3. ,, D. J. K. குணத்திலக்கா
4. ,, முதலியார் G. W. de. பொன்சக்கா

**புத்தளம்**

1. சேர். H. de. மெல்
2. மெஸ். J. H. இலங்கதிலக்கா
3. ,, J. M. செனநாயக்கா

**அவிசாவலை**

1. மெஸ். F. A. ஒபயசேகரா
2. ,, P. குணவர்த்தன

**கண்டி**

1. மெஸ் G. E. D. ஸில்வா
2. ,, C. N. D. ஜொன்கிளாஸ்
3. ,, அல்பேட்கொடமுன
4. ,, F. P. செனறற்ன

**வேலிகம**

1. மெஸ் D. வன்னியசேகரா
2. ,, A. P. D. அபய சூரியா

**மட்டக்களப்புத் தெற்கு**

1. மெஸ் M. A. L. காரியப்பர்
2. ,, S. O. கனகரத்தினம்
3. ,, K. M. அப்துல் மஜீத்

## யாழ்ப்பாணச் சூத்திரனும் பார்ப்பனப் பெண்ணும்

### தலையில் செருப்படி

யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகத்தின்பொருட்டு மலாய்நாட்டில் சென்றிருந்த கணபதிப்பிள்ளை என்பவர்மீது, இந்தியாவிலிருந்து நாடகக் கம்பெனியாருடன் வந்த ராமலட்சுமி என்னும் ஓர் பார்ப்பனப் பெண், தன்னை முறைப்படி மணம் புரிந்ததாகவும் சிலகாலத்தின் பின் கணபதிப்பிள்ளையுடன் இலங்கைக்கு வந்த பின் மீண்டும் மலாய்நாட்டுக்குச் சென்றதாகவும், பின்னர் இருவரிடையேயும் மனஸ்தாபமேற்பட்டுப் பிரிந்திருப்பதாகவும், தனக்குச் சீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்றும் பார்ப்பனப் பெண்ணால் தாபா நீதிபதி முன் வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணையில் பார்ப்பனப்பெண் தன்னை இந்துசமய முறைப்படி தாலிகட்டி விவாகஞ்செய்ததாகக் கூறினர். கடைசியாக செருப்பினால் தலையிலடித்ததாகவும் பல முறை தன்னை வெளியே தள்ளிவிட்டதாகவும் சாதியில் சூத்திரனென்றும் தெரிவித்தாள். கணபதிப்பிள்ளை என்பவர் தாம் முறைப்படி விவாகஞ்செய்யவில்லையெனச் சத்தியஞ்செய்ததால் நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார்.

## தேர்தல் திருவிழா.

### நாடெங்கும் குரோதம், பகை, கலகம்.

### வித்தியாசாலைகள் தீக்கிரை.

### வீட்டுக்குவீடு ஏச்சும் பேச்சும்.

### துப்பாக்கிச் சூடும் குட்டிக் கலகங்களும்

(தேர்தல் நிருபர்)

சென்ற 22-2-36 சனிக்கிழமை தொடக்கம் இலங்கையின் பல பாகங்களில் தேர்தல் விழா நடைபெற்றுவிட்டது. இன்னும் 7-3-36 வரை சிலவிடங்களில் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. பொதுவாகத் தேர்தல் நடைபெற்றவிடங்களில் குழப்பமும் அமைதியின்மையுமே குடிகொண்டுள்ளதாகக்காணப்படுகின்றன. தேர்தலின் பயனாக வல்லுவெட்டியிலுள்ள ஓர் வித்தியாசாலையும் கொக்குவிலிலுள்ள வித்தியாசாலையின் ஓர் பாகமும் தீக்கிரையாயின. சிலவிடங்களில் குட்டிக்கலகங்களும் வெட்டிப்பேச்சுகளும் வேடிக்கை விநோதங்களும் நடைபெற்றிருப்பதாக அறியக்கிடக்கின்றது. மாத்தளையில் வெற்றியடைந்த அபேட்சகரும் அவர் சகாக்களும் துப்பாக்கியால் சுடப்பட்டனர். நல்லகாலமாக அபேட்சகர் காயத்துடன் உயிர் தப்பினர். எண்மர் மாண்டனர். பலர் வாரூன காயமடைந்தனர். மல்லாகத்தில் ஒருவர்மீது வெடிகுண்டு போடப்பட்டதாம். ஆனால் காயப்படாது தப்பிவிட்டனராம் அளவெட்டியில் விளக்குமாற்றடியும் நடைபெற்றதாம். கோப்பாய், உரும்பராய் என்னுமிடங்களில், வாக்காளரிடையே சிறுச்சிறு கலகமேற்பட்டதாகவும் பொலிசார் தலையிட்டுக் கலகத்தை அடக்கியதாகவும் கூறப்படுகிறது.

இன்னும் பலவிடங்களில் கல்லெறி பொல்லடிகளும் வாய்ச்சண்டையும் நடைபெற்றுள்ளதாம். காங்கேசன்துறைப் பகுதியில் ஓர் மோட்டார் விபத்தும் நடந்ததாகக் கேள்வி.

### ஹோட்டலில் தற்கொலைசெய்த தோட்டத்துரை

கண்டி கிங்ஸ் ஹோட்டலில் சென்ற 29௳ திரு. ஜே. எச். வின்டர் என்னும் கேகாலையிலுள்ள ஒரு தோட்டத்துரை தற்கொலை செய்துகொண்டாரெனச் செய்தி கிடைத்துள்ளது. இவர் முதனாள் ஹோட்டலுக்கு வந்ததும் தமக்கு ஓர் அறை வேண்டுமெனக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். கையில் துப்பாக்கியுடன் அறைக்குட் பிரவேசித்ததும் தம்மை 5 மணிக்குமுன் எழுப்பக்கூடாதெனக் கட்டளையிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார். 5 மணியானதும் வேலையாள் போய் கதவுத் துவாரத்தால் பார்த்தபோது திரு வின்டர் கீழே விழுந்து இறந்து கிடந்ததைக் கண்டு உடனே மனேஜருக்கு அறிவித்தான். முகவாயில் குண்டு பாய்ந்திருந்ததாம். இது தற்கொலையென்றே கருதப்படுகிறது.

### யாழ்ப்பாணச் சிறைச்சாலை நிர்வாகம்

யாழ்ப்பாணச் சிறைச்சாலையை வாரவீதம் ஒரு முறையாவது சென்று பார்வையிட்டு அங்கேயுள்ள குறைகளை மேலதிகாரிகட்கு எடுத்துக்காட்டும் பொருட்டு பின்வரும் நிர்வாக சபையினர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கனம் H. பீற்றீறு (அக்கிராசனர்), மெஸ். S. கனகசபை, மெஸ். D. T. கிருஷ்ணரத்தின, மெஸ். P. மோட்டிமர்.

## மதுபானம் மதிமோசம்

(திரு. த. ஐயாத்துரை)

அலைகடல் சூழ்புவியின்கண் சர்வ ஜீவ தயாபர மூர்த்தியாகிய பரம்பொருளின் கருணையால் உற்பத்தியான பிறவியிற் சிறந்த மானிடப்பிறவியை எய்தப்பெற்ற யாம் செய்யவேண்டிய கருமங்கள் பலவுள. ஆயினும் யாம் உலகில் சீவித்திருக்கக் கூடிய காலத்தில் மூன்றிலொருபாகம் நித்திரையிலும், நன்மை தீமைகளைப் பகுத்தறியக்கூடாத பாலப் பிராயத்தில் சிலகாலமும், எண்ணவும் எண்ணியபடி இயற்றவும் சக்தியற்ற முதுமைப் பிராயத்தில் சிலகாலமும், அவமே போக மிகுதியுள்ள யௌவனகாலத்திலும் நித்திய கர்மானுஷ்டானங்களை முடிப்பதற்குச் சிலகாலமும் சென்றால் எஞ்சியிருப்பது மிகவும் சொற்பமே ஆகவே, யாம்செய்ய வேண்டியவை அனேகமிருப்பினும் எல்லாவற்றையும் ஒருங்கே செய்யக் காலம்போதாதாகையால் இயன்றவரை உலகிற்கும் நமக்கும் நன்மைபயக்கும் கருமங்களைச் செய்துவரவேண்டும்.

இவ்வரும்பெரும் மானிடப்பிறவியை எடுத்த மக்கள் உத்தமநெறிவழுவாது சீவியத்தை நடாத்தியும் 'தங்களால் இயன்ற உதவியை மற்றும் சீவாத்துமாக்களுக்கியற்றியும், தெய்வவழிபாட்டில் ஈடுபட்டும் பிறவித் துன்பத்தை அகற்றுவதை விடுத்து பஞ்சமா பாதகங்களெனக் கூறப்படும் பாவகிருத்தியங்களுக்களாகித் தமக்கும் உலகிற்கும் தீராத்துன்பங்களை உண்டாக்கி மிகவும் சொற்பகாலத்தில் இவ்வுலகின்கண்ணின்று மறைகிறார்கள். மேற்கூறிய தீச்செயல்களில் (மதுபானம் அருந்தல்) மிகவும் கொடியதே. மதுவருந்துவோரை உலகில் ஒருவரும் மதிக்கமாட்டார்கள். அவர்கள் அதிக செல்வாக்குடையவர்களாயினும், உயர்குலத் துதித்தவர்களாயினும் அறிஞரால் ஒதுக்கப்படுவார்கள். மது அருந்துவதினால் இயற்கையாய் அமைந்திருக்கும் அறிவை யிழந்து தந்தை, தாய், மனை, சேய் தமராலும் மற்றும் சகலசனங்களாலும் வெறுக்கப்படுவார்கள். நாயனாரும் "ஈன்றாண்முகத்தேயு மின்னாதலென்மற்றுச், சான்றோர் முகத்துக் களி" யென்று கூறியிருக்கிறார். இன்னும் தம் முன்னோரால் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்தபொருள்களையுமிழந்து ஈற்றில் கடன்பட்டும் அக்கடனைத்தீர்க்கவகை யறியாது "மதுபானம் மதிமோசம்" என்றவாக்குக்கிலக்காய்த் தற்கொலையும் செய்துகொள்கிறார்கள். "துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" (திருக்குறள்) மதுவருந்தல் தான்சாக நஞ்சுண்பதற்குச்சமமென நாயனார் வாக்கிலிருந்து புலனாகிறது.

நாட்டுப்புறங்களில் இயற்கை அன்னையோடு ஒத்துவாழும் நம் நாட்டுமக்கள் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் நம் ஔவைப்பிராட்டியாரின் நல்வாக்குக் கிணங்க பொருளீட்டும் நோக்கங்கொண்டு நகர்ப்புறவாசமெய்தி ஆங்குள்ள அன்னியர்களின் பழக்கவழக்கங்களைப்பின்பற்றித் தம் தேச, சமய, சாதி ஆசாரங்களைவிடுத்தும் தாம் எண்ணியவாறு பொருளீட்டவும் முடியாதிருப்பதற்கு மூலகாரணம் போதையைத்தரும் மதுவருந்துவதேயாகும்.

இப்பரந்த உலகின்கண் பொலிந்துள்ள குடிவகைகள் பெரும்பாலும் மேலைத்தேசத்தவரால் உற்பத்தியாகி அவர்களாலேயே உபயோகப்படுத்தப்படுகின்றன. அவ்விடங்களிலோ குளிர் அதிக மானபடியாலும் அவர்கள் புசிக்கும் உணவோ பெரும்பாலும் அரைவேக்காடுடைய மாமிசமானபடியாலும் அவர்கள் உட்கொண்ட உணவை ஜீரணிக்கச் செய்வதற்கு உஷ்ணமுள்ள மதுவருந்தல் அவசியமே. ஆனால் நம்மவர்களுடைய பூமியோ அதிக உஷ்ணமுள்ளது. நாம் அருந்தும் உணவோ நீரவெந்த சாதமும் காய்கறிகளுமே. அன்றி மாமிசம் புசிப்பவர்களும் சமையல் செய்த பாத்திரத்தோடு கால்வாசி ஜீரணமானதையே சாதத்தோடு புசிக்கிறார்கள். ஆகையினால் நம்மவர்கட்கு மதுபானம் எவ்வகையிலும் நன்மை பயக்கா. ஆனால் அவர்களுடைய அறிவை மயக்கி உலகோர் விரும்பாத் தீச்செயல்களுக்காளாக்கி விடுகிறது. உதாரணமாக:

"ஓர் நற்குலத்துத்தோன்றிய இளவல் தன் ஊரை விடுத்து அடுத்த ஊர் செல்லும் மார்க்கத்தில் ஓர் சத்திரம் மூன்றுவாசல்களுடன் இருப்பதைக் கண்டு முதல் வாசலால் உட்செல்ல எத்தனிக்கையில் அவ்விடம் இருந்த காவலன் பக்கத்தே வளர்த்திய குழவி ஒன்றையும் அருகே வைத்திருந்த கட்கத்தையும் காட்டி உட்புகவிரும்பின் இச் சிசுவைக் கொலை செய்தேக வேண்டுமென்றுரைக்க, ஒரு நேர உணவிற்காக சிசுகத்தி செய்வதோவென்று மறுவாசல் செல்லும்போது, ஆங்கோர் சுந்தரமான இளநங்கை தன்னைக் கூடிக்குலாவி உட்புகவேண்டுமென்றுரைக்க, பரஸ்திரீகமனம் கூடாதெனவெண்ணி, மூன்றும் வாசலால் செல்ல எத்தனிக்கையில் அவ்விடமுள்ள காவலன் ஒரு போத்தல் சாராயத்தைக் கொடுத்து இதில் சொஞ்சமாகுதல் குடித்தால்தான் உட்செல்லலாம் என்றுரைக்கச் சாராயம் கொஞ்சம் குடிப்பதனால் அதிக கெடுதல் இல்லையென்ற எண்ணத்தோடு கொஞ்சம் குடித்துட்சென்றான். (தொடரும்)

## கணவனை விற்ற மனைவி.

ராபர்ட் கிராங்கர் என்னும் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரி ஒருத்தியை மணந்துகொண்டு வாழ்ந்துவந்தார். சிறிதுகாலம் கடந்தபின் அவருடைய இல்வாழ்க்கை திருப்திகரமாய் இல்லாதபடியால் அவர் தம்முடைய முதற் காதலியான இங்கிலிஷ்காரியை மணந்துகொள்ள விரும்புவதாகவும் அதனால் தனக்கு விவாக நீக்கம் அவசியமென்றும் தம்முடைய பிரெஞ்சு மனைவியிடம் கூறினார். அவள் விவாகரத்துக்கு இணங்கவில்லை. ஆனால் ராபர்ட் கிராங்கர்மீது தனக்குள்ள உரிமைகளனைத்தையும் 10,000 பிராங்குகளுக்கு விற்பனைசெய்துவிடுவதாகப் பிரெஞ்சுக்காரி கூறினாள். இந்த வியாபாரத்தை இங்கிஷ் காதலி உணர்ந்து "பேரம்" பேசி 7500 பிராங்குகளுக்கு ராபர்ட் கிராங்கரை வாங்கினாள். கிராங்கர் அதன்பின் தம் இங்கிலீஷ் மனைவியிடம்சென்று அவளுடன் கடந்த 15 வருடகாலமாக வாழ்க்கைநடத்திவந்தார். இப்போது முன்னர் தான் தன் கணவனை விற்பனைசெய்தது செல்லுபடியாகாதென்றும் வாதித்தாள். ஆனால் ராபர்ட்டும் அவரது இங்கிலிஷ் மனைவியும் கோட்டில் தோற்றித் தங்கள் திருமணம் சட்டப்படி நியாயமானதேயென்று வாதித்தனர்.

காலநிலை:—வெய்யில் கடுமையாக எறிக்கின்றது. சென்றவாரம் சிறுமழை பெய்ததினால் எங்கும் வயிற்றுளைவு, காய்ச்சல் முதலிய ரோகங்கள் அதிகமாகப் பரவிவருகின்றன.

---

**புகழுண்டாக வாழாதவர் தம்மை யிகழ்ந்தவரை நொந்துகொள்வதிற் பயனில்லை.**

# தேர்தல் நாடகம்

'ஸ்ரீ'

கொழும்பு வடபகுதி, மத்தியபகுதி, நீர்கொழும்பு, பாணந்துறை, தும்பரு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகியஇடங்கள் முந்தியபிரதிநிதிகளைத் திரும்பவும் தெரிந்தனுப்ப, கலகெதரா, பலப்பிட்டியா, மாத்தளை, திரிகோணமலை இரத்தினபுரி, நரம்மலா, பண்டாரவளை, காலி, ஹொரணு, பலாங்கொடை, உடுகம, மத்துகம, புதிய அங்கத்தவர்களைத் தெரிந்தனுப்பியிருக்கிறது. பெரிதும் போற்றப்பட்ட அரசியல்ஞானி திரு. ஈ. டபிள்யூ. பெரோரா ஹொரணுவில் தோல்வியுற்றிருப்பது விசனிக்கத்தக்கதேயாயினும் சென்ற அரசாங்க சபையில் நுளைவதற்கு இருமுறை போட்டிசெய்து தோல்வியுற்ற திரு. பிரான்சிஸ் டீ. சொயிசா இம்முறை பலப்பிட்டிப் பகுதியிலிருந்து வெற்றி பெற்றுவிட்டார். கொழுமபு தென் பகுதியிலிருந்து போட்டியின்றி சில காலத்தின்முன் அரசாங்கசபையடைந்தவரும் இம்முறையும் அவ்வாறுசெல்வாரெனக் கருதப்பட்டவருமான டாக்டர். ஈ. ஏ. கூறே ஆயிரத்துக்குமேலான தொகையால் தோல்வியுற்றார்.

மாத்தளைப்பகுதியில் B. H. அலுவிகாரா அவர்கள் முந்திய அங்கத்தவரிலும் பார்க்க பத்தாயிரத்துக்குக் கூடிய தொகையால் வெற்றிபெற்றார். இவரை அழைத்துச் செல்லும்போது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதன் காரணமாக, இவர் சிரசில் காயமடைந்து உடனே வைத்திசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். குண்டுபட்டு ஐந்துபேர் உடனேஉயிர் துறந்தனர். திரிகோணமலைப்பகுதிக்கு சட்டசபை அங்கத்தவராக ஐந்து வருடத்தின்முன்னிருந்த திரு. E. R. தம்பிமுத்து தெரியப்பட்டிருககிறார். இவர்டொனமூர்த்திட்டத்தை மிகவும் ஆதரித்தவர். இவருக்கு அதைப்பரீட்சிக்கும் தருணமும் கிடைத்துவிட்டது.

சென்ற அரசாங்கசபையில் காலிப்பிரதிநிதியாகவும் கல்விப்பகுதி மந்திரியாகவுமிருந்த திரு. C. W. W. கன்னங்கரா இம்முறை மத்துகமப்பகுதியில் போட்டிசெய்து நாலாயிரத்துக்குமேலான தொகையால் ஜெயமடைந்திருக்கிறார். இவரது சொந்தப் பகுதியாகிய காலியில் திரு. H. W. அமரசூரியா அவர்கள் இலங்கையில் இதுவரையில் ஒருவராவது பெறாத கூடியதொகை 23,852 வாக்கால் ஜெயமடைந்திருக்கிறார். பருத்தித்துறைப்பகுதி வாக்காளர் தன் மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாகட்டும் என்றவிதமாக திரு. K. பாலசிங்கத்தைத் தெரிந்தனுப்பவில்லையென்று "சிலோன் டெயிலி நியூஸ்" பத்திரிகையும் கூறுகின்றது. யாழ்ப்பாணப்பகுதிக்கு திரு. மகாதேவா சிறுதொகையால் யாழ்ப்பாணப் பெரியார் ஒருவரைத் தோற்கடித்துவிட்டார். சர்வசன வாக்குரிமையின் பெறுபேற்றை இத் தேர்தலிலிருந்து ஒருவர் நன்குஅறியலாம். காங்கேசன்துறைப் பகுதிக்கு முன் அங்கத்தவராயிருந்த திரு. நடேசன் வெற்றிபெற்றிருக்கிறார்.

## தேர்தலில் மோட்டார் விபத்து.

சென்ற 27-ந் தேதி காங்கேசன்துறைப் பகுதியில் நடைபெற்ற அரசாங்கசபைத் தேர்தலுக்கு வந்த மோட்டார் வண்டி றெயில்வே கார்ட் செலுத்திவந்த மோட்டார்ச் சைக்கிளுடன் மோதியது. கார்ட்டும் அவருடன் இருந்த இன்னொருவரும் பலத்த காயமடைந்தமையால் உடனே யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். பொலிஸ் பரிசோதகராகிய திரு. கான் அவர்கள், விபத்து நடந்த இடத்துக்குச் சென்று விசாரணைசெய்து மோட்டார் வண்டிச் சாரதியைக் காவலில் வைத்திருக்கின்றனர்.


# பாரதி நூல்கள்

| | |
|---|---|
| **கவிதைகள்** | ரூ. ச. |
| தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணிமாலை, கண்ணன் பாட்டு, புதியஆத்திசூடி, பாப்பாபாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தது. | 2–75 |
| **வசனங்கள்.** | |
| இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோகஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளது. .... .... | 2–25 |
| **பகவத்கீதை.** | |
| நாகரஅக்ஷரத்தில் மூலமும், பாரதியார்எழுதிய அழகிய தமிழ் உரையும் கலிக்கோ பைண்டு செய்தது. .... | –50 |
| ராப்பர் பைண்டு செய்தது. .... | –35 |
| பாரதியாரும் அவர் நூல்களும். | |
| ஸ்ரீ. ஸி. விசுவநாதன் பி. ஏ. எஸ். டி. யால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. .... .... .... | –28 |
| கதைக்கோத்து .... .... .... | –56 |
| கட்டுரைத் தொகுதிகள். | |
| 1 தத்துவம் .... .... .... | –70 |
| 2 மாதர் .... .... .... | –56 |
| 3 கலைகள் .... .... .... | –56 |
| 4 சமூகம் (அச்சில்) | |

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.**


## "இலங்கையின் இயற்கை மான்மியம்"

கொழும்பு விவேகானந்த வித்தியாலய
ஆசிரியர் R. தம்பு அவர்கள்.

புவிக்குள பொருள்கள் யாவும் பொருந்துமா றிடங்கடோறுங்
கவின்பெற வமைத்து மொன்ருய்க் காணுதற் கிசைந்தான் போலப்
புவிப்படைப் புடையோன் றன்னுற் புரிந்திடு பொருளிற் கொஞ்சஞ்
சவியுற வெடுத்து வேறோர் தாணியாய்ப் படைத்த விழம் 1

இலங்கையி னுப்பணி விலங்கித் தோற்றுநல்
லலங்கலிற் றோன்றுபே ரருவி யெங்கணுந்
துலங்கியே தூங்குதல் சொல்லு நாடிகள்
நலம்பெறு முடலதில் நடத்த லொக்குமே. 2

கன்னலும் வருக்கையாங் கதலி மாவொடு
துன்னியெச் சூழலுஞ் சூழத் தென்றருன்
மன்னியங் குலவுதல் மன்னர் மங்கையர்
துன்னிய சூலொடு தொடர்வ தொக்குமால் 3

எழிலிக ளொருங்குகூடி யெழுந்துமே னிறைந்து வெங்கும்
பொழிதரு மழையாலீழம் பொங்கராய்ப் பொலிந்து நாளுங்
களிதரு வனப்புச்செய்து கன்மனங் கவர்தலாலே
விழியிமைப் புலவோர் சொன்ன விண்ணுல கிலங்கையாமால் 4

முத்தொடு பவளமீருய் முற்றிய மணிகள்யாவு
மொத்திருந் தொளிகள்காலு முண்மையை யுணருங்காலை
யித்தரை யுறுவோற்கெல்லா மின்பொடு துன்பநாமே
ஒத்தளித் திடுவோமென்ன வுரைநவக் கோளைமானும். 5

சோதியாய்த் துலங்குமுத்தி தோய்ந்திடற் களவிலாத
வாதனைப் பட்டேசித்தி வந்துறு மாற்றைநாளுஞ்
சோதியோ டிலங்கித்தோற்றும் துகளறு "கதிரைக்குன்றம்"
பேதியா துரைக்கும்நல்ல பெருங்குரு வொக்குமென்றே. 6

பஞ்சமா பாதகம் பாரில் நின்றுமே
கொஞ்சுதற் கிணங்குமோர் குற்றவாளியு
மஞ்ச லென்றித் தலமாணு மொல்லையிற்
புஞ்செனப் பாவங்கள் பறக்கக் காண்பனே. 7

கந்துக முகத்தளாய காதலன் கனகுமாரி
நொந்துபல் தலங்கடோறும் நோன்புகொண் டிருந்துநீங்கா
வந்துமெம் முருகன்பாதம் வழுத்தவவ் வதனமாறி
இங்தென மிழிருஞ்சித்தி யியலுறு மாவிட்டபுரமால். 8

### சூரிய உதய வர்ணனை.

உண்மையை உணர நல்ல வுள்ளொளி யுளத்தி னூடே
திண்மையா யுதிக்க வையச் சித்தெலாந் தெரிதல் போலக்
கண்ணினுற் பொருளைக் காணுங் கதிமறை திமிர மாய்த்து
உண்மையை உலகம் பாற்க வுதித்தது வால பானு.

### சூரிய அஸ்தமன வர்ணனை.

மண்ணினிற் பொருளை யெல்லாம் வல்லிருண் மறைக்குந் தோறு
முண்மையை உணர்ந்து யானே யொழிதர வுதித்த காலை
அண்ணலை மறந்து நீவிர் அழிபொரு ளிச்சை யின்னும்
பண்ணினு விழைப்பீ ரென்னப் பதுங்கினன் பருதி மேற்கில்.

## அரசாங்கசபைப் புயல்

### வேரோடு பாறிய பழையமரங்கள்

அபஜெயமடைந்த பழைய பிரதிநிதிகள்

1. மெஸ். E. W. பெரேரா (ஹொறணு)
2. ,, D. J. விமலசுரேந்திரா (இரத்தினபுரி)
3. ,, W. H. S. ஜெயசுந்தரா (நாரம்மலை)
4. ,, A. F. கோர்டன் (பண்டாரவளை)
5. ,, M. M. சுப்பிரமணியம் (திரிகோணமலை)
6. ,, ஆர்தர் டீ சொயிசா (பலப்பிட்டியா)
7. ,, P. B. ரணராஜா (கல்கதீரா)
8. ,, W. T. B காராலியட்டா (மாத்தளை)
9. Dr. E. A. கூறே (கொழும்புதெற்கு)

## இதுவரையில் பிணைப்பணம் (ரூபா 1000) இழந்தோர்

பின்வரும் அபேட்சகர்கள் குறிக்கப்பட்ட குறைந்ததொகை வாக்காளரின் சம்மதத்தை (Vote) பெருதமையால் பிணையாகக் கட்டிய பணத்தையும் இழந்துள்ளாராம்.

1. மெஸ். S. F. R. ஜெட்றிக்கோ (கொழும்பு வடக்கு)
2. ,, B. H. டேல் (பண்டாரவளை)
6. ,, P. H. M. பண்டாரநாயக்கா (பண்டாரவளை)
4. ,, W. கோபல்லவ (மாத்தளை)
5. ,, H. விஜயரத்ன (தும்பரு)
6 ,, H. செனிவிரத்தின (மத்துகமா)
7. ,, R. H. P. விஜயமன்ன (மத்துகமா)
8. ,, W. F. P. பெரேரா (மத்துகமா)

10. மெஸ். N. செல்வத்துரை (ஊர்காவற்றுறை)
11. ,, T. G. ஜெயவர்த்தன (பலாங்கொடை)

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு, மெச்சம் பெறாஅ விடின்.

# கலம்பகம்

இலங்கையிலுள்ள ஆப்கானிய முஸ்லிம்களின் பிரதிநிதி ஒருவரை இலங்கை அரசாங்கசபையில் நியமனம் செய்யவேண்டுமென்னும் விண்ணப்பம் ஒன்று ஆப்கானிய முஸ்லிம்களின் கையொப்பத்துடன் தேசாதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறதாம்.

O O O

இலங்கையில் தென்னைப் பொருள் மத்திய விற்பனை ஸ்தலத்தைத் தேசாதிபதியவர்கள் வருகிற திங்கட்கிழமை திறந்து வைப்பாராம்.

O O O

மாத்தளைத் தொகுதியில் நடைபெற்ற அரசாங்கசபைத் தேர்தலில் வெற்றியடைந்த திரு. பி. எச். அலுவிஹாரை என்பவரின் தந்தையாகிய திரு. டி. பி. அலுவிஹாரை என்பவர் சென்ற புதன் கிழமை சுகவீனம் காரணமாக உயிர்துறந்தாராம்.

O O O

சென்ற புதன்கிழமை இரவு கொழும்பு கொச்சிக்கடையில் சட்டவிரோதமான கூட்டங் கூடி யேமிஸ் பெரேரா என்னும் ஒருவரைக் கொலைசெய்தார்களென 9 பேர் குற்றஞ் சாட்டப்பட்டிருக் கின்றனர். இவர்களில் ஒருவர் மறைந்து திரிகிறாராம்.

O O O

பெர்லின் புத்தகசாலையில் பனைஓலையில் அச்சிடப்பட்ட கிறிஸ்தவ பைபிள் ஒன்று இருக்கிறதாம். ஒக்ஸ்வோட் புஸ்தசாலையிலுள்ள பைபிள் புத்தகம் பொடிடப்பியில் வைத்து மூடக்கூடியதான மிகச் சிறியதாம்.

O O O

ஹங்கேரி நாட்டில் பிள்ளைப்பெறாத மலட்டுப் பெற்றோர்களுக்கு மற்றவர்களிலும் பார்க்க அதிக வரி விதிக்கவேண்டுமென ஓரு புதிய சட்டத்தை விதிக்க அரசினர் ஆலோசனைசெய்து வருகின்றார்களாம்

O O O

மருதானைப் பகுதியிலுள்ள ஜெனன மரணப்பதிவு அதிகாரியான டாக்டர் லாசன் குணவர்த்தன என்பவர் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறியமையால் அவரிடத்துக்கு இதுவரை 32 பேர் மனுச்செய்திருக்கின்றனர். இவர்களில்பலர் இங்கிலாந்து வைத்தியப் பரீட்சையில் தேறியவர்களாம்.

O O O

இலங்கையில் இதுவரை 30000 பேர் க்ஷயரோகத்தினால் பீடிக்கப் பட்டிருக்கின்றனராம்.

O O O

தற்போது இலங்கையில் உபயோகப் படுத்தப்படும் கள்ளநோட்டுக்களின் மதிப்பையும் அவற்றைத்தயார் செய்பவர்கள் அனுட்டிக்கும் முறைகளையும் பற்றிப் பொலிசார் ஓர் அறிக்கையை வெளியிடுவார்களாம்.

O O O

லண்டன் பொலிஸ்பகுதியில் பெண்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனப் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறதாம்.

O O O

இந்தியன் றிசேவ் வங்கிக்குச் சென்ற 1935-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி முடிந்த 9 மாசங்களிலும் 56 லட்ச ரூபாய் ஆதாயங் கிடைத்திருக்கிறதாம்.

O O O

புதுடில்லியிலுள்ள சட்டசபையில், றெயில்வே வரவுசெலவு திட்டம் சம்பந்தமாக இராசப்பிரதிநிதி அனுப்பியகடிதத்தை வாசிக்கும்போது காங்கிரஸ் அங்கத்தினருட்படப்பல அங்கத்தவர் எழுந்து நின்று மரியாதை காட்டவில்லையாம்.

O O O

திருமங்கலத்திலுள்ள திரு. பூ பெ. பெ. சிதம்பரநாடார் என்னும் பிரபலஸ்தர் ஒருவரின் வீட்டில் ஒரு கோழி பொரித்த குஞ்சுகளில் ஒன்றுக்கு 4 கால்கள் காணப்பட்டன. அது உடனே இறந்துவிட்டதால் பழுதடையாவண்ணம் திராவகத்தில் போட்டு வைத்திருக்கிறார்களாம்.

O O O

அமெரிக்காவைச் சேர்ந்த நியூசெர்சி என்னுமிடத்திலுள்ள ஒரு விடுதியில் தீப்பிடித்ததால் 19 பேர் மரணமடைந்தனர். 50 பேர் பலத்த காயமடைந்தனராம்.

இலங்கையில் வசிக்கும் ஸ்ரீமதி சீதாபுகாரி என்னும் ஆங்கிலோ இந்தியப் பெண்மணி சென்ற மாதம் 10-ந் திகதி இங்கிலாந்திலுள்ள திரு. டி. சி. பேர்பர்ன் என்பவரது மாளிகையில் "பேய்நாட்டியம்" என்னும் நாட்டியத்தை நடித்துக் காட்டினாராம்.

O O O

எம். ஏ. பட்டம்பெற்ற மலையாள வாலிபர் ஒருவர் சென்னையிலுள்ள ஆரம்ப கல்விப் பகுதியில் 19 ரூபா சம்பளத்தில் கடமை பார்ப்பதற்கு நியமனம் பெற்றிருக்கிறாராம்.

O O O

நீர்கொழும்பைச் சேர்ந்த அகலகேதரை என்னுங் கிராமத்தில் சென்ற 1935-ம் வருடம் எப்பிரல்மாதம் 10-ந் திகதி ஆர். செலஸ்தினு என்பவனையும் ஆர். உக்குகாமி என்னும் பெண்ணையும் கத்தியால் குத்திக் கொலைசெய்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சார்பின் அப்புகாமி என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றதாம். O O O

அக்கிராம் என்னும் ஊரைச் சேர்ந்த 72 வயதுடைய திரு. ஹரிதானநந்தி என்பவர் இரண்டாம் முறையாக ஒரு விதவையை விவாகஞ் செய்திருக்கிறார். இவருக்கு முதல்மனைவியும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளுமுண்டாம்.

O O O

நியூயார்க்கிலுள்ள 3800 தொழிற்சாலைகளில் பெண்கள் ஆடைகளைத் தயாரிக்கும் 105000 பெண் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்திருக்கின்றனராம்.

O O O

ஹொரணைப்பகுதியில் நடைபெற்ற அரசாங்கசபைத் தேர்தலன்று வாக்காளரை ஏற்றிச் செல்வதில் 350 மோட்டார் வண்டிகளும் 100 மோட்டார் பஸ்களும் ஈடுபட்டிருந்தனவாம்.

O O O

தென்சீனாவின் கடற்கரையோரத்தில் பெண் கொள்ளைக்காரி ஒருத்தி சிறு படகுகளின் உதவியைக்கொண்டு கடற்கரை ஓரத்திலுள்ள கிராமங்களில் கொள்ளையடித்து வருகிறாள். இவள் பொறுப்பில் ஆண்களும் பெண்களுமாய பல கொள்ளைக்காரர் இருக்கிறார்களாம்.

O O O

றங்கூனில் மூன்று சில்லுகளுள்ள றிக்‌ஷாவண்டிகள் இருக்கின்றன. அவை கையால் இழுக்கப்படாமல் சைக்கிள்வண்டியைச் செலுத்துவதுபோன்று ஏறியிருந்து செலுத்தக்கூடியதாயிருக்கிறதாம்.

O O O

ஆபிரிக்காவில் சுல்தானாகவிருந்து 1905-ம் ஆண்டில் மரணமடைந்த திப்புதிப் என்னும் முகமதியர் தமது சீவியகாலத்திற்குள் ஏறக்குறைய 275 கோடி ரூபா பெறுமதியுள்ள யானைத்தந்தங்களைச் சேகரித்து வைத்திருந்தாராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 7556.

கோண்டாவில் மேற்கு.

1. இராமலிங்கம்-சிவசுப்பிரமணியம்
2. பெண் அன்னபூரணம்

—வழக்காளிகள்.

சண்டிருப்பாய்:

1. தம்பிராசா-இராசையா
2. பெண் நாகபாக்கியம்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 7556-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1936-ம௵ பங்குனிமீ 30உ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி, பண்டத்தரிப்புக் கோயிற்பற்று, மாகியப்பிட்டியிறை "கொக்கிருப்பன்பிட்டி" நெற்பர. $11\frac{1}{4}$ எல்லை கிழக்கு வெள்ளவாய்க்கால், வடக்கு குளம் மேற்கு சின்னப்பு பெண் தங்கம் மாவுக்குடையவாதனம். தெற்கு மாணிக்கவாசகர் பெண் இராசநாயகி அம்மாளுக்குடையவாதனம். இதன் அடங்கலும்.

Jaffna, 28th February 1936.

**V. K. Chinnathamby,**
Commissioner & Auctioneer.

(92) 1-3-36--1

---

அமெரிக்காவில் மிசோரி என்னுமிடத்தில் வீதிகளுக்குஉபயோகிக்கும் கமல், மண், எண்ணெய் முதலியவைகளுடன் சோப்பும் சேர்த்து உபயோகிக்கிறார்களாம்.

O O O

பலப்பிட்டியில் நடைபெற்ற அரசாங்கசபைத்தேர்தலில் வாக்குரிமைச் சீட்டுப் போடும் பெட்டியொன்றில் சிறிய மீன் ஒன்றும் தூண்டிலும் காணப்பட்டனவாம்.

O O O

பலப்பிட்டித் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் பலாங்கொடை, பட்டப்பொளை என்னும் இரு இடங்களிலும் திரு. ஆர்தர் டி. சொயிசாவுக்கு வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் சீட்டின்றிக் காணப்பட்டனவாம். O O

இவ்வருடத்தில் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்த பாலங்களில், பல போதிய வேலையாட்கள் இல்லாமையால் கட்டமுடியாதெனத் தொழிற்சாலை எஞ்சினியர் அறிவித்திருக்கிறாராம்.

O O O

கோட்டையைச் சேர்ந்த திரு. ஜே. ஜே. கூன் என்பவர் தனது மோட்டார் வண்டியை அசாக்கிரதையாக ஓட்டிச்சென்று ஒரு றிக்‌ஷாவை மோதினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 30 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1839-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் அளவெட்டி சேனாதிராசா இராசகோபால் அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1934-ம௵

| மூ. திகதி | இலக். | பேயர் | ஊர் | விபரம் |
|---|---|---|---|---|
| கார்த். 14 | 1018 | த. ஆறுமுகம் | அளவெட்டி | புரோச் 1 |
| மார். 3 | 1039 | வீ. இராசையா | ,, | சின்னக்காப்பு சோடி 1 |
| மார். 29 | 1074 | அ. கணபதி | ,, | பதக்கம் 1 டிம்மி இல்லாமல் |
| தை 12 | 1106 | நா. மாணிக்கம் | ,, | பொன் கடுக். சோடி 1 வாழி சோடி 1 |
| தை 12 | 1108 | சி. முத்துக்குமாரு | ,, | பின்கோர்க்கி 1 |
| தை 13 | 1110 | ஆ. நாகன் | ,, | கடுக்கன் சோடி 1 |
| தை 19 | 1123 | அ. வலத்தி | தெல்லிப்பழை | அச்சுக்காப்பு சோடி 1 |
| மாசி 3 | 1152 | வ. சரவணமுத்து | அளவெட்டி | அட்டியல் பதக்கம் 1 |
| மாசி 7 | 1157 | க. நடராசா | அளவெட்டி | கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| மாசி 14 | 1166 | சி. கந்தையா | பன்னாலை | கொலிஸ்காப்பு சோடி 1 |
| மாசி 26 | 1171 | அ. கந்தவனம் | மல்லாகம் | அட்டியலும் டிம்மியும் |

விற்பனவு: 1936-ம் ஆண்டு பங்குனிமாதம் 16-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் (அதற்குமுன் எடுக்கப்பட்ட நகைகள் புறநீங்கலாக) மேற்படியாரின் கடையில் ஏலத்தில் விற்கப்படும்.

அளவெட்டி
23-2-36 }

C. கந்தையா செட்டியார்
கொம்மிஷனர்

(89) 23-2-36—3

## ஜப்பானில் கோரசம்பவம்

### மந்திரிகளும் அரசியல்வாதிகளும் கொலை

### இராணுவ வாலிபர்களின் அட்டகாசம்

ஜப்பானில் இராணுவ அதிகாரிகள் மனக்கொதிப்படைந்து தமக்கு மாறான தலைமை உத்தியோகஸ்தர்களையும், மந்திரிகளையும், அதிகாரிகளையும் கொலை செய்வதாகக் கங்கணங்கட்டி நிற்கின்றனர். இதன் பயனாகப் பொக்கிஷ மந்திரியான தக்கஹாஷிப் உள்படப் பலர் கொலைசெய்யப்பட்டனர். இன்னும் பலர் கொலைசெய்யப் படுவதாக அறியக்கிடக்கின்றது.

### ராணுவ ஆட்சி

ஜப்பானில் இப்பொழுது ராணுவஆட்சி "மார்சலோ" நடைபெறுகின்றது. ஜப்பானிய பிரதம மந்திரிஸ்தானம் ராணுவ அதிகாரிகள் கைவசம் அகப்பட்டுவிட்டது. தபால், தந்தி, டெலிபோன் நிலயங்கள் சீர்குலைந்திருப்பதால் நிலைமையைச் சரிவர அறிந்துகொள்ள முடியாமலிருக்கின்றது.

### 80 பேருக்குமேல் இறந்தனர்

இதுவரை இக்கலகங்காரணமாக இறந்தவர்கள் 80 பேருக்குமேலாகுமெனக் கணக்கிடப்படுகிறது. இறந்தவர்களுள் சக்கரவர்த்தியின் அந்தரங்க காரியதரிசி, பிரதமமந்திரி, யுத்த மந்திரி, கல்விமந்திரி முதலியோராவர்.

### கலகத்திற்குக் காரணம்

பழைய அதிகாரிகள் தேசத்தைப் பிற்போக்கான நிலைமைக்குக் கொண்டுபோக முயற்சிசெய்தமையேயாகும். நாட்டின் நலத்தைக்கருதியே கலகம் ஆரம்பித்ததாகக் கலகக்காரர் கூறுகின்றனர். கொலை செய்யப்படுவோரின் விபரம் அடங்கிய பட்டியல் ஒன்று ஆயத்தமாகவிருக்கிறதாம்.

## கொக்குவிலில் தீவிபத்து.

கொக்குவில் சைவாங்கில கலாசாலையில் இன்றுகாலை எட்டரை மணியளவில் ஓர் தீவிபத்து ஏற்பட்டது. கிடுகினால் வேயப்பட்டுள்ள கலாசாலைக் கட்டிடத்தின கூரையின் சிலபாகம் அக்கினிக்கிரையாயிற்று. பேராபத்து நிகழுமுன் தீ அவிக்கப்பட்டது. இவ்விபத்திற்குக் காரணம் என்னவென்பது தெரியவில்லை.

---

## காலி, சி. கா. சோமசுந்தரம் அவர்கள் பிரிவு

காலிநகரிற் தலைசிறந்த வர்த்தகரும், காலிக் கழுவலை சிவன்கோவில் தர்மகர்த்தாக்களுட் தலைவராயிருந்து சிறப்பாகப் பலவருடந் தொண்டாற்றியவரும், பள்ளிமடுவில் கவண்மேந்து சேர்வையராகவிருக்கும் ஸ்ரீமான் சோ. துரைராசா அவர்களின் பிதாவும், காம்பொன் ஸ்ரீமான் கார்த்திகேசு குலசேகரம்பிள்ளை அவர்களது உடன்பிறந்தாருமாய, ஸ்ரீமான் சி. கா. சோமசுந்தரம் அவர்கள் தமது பிறந்த நாடாகிய வேலணையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (22-2-36) இரவு இவ்வுலக வாழ்வை நீத்தாரெனக் கேட்டு மனவருத்தமுற்றோம். இவரது ஆன்மா இறைவன் இணையடி நீழலைச் சார்வதாக. இப்பெரியார் கதிர்காமஞ் செல்வோருக்காகக் காலியில் அமைக்கப்பட்டிருக்கும் மடவிஷயத்தில் மிக வூக்கமெடுத் துழைத்துவந்தவர். இன்னும் பல தருமவிஷயங்களில் ஈடுபட் டுழைத்தவர். இவரது பிரிவாற் றுன்புறும் மனைவி மக்கள் சுற்றத்தார்க்கு எமது அனுதாபத்தை வருத்தத்தோடு தெரிவிக்கின்றோம்.

இவரது ஞாபகார்த்தமாக ஈழகேசரிக்கு நன்கொடையாக உதவிய ரூபா இரண்டு வரப்பெற்றோம். (ப-ர்)

### முல்லைத்தீவு கரைதுறைப்பற்று மகாசனசபை.

சில பொதுசனப் பிரியர்களின் பெருமுயற்சியால் நிகழும் 1936-ம் ஆண்டு மாசித்திங்கள் 15-ம் நாள் சனிவாரத்தன்று மாலை 5 மணியளவில் தனியூற்று C. M. S. பாடசாலை மண்டபத்தில் பிரமஸ்ரீ கு. பரமசாமிக்குருக்கள் அவர்களின் தலைமையின் கீழ் ஷை மகாசனசபை கூடியது. திருவாளர்கள் வே. றிச்சேட் க. சிவப்பிரகாசம், V. J. செல்வரத்தினம், சி. சதாசிவம் க. நவரத்தினம் என்பவர்களால் மகாசனசபையின் இன்றியமையாமையைப்பற்றிப் பேசப்பட்டு இப்பகுதியில் ஓர் மகாசனசபை நிறுவப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் சங்க உறுப்பினர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் : 1. முல்லைத்தீவு மன்னார்ப்பகுதி அரசாங்கசபை அங்கத்தவர், 2. திரு. த. மு. சபாரத்தினம், 3. முதலியார் திரு. க. ஆறுமுகம், J.P.U.P.M., தலைவர்: ஆசிரியர் திரு. வே. றிச்சேட்; உபதலைவர்கள்: திரு. ஆ. சின்னத்தம்பி, திரு. வெ. அண்ணாமலை; செயலாளர்: திரு. V. J. செல்வரத்தினம், திரு. சி. சதாசிவம், தனாதிகாரி: திரு. க. சிவப்பிகாசம்; உபதனாதிகாரிகள்: திரு. க. நவரத்தினம், திரு. சி. சின்னத்துரை.

பின்னர் கரைதுறைப் பற்றின் ஒவ்வோர் கிராமங்களிலிருந்தும் நிர்வாகசபை அங்கத்தவர் பலர் தெரிவு செய்யப்பட்டதோடு மகாசனசபையின் பிரமாணங்களை ஆக்குதற்கு ஒன்பதின்மர் கொண்ட ஓர் உபசபையும் தெரிவு செய்யப்பட்டதும் கூட்டம் இனிது முடிவெய்தியது.

கடி.

### வட்டுக்கோட்டை வித்தியா விநோத சங்க மகா சிவராத்திரிக் கூட்டம்

நிகழும் யுவஆண்டு மாசித்திங்கள் 9-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல், 3-30 மணியளவில் (21-2-36) திருநாவுக்கரசுநாயனார் வித்தியாசாலை மண்டபத்தில் ஷை சங்கப்போஷகர் திரு. க. குமாரசாமி அவர்களினதும், தலைவர் திரு. கா. கந்தசாமி ஆசிரியர் அவர்களினதும் ஆதரவின்கீழ் சிவபிரான் பூசையின்பின் ஓர் மகாசபைக் கூட்டம் ஆரம்பமாயது. அத்தருணம் சங்க அங்கத்தவர் காண்போர் ஆனந்தமுறும்வண்ணம் கரபர்தாட்டம் ஆடினர்.

பின்பு 5-30 மணியளவில் தலைவரவர்கள் சங்கத்தின் நோக்கங்களையும் அவர்களின் ஒற்றுமை, அன்பு, ஒழுக்கம், ஊக்கம், ஆதியவற்றைப் பற்றியும் சொற்பொழிவுநிகழ்த்தினர். கடைசியாக சங்க அங்கத்தவர்கள் குறிப்புரை கூறியதும், யாவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அதன் பின்பு கூட்டம் 8-மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

கடித.

### அல்வாய் தெற்கில் பொலிஸ் பாதுகாப்பு

#### பந்தல்போட இடங்கொடுப்பார் இல்லை

சென்ற 21–2–36 வெள்ளிக்கிழமை காலையில் மறுதினம் நடக்கவிருந்த வாக்குச்சீட்டுத் திருப்பணியை முற்றுவிக்கும் நோக்கத்தோடு அல்வாய் தெற்கு சைவப்பிரகாச வித்தியாசாலைக்குச் சமீபத்தில் திரு. க. பாலசிங்கம் அவர்களின் காரியஸ்தர்கள் பந்தல்போடத் தொடங்கினார்கள். அங்கே பந்தல்போட நிலங்கொடுப்பார் எவரும் இல்லை. பந்தலுக்கு இடம் அகப்படாமற்போகவே அவ்வேலை நடைபெறவில்லை. அல்வாயிலே நூற்றுக்குத் தொண்ணூறுவீதம் திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு ஆதரவு கிடைக்கக்கூடிய குறிப்புக் காணப்பட்டது.

பெரும் கலகம் உண்டாகும் என்று எண்ணித் தந்திச் சமாசாரம் அனுப்பிப் பொலிஸ்பகுதியார் உதவியைப் பெற்றுத் தமது காரியத்தை திரு. பாலசிங்கம் நிறைவேற்றினார்.

ஆயுதந் தரித்த பொலிஸ்படையினர் அவ்விடத்திலே காவல்செய்து நின்றனர். (22–2–36) சனிக்கிழமை பருத்தித்துறைப்பகுதித் தெரிவு குறிப்பிட்ட இடங்களில் அமைதியாகவும் கூடியவரையில் ஒழுங்காகவும் நடைபெற்றது. பொலிஸ்பகுதியினர் வெகுகவனத்தோடு கலகம் ஏற்படாமல் காவல்செய்து நின்றனர்.

டொனமூர்த் திட்டம் அனுட்டானத்தில் வந்திருப்பதில் நமது இலங்கைவாசிகள் யாவருக்குமே அரசியல்ஞானம் ஆரம்பமாகியிருக்கிறது. இந்த இராசாங்க ஞானம் ஆண்களுக்குமட்டுமல்லப் பெண்மணிகளுக்குங்கூட நாளுக்குநாள் வளர்ந்துவந்தால் முடிவில் முழுநன்மையு முண்டாகலாம் என்னும் அரசியல் விஞ்ஞானிகளின் கருத்தை ஆதரித்து வாழ்த்தினாலும் இப்போது முதலிலே நாம்—அனுபவிக்க முன்னே நிற்பன அடிபிடி, பகை, எரிச்சல், பொறாமை, கட்குடி, பொருள் விரயம், உயிர்ச்சேதம், அநீதி என்பனவேயாம். இவைகளைப் பெற்று வளர்த்து வருகிற டொனமூர்த் திட்டத்தை நோக்கி மூன்றுமுறை கும்பிட்டுத் தண்டம் சமர்ப்பித்து வாயார வாழ்த்துவோமாக.

"ஞானசித்தி"


**ஈழமண்டல திருத்தலத் தேவார திருப்புகழ்**
(குறிப்புரையுடன்)
விலை சதம் 5
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.




வெளிவந்துவிட்டது !! வெளிவந்துவிட்டது !

## "நாட்டுச்சீவனசாஸ்திர பாடபுத்தகம்"

## A Text Book of Rural Science (Tamil)

ஆக்கியோன்: சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர், திரு. இ. தர்மலிங்கம் அவர்கள்.





இந்நூல் தமிழ் J. S. C., S. S. C., ஆசிரிய தராதரப் பத்திர வகுப்புகளுக்குரிய பாட அட்டவணையை முற்றாக அநுசரித் தெழுதப்பட்டது.

சமீபத்தில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அருந்துணையாயுள்ளது.

சிறந்த விஷயங்களைக் கொண்டது.
**பல சித்திரங்களைக்கொண்டு மிளிர்வது.**


வண. சுவாமி ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம், அரசினர் மாதிரித்தோட்ட அதிபர் திரு. M. R. M. ஜெபரத்தினம், வித்தியாதரிசகர் திரு. சே. தியாகராசா, அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. அ. பொன்னையா, பரமேஸ்வரக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் திரு. சு. நடேசபிள்ளை ஆதியோரினது மதிப்புரையைக் கொண்டது.

**இந்நூலைப்பற்றி வித்தியாதரிசகர் திரு சே. தியாகராசா அவர்கள் அளித்த மதிப்புரை.**

"நமது நாட்டில் நூல்களியற்று மாற்றலுடையார் பலரிருந்தும் இளஞ்சிறாரது அறிவினை வளர்க்கும் நூல்களை நமது தாய்மொழியில் ஆக்கி யுதவியவர்கள் மிகச் சிலரே. மாணவர்களது அறிவினை வளர்ப்பதற்கு நாட்டுச்சீவன சாஸ்திரமும் வேண்டப்படுமெனக் கொள்ளப்பட்டு இப்பொழுது சிலகாலமாகப் பாடசாலைகளிற் கற்பிக்கப்படுகின்றது. புதிதாக இக்காலத்துக் கற்பிக்கப்படு மிப்பாடத்தினை ஆசிரியர்களும் மாணவர்களும் நன்குணருமாறு பல நூல்கள் வெளிவருதல் இன்றியமையாதது. இலங்கை நாட்டின்கண்ணுள்ள இயற்கைப் பொருள்களை இலங்கைவாசியாகிய ஒருவர் தமது நேர்முக அறிவுகொண்டு மாணவர்கட்கு விளக்குவதே பெரிதும் பொருத்தமுடையது. இப்பொழுது பாடசாலைகளி லுபயோகிக்கப்படும் நூல்கள் பெரும்பாலும் பிறநாட்டவர்களா லியற்றப்பட்டவைகளேயாம். மாணவர்கள் முதற்கண் தமது நாட்டுப்பொருள்களை யறியவேண்டியதே முறையாகும்.

ஆகவே இந்நூலை வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்திற்கேற்ப மாணவர்கள் இலகுவில் விஷயத்தினை விளங்கும்வண்ணம் பல விளக்கப் படங்களுடன் சிறப்பாகத் திருவாளர். இ. தர்மலிங்கம் எழுதியுதவியது பெரிதும் பாராட்டற்பாலதாம்."





முன்னூறு பக்கங்களுடையது

குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது

வடஇலங்கைத் தமிழ்நூற்பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது.

**விலை ரூபா 2.** தபாற்செலவு சதம் 25.

கிடைக்குமிடம்: தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

# திரு அண்டப்பகுதி உரைவிளக்கம்.

[சின்னக் காஞ்சிபுரம், திரு. சேனாபதி நடேசசெட்டியார் அவர்கள் எழுதியது]

(முற்றொடர்.)

ஒரு நூறு கோடி அணுவும், அணுத்தன்னிய புரையும் புணரிய நிலையது தோற்றம்—நூறுகோடி அணுக்கள் ஒன்றுதிரண்டு புறத்தோடுடன் புணர்ந்து வளர்ந்துநிற்றல் அண்டத்தின் முதல் நிலையாகிய தோற்றம் ஆகும்;

அண்டத்தின் வளப்பெருங்காட்சி சிறப்பு—அணுத்திரள் திண்மையுற்றுப் பரந்து பருத்துப் பூரணவளர்ச்சியடைந்த நிலையே சிறப்பு அல்லது வளர்ச்சி ஆகும்;

உண்டையின் நீக்கம் மாப்பேரூழி—வளர்ச்சி முடிவில் தளர்ச்சி தோன்ற அண்டத்தின் உள் உறை ஜீவ அணுவாகிய உண்மையின் நீக்கத்தால் எஞ்சிநின்ற ஜடப்பொருளின் அழிவே அண்டத்தின் அழிவுமாகும்;

சூறைமாருதத்து எறியது தூலத்தும்—தென்றல்முற்றிப் பெருங்காற்றானதால் எதிர்ப்படும் எதையும் அழிக்கவல்ல வேகங்கொண்டுவீசும் சூறுவளியின் வீசுதலில் தூலம் விளங்குகிறது. வளியின் எறியது சூக்குமத்தும்—தென்றல் மாருதத்தின் இனிய மெல்லிய வீசுதலில் சூக்குமம் விளங்குகிறது.

முழுவதும் கொட்கப் பெயர்க்கும் குழகன்—குழகன் (=குழைந்த உருவினன்) ஆன இறைவன் தனது சூக்கும சத்தியால் பல ஜீவ அணுத்திரளைச் சுழலச்செய்து அவற்றின் சேர்க்கையால் திண்மையுற்ற புறத்தோல் அமைத்து அணுத்திரள்களை வளர்த்து அண்டத்தின் தோற்றம், சிறப்பு, ஈறு ஆகிய மூன்று நிலைகளும் மாறி மாறி வருமாறு அமைப்பன்.

குழக உருவம்—குழைந்த தன்மையது—Soul Element or Consciousness—விஞ்ஞானதாது. "This stands as the sixth element to be added with five other elements of Nature. This soul element is a volatile, odoriferous principle capable of solution in glycerine. This is called Psychogen which is present not merely in the body as whole but in every individual cell, in the ovum and even in the ultimate elements of Protoplasm. So says the German Professor Dr. Jager. பெரியோன் தெரியின்............பழையோன்—குழகனை இறைவனே கணக்கற்ற ஜீவப்பொருள்களைப் படைக்கும் வேதியனும் தானே ஆவன், குழந்தை வளர்ந்து பெரியோனாகுங் காலத்துத் தான் பல்வேறு குழந்தைகட்குத் தந்தையாய் அவர்கள் தோற்றத்திற்குக் காரணனாவதுபோல ஒவ்வொரு ஜீவஅணுவும் தன்னிடமிருந்து பல்வேறு ஜீவஅணுக்கள் தோன்றிப் பல்குதற்குக் காரணமாகும் நிலையே ஈண்டு குறிப்பிடப்படுகின்றது எனலாம்.

படைத்தவை....காக்கும் கடவுள்—அங்ஙனம் தோற்றுவிக்கப்பட்ட ஜீவ அணுக்களின் வளர்ச்சிக்குக் காரணமான மாலவனும் இறைவனே; மால்—கருமை—இருள்—மறைவு. வளர்ச்சி மறைவில் நிகழ்கிறது. மரத்தின் வளர்ச்சிக்குக் காரணமான வேரும் மண்ணில் இருண்ட இடம் தேடிச் செல்கிறது. மேல்நோக்கும் முளை பிரமனையும் கீழ்நோக்கும் வேர் மாலவனையும் குறிப்பன எனலாம். கரப்பவை கரப்போன்—வளர்ச்சி முடிவில் தளர்ச்சி தோன்றி முதிர்ந்து ஜீவப்பொருள் நீங்க எஞ்சிநின்ற ஜடப்பொருள் அழியுங்கால் ஜீவ அணுவைத் தன்னுள் அடக்கி நிற்பவன்; கரப்பவை கருதா (=கருதும்) கருத்துடைத் திருக்குறு கடவுள்—வித்தானது தன்மாட்டு அடங்கிய ஜீவ அணுவை முளை தோன்றும்காறும் காத்து காத்து வருதல்போல, இறைவனும் தன்னுள் அடங்கிய ஜீவ அணுவை அது மீண்டு தோற்றமெய்தும் வரையும் அழிவு நேராதபடி காப்பன்;

இக்கருத்தே,

"மணிவிளங்கு திருமார்பில் மாமலராள் வீற்றிருப்ப" என்ற தேவபாணியிலும்,

"அழிப்பது நின் தொழில் என்றே அறைந்தாலும் உயிர்எல்லாம், ஒழித்தவற்றின் உணர்வுகளை ஒருவாமல் உடன்நிறுத்திப், பழிப்பின்றிப் பல்காலும் இப்பரிசே பயிற்றுதலின், அழிப்பதுவும் இல்லையால் ஆக்கதுவும் அருளன்றே" என்னும் தாழிசையிலும் குறிக்கப்படுதல் காண்க.

சமயத்து அறு அறுவகையோர்க்கும்வீடுபேறாய்நின்ற கிழவோன்—இறைவன் திருவடிசேரும் மார்க்கங்களை அறுதியிட்ட, சைவம், சாத்தேயம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், பைரவம் என்னும் அறு சமயங்கட்கும் தானே முடிவுபொருளாய்நின்ற தலைவன்; விண்ணோர்பகுதி கீடம் (=கிரீடம்) புரையும் கிழவோன்—தேவர்க்கும் சூடாமணியாய் விளங்குபவன்; என இறைவனது அருட்டிறத்தை இயற்கைமேல் வைத்து வியந்தவாறும்.

"நாடொறும்......முன்னோன்காண்க முழுதோன்காண்க" என்னும் அடிகளில் இறைவன் அஷ்டமூர்த்தியாய் நிற்பவன், அகிலாண்டகோடி பிரமாண்டநாயகன் என அவனது சர்வகர்த்திருத்துவம் வியக்கப்படுகின்றது.

"நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க; இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க."

## சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னாகம்.


(50) 1-12-35×12-36.

கவரத்தக்க அழகை யாவரும் அடையும் வழி எது என்பதை ELISSA LANDI என்ற ஸினிமா மங்கை இங்கு கூறுகிறாள்.











Star of Paramount Pictures.

எலிசா லாந்தி என்ற ஸினிமா ஸ்டார் லக்ஸ் டோய்லெட் ஸோப்பைப் பற்றி சொல்வதை வாசித்தீர்கள். ஹொலிவுட்டிலும் இங்கிலாந்திலும் உள்ள 857 பிரபல ஸினிமா நடிகைகளில் 846 பேர்கள் இவள் சொல்வதை ஆமோதிக்கிறார்கள். இந்த பரிமள ஸோப்புத்தான் தங்கள் அழகை காத்துவருகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். உடம்பின்மேல் மயிர்க்கால்களடியில் அடையும் அழுக்கை, லக்ஸ் டோய்லெட் ஸோப்பின் பொங்கி எழும் வெண்மை நுரை அறவே நீக்கிவிடுகிறது. அப்படி சுத்தப்படுத்தாத போனால் உங்கள் சருமத்தின் அழகைக் கெடுத்துவிடும் எல்லா நாடுகளிலும் உள்ள பெண்கள் இந்த இரகசியத்தை அறிந்து லகஸ் டோய்லெட் ஸோப்பையே தவறாமல் உபயோகித்து வருகிறார்கள்.

நீங்களும் ஏன் லக்ஸ் டோய்லெட் ஸோப்பை அவர்களைப்போல் உபயோகிக்கக்கூடாது? அதன் பரிமளமிகுந்த வாசனையையும் வெண்மை நிற நுரையையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். இன்றே ஒரு கட்டி வாங்குங்கள்.




LUX TOILET SOAP

X-LTS 363-288A TAMIL

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

கீர்த்தியில்லா வுடலைச் சுமந்த நிலத்தின் விளைவு குன்றும்.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 2 காட்சி 6

இடம்:—விராடநக ரெல்லையிற் காளிகோயிற் சந்நிதானத்திலுள்ள வன்னிமரத்தடி.

பஞ்சவரும் துரோபதியும் வருகின்றனர்.

தருமர்:—தம்பிமாரே! எமது கானகவாழ்விற் பன்னிரண்டாண்டுகளும் நிரம்பாநின்றன. இனி நாட்டின் கண்ணே ஓராண்டு கரந்துறைய வேண்டுமல்லவா! கரந்துறைவதற்கு ஏற்றவோர் நாடு எங்கிருக்கின்றது? நாம் அங்ஙனம் ஓர் நாட்டின்கண்ணே சஞ்சரிக்குங் காலத்தில், யாராவது எம்மை இன்னாரென் றறிந்துவிட்டால், மீண்டும் காடுறைய வேண்டுமன்றோ! அங்ஙனம் நேரின் கரையிற்சேர்ந்த கலத்தைக் கவிழக்கொடுத்த செட்டி போலாவோம். ஆதலின் நன்றாராய்ந்து ஓர் தகுதியான நாட்டின் பெயரைக் கூறுவீராக.

அரி—அண்ணா!

எலிதனக்கு நிழல்தேடி விடவாவின்
படமொடுங்கும்; எரிகானீங்கி
வலிதனக்கு மிகவிருக்கும் விராடவள
நாடடைந்து வாழ வேண்டும்;
கலிதனக்குப் பேர்போன கயவர்கிட்டப்
போவதோ? கருணை வேந்தே!
புலிதனக்குப் பசித்ததென்று புல்லதனை
மேயுமோ? புகலு வீரே!

எலியானது வெய்யிலைத் தாங்க முடியாமற் பாம்பினது படத்தின் நீழலிலொதுங்குந் தன்மையாய் நாமிந்தக் கொடிய காட்டைவிட்டு நீங்கினால், விராட நகரத்துக்குச் சென்று வாழ்தலே பொருத்தமாகும். "புலிபசித்தாற் புல்லைத்தின்னுமா?"

வீமன்:—அண்ணா! விராட நகர்க்கு நாம் சென்று வாழ்வது நன்மையாகும். ஆனால் நாமங்குறையுங் காலத்தில், மற்றவர் எம்மை அறியாவண்ணம் கரந்துறைவதுதான் எங்ஙனம்? நாம் வேடம்மாறிச் செல்லவேண்டாமா?

சகாதே:—அண்ணா! தாங்கள் ஓர் முனிவரின் வேடந்தாங்கிக் கெங்கமுனி என்னும் நாமத்தோடு செல்லவேண்டும். வீமண்ணா ஓர் மடைப்பள்ளி வேலையாளின் வேடந்தாங்கிப் பலாயணன் என்ற நாமத்தோடு செல்லவேண்டும். இளையண்ணா ஊர்வசியின் சாபத்தாற்பெற்ற பேடிரூபத்தைப்பெற்றுக்கொண்டு பிருகந்நளை என்ற பெயரோடு செல்லவேண்டும். மற்றண்ணா ஓர் பரிமருத்துவனாய் வேடந்தாங்கிச் செல்லவேண்டும். யான் ஓர் மாடு மேய்ப்பவனாகித் தந்திரபாலன் என்ற நாமத்தோடு செல்வேன். துரோபதி ஓர் வண்ணமகளின் உருவம்பெற்று விரதசாரணி என்ற பெயரோடு செல்வாளாக.

தருமர்:—தம்பிமாரே! இங்ஙனமாய் எமது உருவங்களை மாற்றிக்கொண்டு செல்வோம். நாட்டிற் கரந்துறையும்போது எவராவது எம்மீது சந்தேகங்கொள்ளாமல் நடந்துகொள்ள வேண்டும். இப்போது எமது உடைகளை மாற்றிக்கொள்வோம். (உடைகளையும் படைகளையுங் களைந்து வன்னிமரப்பொந்தில் வைத்துத் தம் வடிவங்களை மாற்றி விராடனது அரண்மனையை நோக்கிச் சென்றனர்.)

காட்சி முடிகிறது.



## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 6285.

அளவெட்டி
சின்னத்தம்பர் கார்த்திகேசு
வழக்காளி

மாகியப்பிட்டி
1. சின்னத்தம்பர் அம்பலவாணர்கைம்பெண் வள்ளியம்மைப்பிள்ளை (தற்போது வியாங்கொடை)
2. அம்பலவாணர் கதிர்குல பாண்டியர் (தற்போது வியாங்கொடை)
3. அம்பலவாணர் வீரசிங்கம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 6285-ம் இலக்க வழக்கில் 1936-ம் ௵ மாசி௴ 15-ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் ௵ பங்குனி௴ 16-ந் தேதி திங்கட்கிழமைபிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோயிற்பற்று மாகியப்பிட்டிஇறை "காளிங்கருயன்கட்டு வயல்" பரப்பு நெல் இலாச்சம் 15 அ.

எல்லை கிழக்கு குளவாய்க்கால், வடக்கு குளம், மேற்கு பொன்னம்பலம் கைம்பெண் பொன்னம்மாவின் ஆதனம், தெற்கு அப்பச்சிப்பிள்ளை பராசசிங்கத்தின் உரிமைக்காறரின் ஆதனம்.

யாழ்ப்பாணம், 1936-ம்௵ மாசி௴ 22௳

C. Kandiah Chettiar.
கொம்மிஷனர்.

(91) 1-3-36—1



## பதின்மூன்றாவது வருட மகா சிவநிசிக் கொண்டாட்டம்

நிகழும் யுவவருஷம் மாசிமாதம் ௯-ந் திகதி (21-2-36) வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரிக் கொண்டாட்டத்தை முன்னிட்டுத் தென் கோவை வீரபத்திரேஸ்வர சுவாமி கோவிலில், பகல் நவோத்திரசத (௧௦௮) கலச சங்காபிஷேகமும், இரவு 6 மணிதொடக்கம் தென் கோவை பிரம்மஸ்ரீ சோ. இரத்தினசபாபதிசர்மா அவர்களைத் தலைமையாய்க்கொண்ட ஷெ கோவிற் சுக்கிரவாரப் பஜனைக்கோஷ்டியாற் பஜனையும், பின் திரு. வடிவேலுசுவாமிகளவர்களால் (இணுவில்) "திருநீலகண்டநாயனார்" சரிதம பக்திததும்பிய கதாப்பிரசங்கமும், அதன்பின் திரு. சு. நடேசபிள்ளை B. A; B. L.,-F. R. E. S அவர்களால் "சிவநிசு" என்னும் விடயம்பற்றிய சிறந்தவோருபந்நியாசமும், பின்னர் திரு. ஆ. கணபதிப்பிள்ளை கொழும்பு முகத்துவாரத் தாசினர் கலாசாலைப் பிரதமாசிரியரவர்களால் "தடாதகைப்பிராட்டியார் திருமணம்" பக்கவாத்திய சகிதமாகவும் கேட்டோர் அன்பு மின்பு மாவலு முறும்வண்ண மமைந்த கதாப்பிரசங்கமும், பின் திரு. க. வே. சிதம்பரப்பிள்ளை கோவைச் சரவணபவானந்த வித்தியாசாலைப் பிரதமாசிரியரவர்களால் "சிவதருமம்" எனும் பீடிகைகொண்ட அருமை பெருமை நிறைந்த வுபந்நியாசமும் நிகழ்த்தப்பட்டன.

ஈற்றில், வீரபத்திரேஸ்வரப் பெருமான் சர்வாலங்காரங்களுடனும், அன்பர்களரவொலியுடனும், பல தேவோபசாரங்களுடனும், அடியார்க் கநுக்கிரகிப்பான் றிருவுலாப் போந்தருளியதும் அருணோதயஞ் சமீபித்தலி னன்பர் யாவரும் பெருமான் காட்சிகண் டின்புற்றிடக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

—கடித.

## மலாயாவில் சங்கீத விருத்தி

[சங்கீத அபிவிருத்திச் சபா மாணவிகளால் விக்டோரியா நாடக மண்டபத்தில் 1-2-36 சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்ற சங்கீதக் கச்சேரியில் அக்கிராசனர் அவர்களின் சொற்பொழிவுகள்]

சங்கீதாபிமானச் செல்வர்காள்! செல்விகாள்!

இச்சங்கீத காலாட்சேபத்தை எமது இராசப்பிரதிநிதியாகிய தேசாதிபதியவர்களின் மகிமைவாய்ந்த ஆதரவின்கீழ் நடாத்துவதாக உத்தேசித்து அதற்குவேண்டிய நடவடிக்கைகளை ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தேம். பிரித்தானிய சாம்ராட்சியம் முழுவதும் ஏற்பட்டிருக்கும் துக்ககரமான இவ்வமையத்தில் தேசாதிபதியவர்களை இவ்வித பகிரங்கமான நிகட்சிக்குத் தமது ஆதரவை அளிக்குமாறு வேண்டுவது முறையன்றென விடுத்தேம். காத்திராப்பிரகாரமான இத்துக்கசம்பவம் நிகழ்வதற்கு முன்னதாகவே, இந்நிகட்சிக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளேமாதலின், திடீரென இந்நிகட்சியைப் பின்போடுவதற்கு இயலாமலிருந்ததைப்பற்றி இறம்பவுந் துன்புறுகின்றேம்.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலே அடையவேண்டிய தேகவியோகத்தை, மாட்சிமை தங்கிய ஐந்தாம்ஜோர்ஸ் மன்னர்பிரான் அடைந்ததைக்குறித்து இறம்பவும் மனம்நொந்து புதிய அரசராகிய எட்டாம் எட்வட்டரசர்க்கும், இராச குடும்பத்தார்க்கும் எமது ராசபக்தியோடுகூடிய மனப்பூர்வமான அநுதாபத்தைச் சமர்ப்பிக்கின்றேம்.

பரோபகார சிந்தையோடுகூடிய உங்கள் ஆதரவை இன்று எங்கட்களித்ததற்காகச் சங்கீத அபிவிருத்திச் சபாவின் சார்பில் எனது மனோரம்மியமான நன்றியை உங்களெல்லோர்க்குஞ் செலுத்துகின்றேன்.

மக்கட் பிறப்பினர்க்கேயன்றி விலங்குமுதலிய சீவராசிகட்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியதும், ஆன்மலாபத்திற்குவேண்டிய ஈசுரபக்தியை அளிக்கக்கூடியதுமான சங்கீத ஞானத்தையும், அதனோடு சம்பந்தப்பட்ட ஓவியம், சித்திரம் முதலிய இதர கலைகளையும் தமிழ்ச்சாகியத்தார்க்குப் பயிற்றும் நோக்கமாக எமது சபாவானது இற்றைக்குப் பன்னிரு வருடங்கட்குமுன் குவாலாலம்பூரில் ஸ்தாபிக்கப்பெற்றது. கலைவல்லியின் கடாட்சத்தால் எமது முயற்சியானது நாளடைவில் நாம் காத்திருந்ததற்கு இறம்பவும் மேலதிகமாகப் பூர்த்தி அடைந்திருக்கிறது. இற்றைவரை ஏறத்தாழ ஐந்நூறு மாணவர்வரை எமது சபாவில் கற்றிருக்கின்றனர். சங்கீதத்தைக் கண்டசுத்தியாகப் பயிற்றுவதோடமையாது, தோல், துளை, நரம்பு, காஞ்சனம் முதலிய சதுர்வித சங்கீதக்கருவிகளையும் முறைப்படி கையாளத்தகுந்த பயிற்சியையும் எமது மாணவர்க்குக் கற்பித்து வருகின்றேம். சங்கீதங்கலையைக் கற்பிப்பதோடு, நற்போதனையைப் புகட்டக்கூடிய சரிதைகளை நாடகரூபமாக அமைத்து, வித்பாதுரர்கட்குக்கற்பித்து மேடைகளில் நடித்துக்காட்டவும் பயிற்றி வருகின்றேம். ஆதியிலே சாட்சாத்பகவானே வகுத்தருளிய தெய்வீகத்தன்மை பொருந்திய அமிழ்தினுமினிய தமிழ்ப்பாஷையானது எமது சாகியத்தார்க்கிடையில் தனது உன்னத நிலைகுலைந்து தட்டித்தடுமாறித் தத்தளிக்கும் இவ்வன்னிய பூமியிலே நாடகத்தமிழின் வாயிலாக எமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையை ஆதரித்து வருகின்றேம். எமது வித்பாதுரர்கள் இற்றைவரை ஏறத்தாழ ஐம்பது நாடகங்களை மலாயாவின் பிரதம ஸ்தானங்களில் நடித்துக்காட்டியுள்ளார். இந்நாடகங்களில் அநேகம் சபாவின் ஊதியத்தைக் கருதாது வேறு தர்ம கைங்கரியங்கட்காகவே நடிக்கப்பெற்றிருக்கின்றன.

சென்ற வருடம் எமது பழைய மாணவிகளுட் சிலர் சங்கீதப் புராதனம் வாய்ந்த தமிழ்நாடாகிய யாழ்ப்பாணத்திலே சில சங்கீத காலாட்சேபங்களை நடாத்தியுள்ளார். அக்கச்சேரிகட்குச் செவிசாற்றியோரும், அவ்விடத்தேயுள்ள புதினப் பத்திராதிபர்களும் மாணவிகளின் விசேட தேர்ச்சியைப்பற்றி நிரம்பவும் வியந்து கூறியுள்ளார்கள்.

இற்றைக்குச் சில காலத்திற்கு முன் எமது சபாவின் பிரதிநிதி ஒருவரைச் சங்கீதமானது தனது உன்னத நிலையில் விளங்கும் தென் இந்தியாவிலுள்ள சங்கீதக் கல்லூரிகளிற் கற்பிக்கும் முறையைக் கிரகித்து வந்து அறிவிக்குமாறு அனுப்பியிருந்தேம். அவர் அம்மாநகர் சென்று அவ்விடத்தேயுள்ள சங்கீதக் கல்லூரிகளையும், பிரபலம் வாய்ந்த சங்கீத வித்துவான்களையும் சந்தித்து அவர்கள் கையாண்டுவரும் விசேட முறையைக் கிரகித்துவந்துள்ளார். தற்சமயம் அம்முறைகளையே எமது சபாவில் அநுசரித்து வருகின்றேம்.

சென்ற வருடம் தென் இந்திய பிரபல சங்கீத வித்துவானாகிய ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியஐயர் அவர்கள் எமது சபாவிற்கு விஜயஞ்செய்து நாம் சங்கீதத்தைக் கற்பிக்கும் விசேட முறையையும், எமது மாணவர் அடைந்துவரும் மனோதர்ம ஞான தேர்ச்சியையும்பற்றி இறம்பவும் பாராட்டியுள்ளார்.

இடையிடையே குவாலாலம்பூருக்கு விஜயஞ்செய்யும் சங்கீத அறிஞர்களை வரவேற்று, உபசரித்து, ஆதரிக்குந் தொண்டையும் ஆற்றிவருகின்றேம.

தற்சமயம் எமது சபாவானது குவாலாலம்பூரிலே இருசங்கீதப் பாடசாலைகளை நடாத்திவருகின்றது. வருடந்தோறும் பரீட்சை வைத்துச் சித்தியெய்தும் மாணவர்க்குத் தராதலப் பத்திரம் வளங்கிவருகின்றேம்.

இதுகாறும் சபாவின் ஊதியத்தை நோக்காது, சங்கீத அபிமான பரோபகார சிந்தையோடு வாவிற்கேற்ற செலவோடமையக் குறைந்த கிரயத்தில் சங்கீதத்தைப் பயிற்றிவந்திருக்கின்றேமாதலின் அதிக க்ஷேம நிதியைப் படைத்தேமல்லேம்.

நிர்வாகசபையார் இச்சபாவை இராசாங்கத்தின் ஆதரவில் ஓர் பகிரங்க கல்லூரியாக்கி, மலாயாவின் பல பாகங்களிலும் சங்கீதங் கற்போரெல்லாம் இக்கல்லூரியிற் பரீட்சை பெற்றுத் தராதலப்பத்திரம் பெறுவதற்கும், சங்கீதக்கலையை இம்மலாயாவில் உன்னதநிலைக்குக் கொண்டுவருவதற்கும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்குப் பிரயத்தனப்பட்டுவருகின்றனர்.

சபாவிற்கு ஓர் சொந்தமான நிலயத்தை அமைப்பதற்கு நிதி சேர்ப்பதற்காக இன்று இச்சங்கீத காலாட்சேபத்தை இவ்விடத்தில் நடாத்துகின்றேம்.

சபாவின் நன்னோக்கத்தை ஈடேற்றுவான் பொருட்டு உங்கள் சிரமத்தைப் பாராட்டாது உங்கள் காருண்யம் நிறைந்த ஆதரவை இன்று எங்கட்களித்ததற்காகச் சங்கீத அபிவிருத்திச் சபாவின் சார்பில் உங்கள் ஒவ்வொருவருக்கும் இன்னுமோர் முறை எனது மனப்பூர்வமான நன்றி பாராட்டலை இறம்பவும் விநயத்துடன் சமர்ப்பிக்க அங்கீகரிக்குமாறு வேண்டிநிற்கின்றேன்.

—கடித.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இலக்கம் 7468

புன்னாலைக்கட்டுவன் 1. தம்பாப்பிள்ளை—துரையப்பாவும், 4. பெண் சின்னத்தங்கமும் வழக்காளிகள்

கட்டுவன் 1. காசிநாதர்—இளையதம்பி எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 7468-ம்இலக்க வழக்கில் 1936-ம் ஹூ மாசி மீ 19-ந் தேதியைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்சப்பட்டிருக்கும் காணிகள் 1936-ம் ஹூ பங்குனிமீ 21-ந்தேதி சனிக்கிழமை முற்பகல் 8-மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு எழாலை இறை "சிலும்பிலானை" யும் (Silumbilanai) "துலையிட்டி" (Thulayidy) யும் பரப்பு நிலை இலாச்சம் 60. இதில் தென்கிழக்குப் புறமாக பரப்பு நிலை இலாச்சம் 20, கிணறும், பனைகளும், செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு தில்லையம்பலம் பெண் பூரணத்தினுதனம் வடக்கு இளையதம்பி பெண் அன்னம்மாவின் ஆதனம் மேற்கு விஞசித்தம்பி பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளையினதும் பங்காளருடையவும் முத்தையா பரமசாமி ஐயரினதும் ஆதனங்கள், இதில் மறு காணிகளுக்குரிய கிணற்றுப்பங்கும் வாய்க்கால்வழியும் 13 தென்னைமரங்களும் பிறநீங்கலாக மிகுதியில் சொரியலாய் அரைவாசி.

2. ஷெ கட்டுவன் இறை "சூளியவுடை" (Sooliyavudai) பரப்பு நிலை இலாச்சம் $22\frac{1}{4}$ லும் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு றோட்டு வடக்கு விஞசித்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்கும் கந்தையா பெண் அன்னமுத்துவுக்கும் சகோதரிக்குரிய ஆதனங்கள் மேற்கு எதிராளியின் ஆதனம் தெற்கு குலந்தையர் பெண் சின்னம்மாவுக்கும் சின்னத்தம்பி கந்தருக்கும் எதிராளிக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் $12\frac{1}{4}$ பரப்பும் அதற்குரியவைகளும் சொல்லப்பட்ட கிணற்றடியில் நிற்கும் 4 தென்னமரங்களின் முழு உரித்தும்.

3. ஷெ கட்டுவன் இறை "காடுற்றவத்தை" (Kaduttavattai) பரப்பு நிலைஇலாச்சம் 5 ம் எல்லை கிழக்கு தெரு வடக்கு எதிராளியின் ஆதனம் மேற்கு சின்னத்தம்பி கந்தரின் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி காசிநாதரின் ஆதனம். இவ்வெல்லைகட்குட்பட்ட அடங்கலும். மேற்சொல்லிய இரண்டாம் காணியில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வாய்க்கால் வழி உரித்தும்.

4. ஷெ கட்டுவன் இறை "களையிட்டி" (Kllalyiddy) பரப்பு நிலைஇலாச்சம் 9ம் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் புளியமாமும் வேம்பிற் பங்கும் பனைகளும் செய் யிர்களும் வீடும்.

எல்லை கிழக்கு காசிநாதர்கைம்பெண் தெய்வானையினதும் பங்காளருடைய ஆதனமும் வடக்கு காசிநாதர் செல்லப்பாவினதும் பங்காளருடையவும் ஆதனம். மேற்கு மாரிமுத்து கதிர்காமருக்கும் பங்காளருக்கும் உடைய ஆதனம். தெற்கு காசிநாதர் மாரிமுத்துவுக்குரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

5. ஷெ கட்டுவன் இறை 'வன்னியன் சீமா" (Vannianseema" பரப்பு நிலை இலாச்சம் $2\frac{1}{2}$யும் பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கு நல்லதம்பி பெண் பாக்கியத்துக்கும் வடக்கு வயித்தி பெண் கறுப்பாத்தைக்கும் மேற்கு செல்லப்பா பெண் சீதேவனுடையதும் தெற்கு கனகசபை பெ வள்ளிப்பிள்ளையினதும் ஆதனங்கள் இவ்வெல்லைக்குட்பட்ட அடங்கலும்.

6. ஷெ கட்டுவன் இறை "நுணுவோலை" (Nunavollai) பரப்பு நிலை இலாச்சம் 6 பனைகளும் எல்லை கிழக்கு மாரிமுத்து காசிநாதரினதும் வடக்கு விசுவர் வேலுவினுதனமும் மேற்கு தில்லையர் மாப்பாணியினதும் தெற்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளையினதும் ஆதனங்கள் இவ்வெல்லைக்குட்பட்ட அடங்கலும்.

7. ஷெ கட்டுவன் இறை "நெட்டிலெய்சிட்டி" (Neddilaisiddi) பரப்பு நிலை இலாச்சம் 6 குளி 13-ம் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றிலும் வாய்க்கால் வழியில் பங்கும் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கு தெரு வடக்கு சின்னத்தம்பி-கந்தரினதும் பங்காளருடைய ஆதனமும் மேற்கு செல்லப்பா பெண் சின்னத்தங்கத்தினுடைய ஆதனமும் தெற்கு சின்னத்தம்பி பெண் தங்கம்மாவின் ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட அடங்கலும்

யாழ்ப்பாணம், 1936-ம் ஹூ மாசி மீ 23உ

C. Kandiah Chettiar,

(91) 1-3-36. கொமிஷனர்.

---

### கானில் விழுந்த கார்

ஸ்ரீமதி எவ். ஆர். செனநாயகாவும் அவரது மகளாகிய ஸ்ரீமதி சிரிபாலசமரக்கொடியும் பலாங்கொடைத் தேர்தல் சம்பந்தமாகப் பலாங்கொடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிச் செல்லுகையில் மோட்டார்வண்டி தெருவிலிருந்து வழுக்கிக் கானில் விழுந்தது. அதிலிருந்தவர்கள் சிறிய காயங்களுடன் தப்பிக்கொண்டனராம்.

### மலாயாவில் இந்தியர்களுக்குத் தடை.

ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ் பத்திரிகை சீனு, இந்தியா, இலங்கை முதலிய தேசங்களிலிருந்து கடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேலைக்காக மலாயாவுக்கு வருகிறார்கள் என்றும் மலாய் நாட்டினர் மற்ற நாட்டினரைப் பின்பற்ற வேண்டுமென்றும், கூலிகள் தொழிலாளர்கள், யாத்ரீகர்கள் தவிர மற்றவர்களை மலாயாவில் அனுமதிக்கக்கூடாதென்றும் எழுதியிருக்கிறது.

---

### விளம்பரம்

கதிரமலையி லுறைகின்ற கதிர்வேலே! நினது திருவடி அடையவருகின்ற பக்தகோடிகளுக்குத்தொண்டுபுரிவதற்காக விடையளித்தாய். 1927-ம்ஆ மாணிக்ககங்கையி லிருந்து கதிரமலை சிகரம்வரை றோட்டைத்திறக்க கதிர்வேலே! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுட்தொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற்பொருட்டு கதிரமலைச்சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குளமமைக்கும்பொருட்டும் விடைதந்தாய்' அத்திருக்குளத் திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாண வாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம் இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக்குறைவினுலும் ஒருவரும் பணந்தாராதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாலும் கதிர்வேலே ஈகின்றுரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திடமுண்டு. இதற்குப் பணமனுப்பும் விலாசம்:

ரமணசங்குசாது,

திசைமாறு போஸ்ட்.

(81) 9-2-36–12-4-36

---

### கல்கத்தாவில் 4000 பிச்சைக்காரர்.

கல்கத்தாவில் மொத்தம் 4000 பிச்சைக்காரர்களிருக்கின்றனர். இவர்களில் 400 பேர் குருடர்கள், 1000 பேர் குஷ்டரோயாளிகள். 600 பேர் இதர வியாதியினல் பீடிக்கப்பட்டவர்கள். மீதியுள்ள2000 பேர்கள் நல்ல தேக நிலைமையுடனிருப்பவர்கள்.

---


## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50. றாத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரிலவந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தணம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை, சாம்பிறுணிப் பதங்சம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சாக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விருப்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்:

ஆ. இராசையா,

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.


---

### வாரபூசையால் வரும்பலன்

எல்லா வுலகங்கட்கும் பிரபுவும், எல்லாமறிந்தவரும், பரமதயாளுவுமாகிய பரமசிவன் சகலலோகங்களுக்கும் உபகாரமாக வாரங்களை யுண்டுபண்ணினர். சமுசாரரோக வைத்தியராகிய அந்தப் பகவான் அவ்வுரோகத்திற்கு அவிழ்தம் போன்ற தன் தினத்தையும் (ஞாயிறு), சம்பத்தை உண்டுசெய்யுந் தேவியின் தினத்தையும் (திங்கள்), ஆலசியம் பாவமாதிய வற்றைப் போக்கவும் வியாதியைப் போக்கவும் சுப்பிரமணியருடைய தினத்தையும் (செவ்வாய்), உலகங்களுக்கு இதஞ்செய்யவிரும்பி விஷ்ணு மூர்த்தியின் தினத்தையும் (புதன்), சம்பத்து ஆயுள் முதலியன விருத்தியாகும்படி உலகங்களைச் சிருட்டிசெய்யும் பிரமாவின் தினத்தையும் (வியாழன்) மூன்றுலகங்களையும் விருத்தியாகச்செய்யும் புண்ணியாதிகாரிகளான இந்திரன் ஆதியவர்கள் சுகத்தைக் கொடுப்பதாயுள்ள தினத்தையும் (வெள்ளி) மிருத்தியவை நாசஞ் செய்வதாயு மிருக்கிற தினத்தையும் (சனி) உண்டுபண்ணிச் சுகம் திக்கமாதிய வற்றைப் பிரகாசிக்கச் செய்பவர்களாயிருக்கிற சூரியன் முதலானவர்களை அவ்வாரங்கட்கதிபர்களாகச் செய்தனர். ஆதலின் அவ்வாரங்களில் அவ்வதிபர்களைப் பூசை செய்து அவ்வப்பலனை யடையவேண்டும்.

சுகம்: சம்பத்து, வியாதி, நிவாரணம், புஷ்டி, ஆயுள், போகம், மிருத்தியுவின்மை ஆதியபலன்களைக் கொடுக்கும்- வாரபலன்களையறிந்து பூசைசெய்யவேண்டியது. வேறு தேவர்களைப் பூசித்தாலும் சிவபெருமானே அந்தப்பலனை யெல்லாங் கொடுப்பார். தேவர்களுக்குத் திருப்தியுண்டாவதற்காகப் பூசையில் மந்திரம் ஜபம் ஓமம் தானம் தவமென்று ஐவகைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆதிவாரத்தில் விசேஷ பலனுடைய வஸ்துவைச் சூரியனுக்கும் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் கொடுப்பதாற் பாவமொழியும். சோமவாரத்தில் மகாலக்ஷிமியைப் பூசித்தாற் சம்பத்துண்டாகும். தம்பதிகளான அந்தணருக்கு நெய்யோடு கூடிய அறுசுவை பொருந்திய அன்னத்தாலும் திருப்தி செய்தல் வேண்டும். மங்களவாரத்திற் பால்யர் முதலானவர்களைப் பூசித்தால் ரோகமொழியும். பிராமணர் வடைதோசை முதலியவற்றுடன் கூடிய விசேஷ பக்ஷபோஜ்சயங்களால் திருப்தி செய்தல் வேண்டும். புதவாரத்தில் விஷ்ணு மூர்த்திக்குத் தயிர்சேர்த்த அன்னத்தை நவேதனஞ் செய்தவனுக்குப் புத்திரன் சிநேகன் மனைவி முதலியவர்களோடு செல்வமும் பெற்று வாழ்வுண்டாகும். ஆயுளை விரும்பினவன் குருவாரத்திற் புஷ்டியுண்டாவதற்காகச் சகல தேவர்களுக்கும் உபவீதம் வஸ்திரம் இவற்றைப் பிரீதி செய்து பால்நெய்முதலிய வற்றை நிவேதனஞ் செய்யவேண்டும். சுகத்தையேஅபேட்சித்தவன் சுக்கிரவாரத்தில் மந்திரஜபமும் தியானமுஞ் செய்யவேண்டும். பிராமணர்களுக்கு அன்னமளித்துப் பிராமணஸ்திரீகளுக்கும் வஸ்திரதான முதலியவற்றைச் செய்யவேண்டும். அபமிருத்யுவை யொழிக்கச் சனிவாரத்தில் உருத்திரர், ஐயனர் முதலிய தேவர்களைப் பூசித்துத் திலதானமும் திலான்னமும் பிராமணருக்குக் கொடுக்கவேண்டும். இப்படி வாரபூசையைச் செய்து ஆரோக்கியமுதலிய வற்றையடையலாம்.

திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் இவற்றில் எதிலாவது எந்தத்தேவரைப்பூசை செய்தாலும் சிவப்பிரீதியேயாம். எப்படியென்றாற் சிவபெருமானே அந்தந்தத் தேவதாஸ்ரூபமுடையவராயிருந்து அவற்றைப்பெற்று அவ்வவ்வபீஷ்டங்களைக் கொடுத்தலினென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஒருகருமத்தைத் தொடங்கிய ஒருவன் அதற்கு விக்கினம்வாராதபடி ஆதித்தன் முதலிய கிரகங்களைப் பூசைசெய்ய வேண்டும். ஆதலால் தேவபூசையே சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும். விசேஷ பலனடைய விரும்புகிறவர்கள் ஏழுவாரங்களிலுந் தங்கள் சக்திக்குத்தக்கபடி பூசையாதியன செய்ய வேண்டும்.

கருணனந்தர்.

---


### கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய சிரேட்ட பாடசாலைத் தராதரபத்திர வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 Chunnakam, Jaffna, 1st March 1936, Sunday. No. 33

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்.

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாசங்களுக்குச் செலுத்தி ரூபாய் 300 பெறமுன் வாருங்கள்.

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்துவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றோம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்துவம் பெற விரைந்து வாருங்கள். தாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்கட்கு கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

*Manager*

**LANKA BENEFIT CO.,**

Vannarponnai

(175) 5-8-34.

திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.


கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும்போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

# SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு
வடக்குப்பக்கமாக்விருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்
பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய
இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும்,
வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்
பென்சில், பேனா முதலியனவும், கோப்பி (Ex. Copy)
கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான
எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் வருடம் மார்ச் மீ 1-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.